


# உதயன்

www.onlineuthayan.com

24 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 335 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (26/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


# தமிழரின் மீள்குடியமர்வில் ஐ.நாவுக்கு திருப்தியில்லை

## விசேட மனித உரிமை அதிகாரி சாக்லோகா பியானி கருத்து

ஜெனிவா, ஒக்ரோபர் 26

போரின் பின்னர் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளபோதும் இலங்கையின் வடக்குப் பகுதியில் அரசினால் மேற்கொள்ளப் பட்டு வரும் இடம்பெயர்ந்தோரை மீளக்குடிய மர்த்தும் நடவடிக்கையில் தொடர்ந்தும் திருப் தியற்ற நிலை உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது. மனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு கேப்பாபி லவைச் சேர்ந்த 110 குடும்பங்கள் அங்கிருந்து அவசர அவசரமாக ஏற்றிச்செல்லப்பட்டு முல்லைத் தீவு நந்திக்கடல் அருகே சூரியபுரம் காட்டுப் பகுதி யில் எவ்வித வசதிகளும் இன்றி அநாதரவாக விடப்பட்டுள்ள நிலையில் ஐ.நா. இந்த அதிருப் தியை தெரிவித்திருக்கிறது.

பார்க்க பக்கம் 4



## மன்னார் நீதிமன்ற தாக்குதல் சம்பவம்; 16 பேருக்குப் பிணை

மன்னார்,ஒக் 26

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர் பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளர்.

மன்னார் மேலதிக நீத வான் ஆர். திசாநாயக்க முன் னிலையில் குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன்னி லைப்படுத்தப்பட்ட போதே பிணையில் விடுவிக்க அனு மதி வழங்கப்பட்டது.

இந்த 16 சந்தேக நபர் களும் தலா 10,000 ரூபா ரொக்க பிணையிலும் தலா 500,000 ரூபா சரீரப் பிணை யிலுமே மன்னார் மேலதிக நீதிவானால்விடுதலை செய் யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றம் மீது

பார்க்க பக்கம் 4

## மஹிந்தவின் பிறந்த நாளை கொண்டாடுமாறு நிர்ப்பந்தம்

### முல்லைத்தீவு அரச அதிகாரிகளுக்கு இராணுவம் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக் 26

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பிறந்த தின நிகழ் வையும், போர் வெற்றியின் 3 ஆவது ஆண்டு நிறை வையும் அடுத்த மாதம் கொண்டாடுமாறு இராணுவத் தினர் முல்லைத்தீவு அரச அதிகாரிகளை கடுந்தொனி யில் நிர்ப்பந்தித்துள்ளதாகத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த 23 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கலந்

பார்க்க பக்கம் 4

## தீர்வு இழுத்தடிப்புக்கு கூட்டமைப்பே பொறுப்பு

### அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

கொழும்பு,ஒக் 26

, நாட்டின் தேசிய பிரச்சி னைக்கான தீர்வு இழுத்த டிக்கப்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பேற்க வேண்டுமெ னத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று வியாழக் கிழமை முற்பகல் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்

பார்க்க பக்கம் 4


மத்திய அமைச்சரவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாற்றியமைக்கப்பட வுள்ளது. இதன்போது தற்போது அமைச்சராக இருப்பவர் பதவி பறிக்கப்பட்டு ராகுல்காந்தி அந்த இடத்தைப் பிடிக்கலாம். 8

ஹஜ் பெருநாளை முன்னிட்டு போர் நிறுத்தத்தை மேற்கொள்ள சிரியா இணங் கியுள்ளதாக ஐ.நா. அமைதித் தூதர் லக்தர் பிராஹிமி தெரி வித்துள்ளார். 9

அமெரிக்க ஜனா திபதி பராக் ஒபாமா - மிச்செல் இரு வரும் 2000 ஆம் ஆண்டு விவாகரத்துச் செய்வதற்கு பத்திரம் தயார் செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது. 10

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்படமாட்டாது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிக்கிறார் 17


## கூட்டமைப்புடனான சந்திப்பில் அரசியல் நோக்கம் இல்லை

### குடாநாட்டில் சீனத் தூதுவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு சம்பிர தாயபூர்வமானதே தவிர அரசியல் நோக்கம் கொண்டதல்ல என தூதுவர் டபிள்யூ.யங்கோ தெரிவித்தார்.

சீனத்தூதுவர் ஒரு நாள் பயணமாக யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்திருந்தார்.

பார்க்க பக்கம் 4

## மஞ்சள் கடவையில் பெண்ணை மோதிக் கொன்றவருக்குச் சிறை

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

வவுனியா, ஒக்.26

வவுனியா நகரில் பாதசாரிகள் கடவை (மஞ்சள் கடவை) ஒன்றில் கனரக வாகனம் (டிப்பர்) ஒன்றைக் கவனவீனமாகச் செலுத்தி பெண் ஒருவரின் உயிரிழப்புக்குக் காரண மாக இருந்த நபர் ஒருவருக்கு இரண்டு வருட சாதாரண சிறைத்தண்டனையும், 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்தி ரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

ஏ-9 வீதியின், வவுனியா வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள பாதசாரிகள் கட

பார்க்க பக்கம் 4

## இரவிலும் பகலிலும் கனவிலும் அரசுக்குச் சூழ்ச்சியே தெரிகிறது

### இது ஒரு மனநோய் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஒக் 26

இரவிலும், பகலிலும், கனவிலும் இந்த அரசுக்கு, சூழ்ச்சி தான் தெரிகிறது. அது ஒரு வகையான மனநோயாகுமென்று ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திமால் வீரக் கொடி தலைமையில் கூடியது, வாய் மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது சிறந்த பாடசாலைகள் கருத்திட்டம் தொடர் பில் கல்வியமைச்சிடம் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார கேள்விகளை எழுப் பியிருந்தார்.

பார்க்க பக்கம் 4

## வடக்கு தேர்தலை தடுக்க ‘13’ஐ அகற்றுகிறது அரசு

கொழும்பு,ஒக் 26

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தன்னால் வெல்ல முடியாது என்பதை நன்கு தெரிந்துகொண்ட அரசு வடக்கில் தேர்தல் நடத்து வதை தவிர்ப்பதற்காக 13

பார்க்க பக்கம் 4

## அளவுக்கதிகமான அரசியல் தலையீட்டால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திணறல்

யாழ்ப்பாணம், ஒக். 26

தமிழர்களின் அடையா ளமாகவும் பெருமையாகவும் விளங்கும் அதியுயர் கல்வி நிலையமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தற்போது அளவுக்கு அதிகமான அரசியல் தலையீட்டால் நிர்வாக ரீதி யாகத் திணறிவருகின்றது.

கடந்த மூன்று தசாப்தங் களில் இல்லாத வகையில் பல்கலைக்கழக நிர்வாகத் துக்குள் அளவுக்கு அதிக மான அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக் கழகச் சமூகம் சீற்றத்துடன் உதயனிடம் தெரிவித்தது.

“முன்பிருந்த எந்தவொரு துணைவேந்தரின் காலத்தை யும்விட இப்போது நிர்வாகத் தில் அரசியல் தலையீடு அதி கமாகிவிட்டது. துணைவேந் தரை நியமித்ததிலும் அரசியல் தலையீடுகள் அதிகம் இருந் ததால் இப்போது நிலைமை கட்டுமீறிப் போய்விட்டது” என்று பேராசிரியர் ஒருவர்

பார்க்க பக்கம் 4

## கே.பி. பற்றிய முழுத் தகவலையும் ‘இன்ரர்போலு’க்கு வழங்குங்கள்

### பொலிஸ்மா அதிபருக்கு ஜயலத் கடிதம்

கொழும்பு,ஒக் 26

சர்வதேச ரீதியில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட தீவிர வாதி என்று சர்வதேச பொலி ஸாரால் (இன்ரர்போல்) தேடப்படும் கே.பி. என்ற கும ரன் பத்மநாதனின் அனைத் துத் தகவல்களையும் அவர்க

பார்க்க பக்கம் 4


உதயன்
இணைய வானொலி
www.uthayanradio.com
உங்கள் நிகழ்வுகளை
உலகறியச் செய்திடுங்கள்..........
செய்திகளை உடனுக்குடன் தெரிவிப்பதில் முன்னோடிகளான உதயன் இணைய வானொலியில் உங்கள் பகுதியில் இடம் பெறும் நிகழ்வுகளை வானலை வழியாக உங்கள் உறவுகளின் செவி சேர்க்க அழையுங்கள் 021 567 2222
உண்மைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
உதயன்
இணைய வானொலி
www.uthayanradio.com
நேயர் விருப்பம் | வாழ்த்துக்கள் | எம்மவர் பாடல் | உதயகீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெண்கள், சிறுவர்கள் மீது குற்றங்கள்; இது தான் மஹிந்தரின் புனித சமூகமா?

## சபையில் நேற்று சஜித் ஆவேசம்

ஒழுக்கமிக்க புனிதமான ஒரு சமூகத்தை உருவாக்குவோம் என ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை கூறுகின்றது. ஆனால் இங்கு தான் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்களும், மகளிர் மீதான பாலியல் வன்முறைகளும் அதிகரித்துள்ளன. இதனை அரசினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களே ஊர்ஜிதப்படுத்துகின்றன. இது வெட்கக்கேடான ஒரு செயல் என்று ஐ.தே.க. பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசா நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் நேற்று சபை நடவடிக்கைகள் ஆரம்பமானபோது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது சஜித் இதனை சுட்டிக்காட்டினார்.

''முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் சட்ட விரோதமான முறையில் மிதமிஞ்சிய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. இவற்றை தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்று சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார் சஜித் பிரேமதாசா.

**சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மகளிர் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை**

இக் கேள்விக்குப் பதில் அளித்த பிரதி அமைச்சர் எம். எல்.எ.எம். ஹிஸ்புல்லா , இளம் பராய சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மகளிர் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுக்கவும் இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பிரதி அமைச்சர் கூறினார்.

**மஹிந்த சிந்தனையின் ஒழுக்கமிக்க புனித சமூகமா?**

அமைச்சர் கூறுகின்றார் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பாக கடுமையான சட்டம் இருக்கின்றது என்று. ஆனால் அண்மைக்காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் 17.9 வீதத்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 5.6 வீதமாகவும் அதிகரித்துள்ளன.

நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இப்படியான குற்றச் செயல்கள் அதிகரித்தது எப்படி. இது தான் உங்கள் மஹிந்த சிந்தனையின் ஒழுக்க மிக்க புனிதமான சமுதாயமா என்று கேள்வி கேட்டு ஹிஸ்புல்லாவை மடக்கிவிட்டார் சஜித் பிரேமதாச

மில்கோ நிறுவனத்துக்கு பல கோடி இலாபம் நாட்டிலோ குழந்தைகளுக்கு பால்மா இல்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுள் ஒருவரான ரவி கருணாநாயக்க கால்நடை அபிவிருத்தி அமைச்சரிடம் மில்கோ நிறுவனம் தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பினார். கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பில் இயங்கும் வரையறுக்கப்பட்ட மில்கோ நிறுவனத்தின் வருடாந்த ஆதாயம் மற்றும் அதற்கு வழங்கப்படும் மானியங்கள் என்ன என்றும் கேட்டார்.

இக் கேள்விக்கு பிரதி அமைச்சர் மித்திரபால பதில் அளிக்கும்போது, மில்கோ நிறுவனம் வருடா வருடம் பல கோடி ரூபாக்களை இலாபமாகப் பெற்றுள்ளது. அதே வேளை பல கோடி ரூபாக்களை அரசுக்கு வரியாகவும் செலுத்தியுள்ளது என்று கம்பீரமாக பதிலளித்தார்.

'' கனம் கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே, இந்த பிரதி அமைச்சர் கூறுகின்றார் மில்கோ நிறுவனம் பெருமளவு பால் உணவுகளை உற்பத்தி செய்கின்றது, பல கோடிகளை வருமானமாகப் பெறுகின்றது என்று பெருமையடிக்கின்றார்.

ஆனால் தினசரி பல குழந்தைகள் மந்த போசாக்கினால் உயிர் இழக்கின்றனர். இந்த நிலையில் மில்கோ நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க முடியாதது ஏன். நாட்டின் நிலைமை இப்படி இருக்க வெளிநாடுகளில் இருந்து கூடிய விலைக்கு பால் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது ஏனென்று இடைக்கேள்வி ஒன்றை எழுப்பினார் ரவி கருணாநாயக்க

இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்காத பிரதி அமைச்சர் பால்மா இறக்குமதி தொடர்பாக வர்த்தக அமைச்சரிடம் கேளுங்கள் என்று கூறி அமர்ந்துவிட்டார் பிரதி அமைச்சர்.

**அரசுக்கு நினைவிலும் கனவிலும் சூழ்ச்சிதான்**

ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க, '' சிறந்த பாடசாலைகள் அபிவிருத்தி திட்டம்'' தொடர்பாக கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

சிறந்த பாடசாலைகள், ஆயிரம் பாடசாலைகள், நவோதய பாடசாலைகள் என பல கருத்திட்டங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பட்டியலையும், ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும் கூற முடியுமா என்றும், அதனால் ஏற்பட்ட அபிவிருத்தியையும் வெளிப்படுத்துவாரா? என்றும் கேட்டார்.

இந்த கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காத பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா, எல்லாம் இந்த ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியினால் தான் இலங்கையில் கல்வி நிலை மோசமானது என்றார்.

ஐயோ கடவுளே இந்த அமைச்சர்களுக்கும் அரசாங்கத்திற்கும் கனவிலும் நினைவிலும் தெரிவது எல்லாமே சூழ்ச்சிதான். சூழ்ச்சி என்ற பதம் இன்று அரசின் தாரக மந்திரமாகி விட்டது என்றார் அநுரகுமார.

**பிரதி சபாநாயகர் உட்பட அனைவரும் சிரித்துவிட்டனர்.**

**சபைக்கு வந்த கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையம்**

எதிர்க்கட்சி உறுப்பினர் அஜித் பி.பெரேரா மின்வலு எரிசக்தி அமைச்சரிடம், இந்தியா தமிழ் நாட்டில் கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்தினால் இலங்கையின் சூழல் சுற்றாடல்களுக்கு பாதிப்பு ஏற்படுமா அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்று கேட்டார்.

பாதிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பதை உடனடியாக கூறக்கூடிய நிபுணத்துவம் எனக்கு இல்லை. ஆனால் என்னை மேற்கோள்காட்டி பல மாறுபட்ட செய்திகளை திரித்து வெளியிட்டுள்ளனர் என்றும் இது தொடர்பான நீண்ட விளக்கத்தையும் அளித்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கேள்வி நேரத்தின் பின் நாடாளுமன்றத்தின் அமர்வுகள் இடைநிறுத்தப்பட்டு நீதித்துறையில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெற்




றது.

ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க விவாதத்தை சபையில் முன்மொழிந்து உரையாற்றினார்.

**நீதியா நிறைவேற்று அதிகாரமா?**

இன்று நாட்டில் நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான பலப்பரீட்சை தலைதூக்கியுள்ளது. அதிகாரம் நீதித்துறையை கட்டுப்படுத்த முனைகின்றது. நாட்டு மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண பட்டப்பகலில் தாக்கப்பட்டார். ஆனால் இன்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார் அநுரகுமார திசாநாயக்க

**18 ஆவது திருத்தம் ஒரு சாபக்கேடு**

இப் பிரேரணையை வழிமொழிந்து பேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும்நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ,இந்த நாடாளுமன்றத்தில் 18 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது நாட்டிற்கே ஏற்பட்டஒரு சாபக்கேடு என்று விமர்சித்தார். நிறைவேற்று அதிகாரத்தின் உச்ச கட்ட நடவடிக்கையாக 17 ஆவது சட்டம் ஒழிக்கப்பட்டு நீதித்துறையின் சுயாதீனம் ஒழிக்கப்பட்டது. இதனாலேயே இன்று ஊழல் மோசடிகள் அதிகரித்துவிட்டன என்றும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட இந்த பிரேரணை மீதான விவாதம் சபையில் பெரும் சூட்டைக் கிளப்பி விட்டது. எதிர் தரப்பினரின் குற்றச் சாட்டுக்கள் ஆளும் தரப்பினரை தடுமாற வைத்துவிட்டது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஆளும் தரப்பினர் விவாதம் செய்தனர்.

முன்பு ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் போது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள், நீதிவான்கள் வீட்டை தாக்கியமை, கல்லெறிந்தமை தொடர்பாக தமது பங்குக்கு சேற்றை வாரி வீசினார்.

எதிர்க்கட்சியினரும் சிறிதும் சளைக்காமல் மன்னார் நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்தியமை, நீதிச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் தாக்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ரங்கா சவால்**

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட பிரஜைகள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஜெய. சிறிரங்கா நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு நேரடியாகவே சவால் விடுத்தார்.

அதாவது (பட்டாணி) ராப்பிக் என்பவர் படுகொலை செய்யப்பட்டு ஏழு மாதங்கள் கடந்துவிட்டன. அவரை கொலை செய்தவர் யார்? இக் கொலைச் சூத்திரதாரி யார்? என்ற விடயங்களை நீதியமைச்சருக்கு உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேக நபர்களை இதுவரை ஏன் கைது செய்யவில்லை இதற்கான பதிலை இப்போது இங்கு கூறினால் நான் எனது பேச்சை இத்துடன் நிறுத்தி கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நீதியமைச்சர் அருகில் அமைச்சர் ரிசாத் பதியூதீன் அமர்ந்து இருந்து எதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்

ரங்காவின் கேள்விக்கு நீதியமைச்சரிடம் இருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை இதனால் தொடர்ந்து பேசிய ரங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் சீறிப் பாய்ந்தார்.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தான் சொல்லாத கதை ஒன்றை ரிசாத் பதியூதினிடம் கூறியுள்ளார். அது தவறு அப்படி ஒரு எண்ணம் எனக்கு இல்லை என்று ஆரம்பித்த ரங்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்போதுமே அதி முக்கியமான சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றிலில் இருந்து நழுவி விடுவது வழமை.

இன்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று இருப்பதாகக் கூறி இந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் நீதிமன்றில் மூன்று வழக்குகள் உள்ள ஐ.தே.க உறுப்பினரான சுசீத கேரசிங்க இங்கு கல்ந்து கொண்டுள்ளார்.

அதேபோன்று வெளி விவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸுக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்றை கொண்டு வந்த போதும் கூட்டமைப்பினர் மெதுவாக நழுவி விட்டதும் குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிட்டார். தொடர்ந்து ரங்கா பேச முற்பட்டபோது அவரின் நேரம் முடிந்து விட்டதாக கூறி அவரது பேச்சு இடை நிறுத்தபட்டது.

தொடர்ந்து நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளிக்க எழுந்தார். அந்த நேரம் முதல் சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும். ஐ.தே.க உறுப்பினர் அஜித் பெரேரா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கிளப்பினார் ஆனால் ஆளும் தரப்பினர் அதற்கு இடமளிக்காமல் கூச்சலிட்டதனால் சபையில் ஒரே சத்தம்.

அமைச்சர் என்ன பேசுகிறார் என்ன சொல்கிறார் என்பதே புரியவில்லை இக் குழப்பங்களுக்கு இடையில் அமைச்சர் தனது பேச்சை முடித்துக் கொண்டார். நாடாளுமன்றம் மீண்டும் நவம்பர் 6 ஆம் திகதி கூடும்.

# கூடங்குளத்தால் இலங்கைக்கு நேரடிப் பாதிப்பு ஏற்படாது!

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கூடங்குளம், அணுமின் உற்பத்தி நிலையத்தால் இலங்கைக்கு நேரடியான பாதிப்பு ஏற்படுமா இல்லையா என்பதை என்னால் கூறமுடியாது. அதற்கான பாண்டியத்தியமும் எனக்கில்லை என்று எரிசக்தி மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை, தன்னை மேற்கோள் காட்டி ஆபத்துகள் ஏற்படும் என்று சில ஊடகங்களும், பாதிப்பு ஏற்படாது என்று சில ஊடகங்களும் செய்திகளைத் திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது ஐ.தே.க. உறுப்பினரான அஜித் பி. பெரேரா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

இந்தியா, தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையம் ஒன்று நடைமுறையில் இருக்கின்றது. இந்த அணுமின் உற்பத்தி நிலையத்தால் எமது நாட்டுக்கு ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா? அப்படி ஏதும் பாதிப்பு ஏற்படின் எமது சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள முன் பாதுகாப்பு நடவடிக்கை என்ன? என அஜித் பி. பெரேரா கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்கு மின்வலு எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பதில் அளிக்கையில்,

கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் ஆரம்பத்தில் இரண்டாயிரம் மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். பின்னர் அது ஆறாயிரமாக அதிகரிக்கப்படும்.

கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்திற்கும், இலங்கைக்கும் இடையிலான நிலப்பரப்பு நூறு கிலோ மீற்றர் தூரமாகும்.

அங்கு மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதால் இலங்கையின் சூழல் சுற்றாடல்களுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்பது மிக மிக அரிதாகவே இருக்கின்றது.

இந்த அணுமின் உற்பத்தி நிலையம் சர்வதேச அணு சக்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடனேயே அமைக்கப்பட்டுள்ளது.

எனினும், நமது நாட்டுக்கு ஏதாவது நேரடிப் பாதிப்பு ஏற்படும் என்பது தொடர்பாக நாம் முன்னெச்சரிக்கை ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனிக்குளத்தின் கீழ் 5250 ஏக்கரில் நெற்செய்கை

## விவசாயிகளுக்கு பல்வேறு அறிவுரைகள்

அக்கராயன், ஒக்.26

துணுக்காய் வவுனிக் குளத்தின் கீழ் இந்த ஆண்டுக்கான காலபோகத்தின் போது 5 ஆயிரத்து 250 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5 ஆயிரத்து 250 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வன்னிப் பிரதேசத்திலுள்ள பெரிய குளங்களில் வவுனிக்குளம் முக்கியமானதாகும். கடும் வறட்சியின் பின்னர், தற்போது இங்கு நல்ல மழை பெய்து வருவதால் இந்தக் குளத்தின் கீழ் அதிக நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, விளாங்குளத்தின் கீழ் 262 ஏக்கரிலும், பாண்டியன்குளத்தின் கீழ் 300 ஏக்கரிலும், மல்லாவி குளத்தின் கீழ் 225 ஏக்கரிலும், கல்விளாங்குளத்தின் கீழ் 400 ஏக்கரிலும் தேராங்கண்டல் குளத்தின் கீழ் 300 ஏக்கரிலும், ஐயன்கன்குளத்தின் கீழ் 952 ஏக்கரிலும், மருதங்குளத்தின் கீழ் 450 ஏக்கரிலும், தென்னியன் குளத்தின் கீழ் 850 ஏக்கரிலும், கோட்டைக் கட்டிய குளத்தின் கீழ் 405 ஏக்கரிலும், பழைய முறிகண்டிக் குளத்தின் கீழ் 356 ஏக்கரிலும், அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 623 ஏக்கரிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்தக் குளங்களுக்கான காலபோக நெற்செய்கைக் கூட்டங்கள் முல்லைத்தீவு அரச அதிபர் நா. வேதநாயகன் மற்றும் மேலதிக அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்று முடிந்துள்ளன. இந்தக் குளங்களின் கீழான விவசாயிகள் அனைவரும் புழுதி விதைப்பைத் தற்போது நிறைவு செய்திருக்க வேண்டும்.

கால்நடைக் கட்டுப்பாடு மற்றும் குளங்களின் நீர் விநியோகம், நீர் வழங்கும் கடைசிநாள், அறுவடை செய்யும் கடைசிநாள் உட்பட பல்வேறு அறிவுறுத்தல்கள் காலபோக செய்கைக் கூட்டங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (க-18)




மீள்குடியமர்ந்த முல்லைத்தீவு சுதந்திரபுரம், திருமுறிகண்டிப் பகுதிகளைச் சேர்ந்த இளம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களையும் அதன் உபகரணங்களையும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய கிளிநொச்சி அலுவலகத்தில் வைத்து நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வழங்கியபோது. (க)

### கற்றல் செயற்பாடுகள்

வவுனியா, ஒக்.26

திறந்த பல்கலைக்கழக வவுனியா நிலையத்தின் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மேற்கொண்டு வந்த பணிப் புறக்கணிப்பு காரணமாக கடந்த சில மாதங்களாக வவுனியா நிலையத்தில் கற்றல் செயற்பாடுகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது அது கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக வவுனியா திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா நிலைய இணைப்பாளர் என்.பாலமுரளி தெரிவித்துள்ளார். (க-400)

# ஊழியர் சேமலாப நிதித்திட்டம்; கிளிநொச்சியில் நடவடிக்கை மும்முரம்

## கைவிரல் அடையாளங்களைப் பெறும் பணி நவம்பர் 1இல் கரைச்சி பிரதேச செயலகத்தில்

*கிளிநொச்சி,ஒக்.26*

***கிளிநொச்சிப் பிரதேசத்தில் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் சேமலாப நிதித் திட்டம் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.***

எதிர்வரும் முதலாம் திகதி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பொது மாநாட்டு மண்டபத்தில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்டத் தொழில் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

அங்கத்தவர்கள் கை விரல் அடையாளங்களை வழங்க வரும்போது தேசிய அடையாள அட்டை, தொழில் தருநரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட கடிதம் என்பவற்றை எடுத்து வருதல் வேண்டும். மேலும் ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் இணைந்துள்ளவர்கள் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் பொருட்டு குறித்த தினத்தில் தொழில் தருநர்கள் அவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கி ஒத்துழைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை மீளளிக்கும் செயற்பாட்டை இலகுபடுத்தவும், நிதி மீளளிப்பில் மோசடிகள் இடம் பெறுவதைத் தவிர்க் கும் நோக்குடனும் இந்தக் கைவிரல் அடையாளம் பெறப்படவுள்ளதாக கிளிநொச்சி தொழில் அலுவலகத்தின் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் கே.பிரசன்னா தெரிவித்துள்ளார். (க)

# மிகவும் மோசமான நிலையில் வீதி எங்கு பார்த்தாலும் வெள்ளநீர்

## போக்குவரத்து செய்வது பெரும்பாடு

அக்கராயன், ஒக்.26

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலிருந்து அக்கராயன் அம்பலப்பெருமாள் செல்லும் வீதியை உடனடியாகப் புனரமைத்து வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி தற்போது பெய்து வரும் மழையை அடுத்து வெள்ள நீர்தேங்கி சேறும் சகதியுமாக மோசமான நிலைக்கு மாறியுள்ளது.

இந்த வீதியையே ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை, அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை, மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இந்த வீதியூடாக பஸ் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. தமது அவல நிலையை உணர்ந்து மோசமான நிலையிலுள்ள இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# அக்கராயன் துணுக்காய் பகுதிகளில் ஆரம்பமானது உர விநியோகம்

அக்கராயன், ஒக்.26

துணுக்காய், அக்கராயன் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களுக்கான உர விநியோகம் தற்போது இடம்பெற்று வருகின்றது.

கடும் வறட்சியின் பின்னர் தற்போது இந்தப் பகுதிகளில் நல்ல மழை பெய்து வருவதால் விவசாயிகள் நெற்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். சுமார் 70 வீதமான விவசாயிகள் மழையை எதிர்பார்த்து புழுதி விதைப்பை மேற்கொண்டனர். இவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போன்று மழை பெய்ததால் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளதைக் காண முடிகின்றது. தற்போது இந்தப் பயிர்களுக்கு இடும் பொருட்டு கமநல சேவை நிலையங்களில் உர விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இம்முறை அக்கராயன் பிரதேசத்தில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை துணுக்காய், பாண்டியன்

**பயிர்களின் வளர்ச்சி நல்ல நிலையில்**

குளம் பிரதேசங்களில் மொத்தமாக சுமார் 16 ஆயிரம் ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இங்கு பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் நெற் பயிர்கள் நல்ல முறையில் செழித்து வளர்ந்துள்ளதைக் காண முடிகின்றது. இதேவேளை கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாததால் பெருமழை தொடர்ந்து பெய்யுமாயின் குளக்கட்டு பாதிக்கப்படுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன் குளக்கட்டுக்குப் பாதுகாப்பை அளிக்கும் அலை கற்களும் முழுமையாக அடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை இங்கு நல்ல மழை பெய்துள்ள போதிலும் குளங்களின் நீர் மட்டம் பெரியளவில் உயரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# மற்றவர்களில் தங்கி வாழும் மனநிலையை உடைத்தெறிய வேண்டும்

## விவசாயிகளுக்கு முல்லை மேலதிக அரச அதிபர் அறிவுரை

அக்கராயன், ஒக்.26

மற்றவர்களில் தங்கி வாழும் மன நிலையை விவசாயிகள் உடைத்து எறிய வேண்டும் - இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.அ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் இடம்பெற்ற தென்னியங்குளம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய மூன்று குளங்களின் காலபோக நெற்செய்கைக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பகுதியில் உள்ள குளங்களின் புனரமைப்பு வேலைகள் நிறைவடையாமையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஒப்பந்தகாரர்களின் இழுத்தடிப்புகள் காரணமாகவே குளங்களின் புனரமைப்பு வேலைகள் நிறைவடையாமல் உள்ளன. ஒப்பந்தகாரர்களை மட்டும் பிழைகள் சொல்லி அரச அதிகாரிகளாகிய நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. நல்ல ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்யாதது அரச அதிகாரிகளாகிய எமது தவறு ஆகும். அடுத்த ஆண்டு சிறுபோகச் செய்கைக்கு முன்பதாக புனரமைப்பு முடியாத குளங்களின் வேலைகளை நிறைவு செய்து தருவோம். நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இடைத்தரகர்களை நம்பி நெல்லைக் குறைந்தவிலைக்கு விற்பனை செய்யக் கூடாது. நல்ல சந்தை வாய்ப்பை உருவாக்கும் பொறுப்பு விவசாயிகளின் கையிலுள்ளது.

விவசாயிகள் மத்தியில் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடும் மனோநிலை குறைந்து வருவதை உணர்கிறோம். இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் கடுமையாக உழைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்ற போதிலும் தகுந்த பயன்களை அடைந்து கொள்வதில்லை. இனிவரும் காலங்களில் உற்சாகமான முயற்சிகள் மூலம் சிறந்த பயன் [illegible] கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார். (க-18)

# வர்த்தகக் கண்காட்சி வவுனியாவில்





வவுனியா, ஒக்.26

வவுனியாவில் திவிநெகும சமுர்த்தி எழுச்சித் திட்டத்தின் வர்த்தகக் கண்காட்சி கடந்த 22 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட சமுர்த்தி மகா சங்கங்கள் இணைந்து நடத்திய இந்தக் கண்காட்சி வவுனியா பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மகா சங்கத்தில் பிரதேச செயலர் அ.சிவபாதசுந்தரன் தலைமையில் ஆரம்பமானது.

வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர மங்கல விளக்கை ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அரச அதிபர் உட்பட விருந்தினர்கள் கண்காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டனர். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவிலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தக் கேள்விகளுக்கு கல்வி பிரதியமைச்சர் விஜித் விஜித முனிசொய்சா பதிலளித்தார்.

இதனையடுத்து இடைக் கேள்வியொன்றை எழுப்பிய அநுர குமார திஸாநாயக்க, சிறந்த பாடசாலைகள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் கேட்டார். இந்த வினாவுக்குப் பதிலளிப்பதற்கு எழுந்த பிரதிக் கல்வியமைச்சர் எடுத்த எடுப்பிலேயே ஜே.வி.பியின் சூழ்ச்சிதான் எனக் குறிப்பிட்டார். பிரதியமைச்சரின் இந்தப் பதிலானது சபையில் பெரும் சிரிப்பொலியை ஏற்படுத்தின.

பிரதியமைச்சரின் மேற்படி பதிலையடுத்து எழுந்த அநுரகுமார திஸாநாயக்க சிரித்துக்கொண்டே 'இந்த அரசுக்கு எந்த ஒரு விடயமாக இருந்தாலும் இரவிலும், பகலிலும், கனவிலும், சூழ்ச்சி தான் தெரிகின்றது. இது ஒரு வகையான மன நோயாகும் எனக் குறிப்பிட்டார். (த-சி)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆவது திருத்தத்தை இரத்துச்செய்யத் தீர்மானித்துள்ளது என எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது.

வடக்கு மாகாண மக்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை அரசு தவிர்க்க விரும்புகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உதவித் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;-

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்குப் போயுள்ளதாலும் யுத்தம் முடிந்த பின்னர் வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை கொண்டுவர முடியாதிருப்பதாலும் எதுவும் கூற முடியாத நிலையிலுள்ள அரசு தேசப்பற்று மற்றும் இனவாதம் என்பவற்றை மூட்டிவிட முயல்கின்றது.13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் என இந்த அரசு தான் கூறியது.

இலங்கைக்கு எதிராக ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அரசு இந்த உறுதி மொழியை அளித்தது. ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை வந்தபோதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை வந்தபோதும் அரசு இதையே கூறியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மூனும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் கிருஷ்ணாவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிலைமையில் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய முயல்வது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது- என்றார். (த)

## தமிழரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கேப்பாபிலவைச் சேர்ந்த குடும்பங்கள் சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்தப்படாமல் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக காட்டுப்பகுதியில் கட்டாயமாக குடியேற்றப்பட்டுள்ளமை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. விசேட அதிகாரி சாக்லோகா பியானி இந்த குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர் வடபகுதி மக்களின் மீள்குடியமர்வுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதில் உறுதியற்ற ஒரு நிலைப்பாடே நிலவுகிறது என்றும் ஐ.நா. விசேட அதிகாரி சாக்லோகா பியானி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிருபர்கள் சந்திப்பொன்றில் வடமாகாண நிலைவரங்கள் குறித்து சாக்லோகா பியானி தமது நிலைப்பாட்டை விளக்கினார்.

''முகாம்களை மூடிவிட்டால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் என்ற ஒரு நிலை இருக்காது என்பது அர்த்தமாகிவிடாது. தகுந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்னரே அத்தகைய முகாம்கள் மூடப்படவேண்டும் .இதற்குப் பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் விவகாரத்துக்குப் பரிகாரம் காணப் பல வாய்ப்புகள் உருவாகும். மீளத்திரும்புதல், மீள ஒன்றிணைத்தல், மீள்குடியமர்வு ஆகியவை சுமுகமாக இடம்பெறும். எனது கருத்தில் கொண்டுள்ள இரண்டாம் கட்ட ஆணைப்பணிகளை மேற்கொள்ளவேண்டிய நாடுகளில் இலங்கையும் ஒன்று'' என்றும் விசேட அதிகாரி சாக்லோகா பியானி மேலும் தெரிவித்துக்கொண்டார். (ப-த)

## மன்னார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கடந்த ஜூலை 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் 43 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஆறு பேர் மன்னார் மேல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸினால் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்னர்.

இதேவேளை, நீதிமன்ற தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் 21 சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

## கூட்டமைப்புடனான....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதன்போது யாழ்.பொதுநூலகத்துக்கும் சென்றிருந்தார். நூலகத்தைப் பார்வையிட்ட பின்னர் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடனான சந்திப்பு சீனத் தூதரகத்தில் நடைபெற்றது. அதில் நாட்டின் பொருளாதாரத்தில் சீனா பங்களிப்பு வழங்குகின்றமை குறித்துப் பேசப்பட்டது.

எனினும் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கு முன்னர் இந்தியாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சென்று அங்குள்ள பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்பதும் எனக்குத் தெரியும். அதற்காக இந்தியப் பயணம் பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நான் கதைக்க வேண்டிய தேவை இல்லை - என்றார்.

யாழ்.பொதுநூலகத்தின் உசாத்துனை வசதியைப் புனரமைப்பதற்காக யாழ்.பொதுநூலகர் சீன அரசிடம் உதவி கோரியிருந்தார். அதற்கு அமைய சீனத் தூதுவர் 1 மில்லியன் ரூபாவை யாழ்.பொதுநூலகர் நீலகர் திருமதி கருணாகரன் இமெல்டாவிடம் தெரிவித்தார்.

சீனத் தூதுவர் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார் . (த-13)

## மஞ்சள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வையில் வைத்து கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய மகேஸ்வரன் தர்மவேணி (வயது-29) என்ற பெண் தனது கணவனுடனும், குழந்தையுடனும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது குறித்த 'டிப்பர்' எனப்படும் கனரக வாகனத்தினால் மோதப்பட்டு மரணமானார்.

21.05.2010 அன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குறித்த பெண்ணின் கணவனும், குழந்தையும் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இதேவேளை குறித்த கனரக வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதி முத்தையா கேதீஸ்வரன் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் மேற்படி எதிரியான முத்தையா கேதீஸ்வரன் மீதான வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த போது, எதிரியிடம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது போலிச் சாரதி அனுமதிப் பத்திரமே வைத்திருந்தாரென்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. கடந்தசில தினங்களுக்கு முன்னர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் எதிரிமீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

தண்டனைச் சட்டக் கோவை 298 இன் பிரகாரம் கவனவீனமாகவும், அசட்டுத் துணிவாகவும் வாகனத்தைச் செலுத்திக் குறித்த பெண்ணுக்கு மரணத்தை ஏற்படுத்தியதாகக் குற்றம் நிரூபணமாகியதுடன்,குற்றத்தின் பாரதூர தன்மையையும் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக்கொண்டது.

இதன் பிரகாரம் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், எதிரியான முத்தையா கேதீஸ்வரனுக்கு இருவருடகால சாதாரண சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறினால் மேலும் ஆறுமாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-30)

## கே.பி. பற்றிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

கடந்த 30 வருடங்களாக பல மனிதப் படுகொலைகளுக்கு காரணமான தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்துக்கு பல்லாயிரம் டொலர்களைச் சேகரித்தமை, ஆயுதங்களை இந்த இயக்கத்துக்கு விநியோகித்தமை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட சண்முகம் குமரன் தர்மலிங்கம் என்ற குமரன் பத்மநாதன் (கே.பி) என்பவரைச் சர்வதேச பொலிஸார் கைது செய்ய தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

தங்களது இணையத்தளத்திலும், பிரசித்த இணையத்தளங்களிலும் இது குறித்து சர்வதேச பொலிஸார் தகவல் வெளியிட்டிருப்பதோடு இந்தியா, சென்னையிலுள்ள நீதிமன்றிலும் குமரன் பத்மநாதனைக் கைது செய்ய பிடியாணை ஒன்றையும் பெற்றுள்ளனர்.

இந்த பிடியாணையின் பிரதி ஒன்று கடந்த 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி என்னால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, அவை இலங்கையில் பிரசித்தியும் பெற்றன.

இலங்கை பொலிஸ் சர்வதேச பொலிஸில் அங்கத்துவம் பெற்றிருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் தலைமறைவாயுள்ள இலங்கையில் தேடப்படும் குற்றவாளிகளைச் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர். மிகுந்த தொடர்புகளைப் பேணி வரும் சர்வதேச பொலிஸாரிடம் குமரன் பத்மநாதன் தொடர்பான விவரங்களை இலங்கை பொலிஸார் வழங்குவது பொறுப்பாகும்.

இ[illegible] குமரன் பத்மநாதன் தொடர்பான தகவல்கள் [illegible] சர்வதேச பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்-என்றுள்ளது. (த)

## தீர்வு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அடிக்கடி இந்தியா சென்று வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ள தயக்கம் காட்டுகின்றனர். எனவே தேசியப் பிரச்சினைக்கான தீர்வு இழுத்தடிக்கப்பட அவர்கள்தான் காரணம்.இதே நிலை தொடர்ந்தால் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை அரசே முன்வைக்கும். எனினும் அதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை-என்றார். (த)

## மஹிந்தவின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துரையாடலொன்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பிரிகேடியர் டயஸ், ''எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்தை முன்னிட்டும், போர் வெற்றியின் 3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் சகல ஆலயங்களிலும் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முக்கியமான ஆலயங்களில் ஒருவார காலமும் தொடர்ச்சியாக விசேட பூசைகளும், தானங்களும் வழங்கப்பட வேண்டும். வற்றாப்பளை அம்மன் கோயில், சென்.பீற்றர்ஸ் தேவாலயம், தண்ணீர் ஊற்றில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஆகியவற்றில் 19 ஆம் திகதி விசேட வழிபாடுகள் மேற்கொள்ள வேண்டும் . மேலும் 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலிருந்து அரச உத்தியோகத்தர்கள் படையினருடன் இணைந்து வட்டுவாகலில் அமைந்துள்ள விகாரை வரை பேரணியாகச் செல்ல வேண்டும்.கோயில்களில் தானம் செய்வதற்குச் செலவாகும் நிதியை அந்தப் பகுதி பிரதேச செயலர்களே பார்த்துக்கொள்ள வேண்டும். கொழும்பு வர்த்தகர்களின் உதவியைப் பெற்று இயலுமான வரை நிதிஉதவியைப் பெற்றுத்தர முயற்சி எடுக்கப்படும் - என்று பிரிகேடியர் டயஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் கேட்டபோது, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஜனாதிபதியின் பிறந்த தின நிகழ்வை கொண்டாடுமாறு அறிவுறுத்தியுள்ளது. அதன் பிரகாரம் நாம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று தெரிவித்தார். (த-5-400)

## அளவுக்கதிகமான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உதயனிடம் தெரிவித்தார். தனது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணமோ, ''நாங்கள் எல்லாவற்றையும் சரியாகத்தான் செய்கிறோம்'' என்று இதற்கு பதிலளித்தார் உதயனிடம்.

அரசியல் தலையீடுகளின் உச்சம் காரணமாக ஏற்பட்ட சர்ச்சைகளால் பீடாதிபதி ஒருவர் தனது பதவியில் இருந்து விலகப் போவதாகத் துணைவேந்தரிடம் எச்சரித்தார் என்று உதயனுக்கு நம்பகமாக அறியவந்தது.

கல்வி சாரா ஊழியர் நியமனங்களில் ஆரம்பித்த அரசியல் தலையீடுகள் இப்போது எல்லை தாண்டி, பல்கலைக்கழக நிர்வாகத்தின் உயர் ஊழியர்களை அமைச்சர் ஒருவர் தானே நேரடியாகக் கட்டுப்படுத்தி வழிப்படுத்தும் நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டுள்ளது என்று பல்கலைக்கழகச் சமூகம் குற்றஞ்சாட்டுகிறது.

தான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளது. ''ஒரு சில மூத்த அதிகாரிகளின் மீதான கட்டுப்பாட்டை பல்கலைக்கழக நிர்வாகம் இழந்துள்ளமையானது பல்கலைக்கழக நிர்வாகத்தை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதாக உள்ளது'' என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

''உயர் அதிகாரிகள் சிலர் அடிக்கடி தியேட்டருக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு அமைச்சரால் நேரடியான கட்டளைகள் வழங்கப்படுகின்றன'' என்று நம்பகமான நபர்கள் தெரிவிக்கின்றனர்.

கணினி பிரயோக உதவியாளர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் நியமனத்தில் இடம்பெற்ற அரசியல் தலையீடுகளே பல்கலைக்கழக நிர்வாகத்துக்குள் கடும் அதிருப்தியையும் குழப்பதையும் ஏற்படுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

''இந்த நியமனங்கள் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் நேர்மையாகத்தான் நடந்தது என்று பீடாதிபதிகள் 'தியேட்டரு'க்குச் சென்று விளக்கம் கொடுக்க வேண்டியளவுக்கு அரசியல் தலையீடு இருந்தது'' என்று உதயனிடம் தெரிவித்தார் பல்கலைக்கழக மூத்த அதிகாரி ஒருவர்.

இந்த நியமனங்கள் ஏற்கனவே ஒரு தடவை மேற்கொள்ளப்பட்டு பின்னர் இடை நிறுத்தப்பட்டன. 359ஆவது பேரவைக் கூட்டத்தில் இந்த நியமனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால், நியமனக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட இருந்த தருணத்தில் திடீரென அது தடுத்து நிறுத்தப்பட்டது. பின்னர் பேரவையின் 360ஆவது கூட்டத்தில் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்டதற்கான தெளிவான காரணம் பேரவை கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. அரசியல் தலையீடே நியமனம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்று அடித்துக் கூறப்படுகிறது.

அந்த நியமனப்பட்டியலில் அடங்கியவர்கள் உட்பட விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டன. அதில் தெரிவு செய்யப்பட்டவர்கள் போக எஞ்சியவர்களில் சிலரை எழுதுவினைஞர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் இதுவரை அந்தத் தெரிவுப் பட்டியல் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

கல்வித் துறை சாராத வடக்கிலுள்ள அமைச்சர் ஒருவரின் தலையீட்டை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டது என்று திட்டவட்டமாகத் தெரிய வருகிறது. (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரட்டை வழிகளில் மக்கள் பணம் கரைந்து போகக் காரணம் யார்?

மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்வதற்கு வகை செய்யும் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாமற் செய்வது, மாகாண சபைகளை ஒழிப்பது குறித்த வாதப் பிரதிவாதங்கள் கொழும்பில் வீச்சாக நடந்தேறி வருகின்றன.

அதன் தாக்கமோ என்னவோ தெரியவில்லை, அரச அலுவலர்களின் எண்ணிக்கை உயர்ந்து செல்வது குறித்த விவகாரமும் வெளிப்பட்டுள்ளது. அண்மையில் நியமிக்கப்பட்ட ஐம்பதாயிரம் பட்டதாரிப் பயிலுநர்களுடன், அரச அலுவலர்களின் எண்ணிக்கை, ஐந்து இலட்சங்களைத் தாண்டிவிட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இது நாட்டின் சனத்தொகையில் அண்ணளவாக 1.8 சதவீதம் என்று கொள்ளப்படுகிறது.

அதன் வழியாக அரச ஊழியர்களின் சம்பளத் தொகையும் 717 பில்லியன் ரூபாவிலிருந்து 1, 000 பில்லியன் ரூபாவாக உயரும் என்று உத்தேசமாக மதிப்பிடப்படுகின்றது. அடுத்த மாதம் 8ஆம் திகதி 2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது சரியான தொகை தெரியவந்துவிடும்.

அரசாங்க அலுவலர்களின் எண்ணிக்கை வருடாந்தம் வானத்தை நோக்கி ஓங்கி உயர்வதற்கு, அதிகாரப் பரவல் முறையிலான நிர்வாகமே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. குடிசார் நிர்வாக நடைமுறையில் அரசியல் அதிகாரங்களைப் பரவலாக்கும் போது, நிர்வாக அதிகாரங்களையும் பரவலாக்க வேண்டிய தவிர்க்கமுடியாத தேவை உண்டானது.

மூன்று நான்கு துறைகள் ஒரே அமைச்சின் கீழ் செயற்பட்டதற்குப் பதிலாக, ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி அமைச்சு நிறுவவேண்டியதாயிற்று. அதனால் அலுவலர்களின் எண்ணிக்கையும் எகிறிச் சென்றது; தொடர்ந்தும் உயர்ந்துகொண்டே வருகிறது.

உதாரணத்துக்கு, காணி, நீர்ப்பாசனம், மின்சக்தி ஆகிய மூன்று துறைகளும் ஒன்றாக இருந்த வேளையில் தேவைப்பட்ட அரச அலுவலர்களின் எண்ணிக்கை, அவை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதும் மூன்று மடங்காக அதிகரித்தது. ஒன்றாகச் செயற்பட்ட அமைச்சுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதால் மக்களின் தேவைகளை, வளர்ச்சி நாடிய சேவைகளை குறுகிய கால இடைவெளிகளில் பூர்த்திசெய்வதற்கு வாய்ப்பு உண்டாகியதைக் கருத்தில் கொள்ளாமல் தவிர்க்க முடியாது.

அரச நிர்வாக அலகுகளில், பணி புரிவதற்குத் தேவையான அலுவலர்களின் எண்ணிக்கையைத் திட்டமிடல் பகுதியினர் வகுத்து, தரங்களை நிர்ணயித்து ஆள்சேர்ப்பு செய்ததால் மக்களுக்குரிய தேவைகளை விரைந்தும் முழுமையாகவும் வழங்க முடிந்தமை, அதிகாரப் பகிர்வின் குறிப்பிடத்தக்க பயன்கள் எனலாம்.

ஆயினும் காலப்போக்கில் அரச திணைக்களங்களில், அவற்றின் பல்துறைசார் அலகுகளில் அரசியல் மற்றும் நிர்வாகத் தலையீடுகள் தலையெடுக்க ஆரம்பித்ததிலிருந்து, மக்கள் நலன்கள் பெரும் பின்னடைவு கண்டன; பின்னுக்குத் தள்ளப்பட்டன!

அரச நியமனங்களில், பதவி உயர்வுகளில் உள்ளூர் அரசியல்வாதிகள் இடையூறு மற்றும் அரசியல் தலையீடுகளின் காரணமாக, தகுதியானோர் புறக்கணிக்கப்படுவதும், தகுதி குறைந்தவர்கள் நியமனம் பெறுவதும் நடைமுறைப் பண்புகளாக மலிந்துள்ளன.

அரச அலுவலர்களின் நியமனங்களிலும், பதவி உயர்வுகளிலும் அரசியல் செல்வாக்கும் தலையீடுகளும் தலைவிரித்தாடுவதால், மக்களுக்குரிய பணிகளிலும் சேவைகளிலும் வினைத்திறனும் தேவையான ஈடுபாடும் குன்றிப்போகின்றன. நிர்வாக மட்டங்களில் திட்டமிடல் தேய்ந்து செல்கிறது.

இதே வேளை-

அரச அலுவலர்களின் தனிப்பட்ட வாழ்க்கை நிலையை நோக்குவதும் அவசியமாகும். வருடாந்தம் வாராந்தம் என்றில்லாமல், வாழ்க்கைச் செலவு நாளாந்தம் உயர்ந்து செல்வதை அரசினால் தடுக்க இயலவில்லை. உணவுப் பொருள்களினதும், ஏனைய அத்தியாவசிய பாவனைப் பொருள்களினதும் விலைகள் திடீர் திடீரென உயர்த்தப்படுகின்றன; எகிறிச் செல்கின்றன.

அதன் காரணமாக, அரச அலுவலர்களில் மிகப்பலரும் பகுதி நேர வேலைகளை நாடுவதற்குத் தள்ளப்படுகிறார்கள். தமது கடமை நேரங்களிலும் பிற தொழில்களைச் செய்வதற்கு உந்தப்படுகிறார்கள். ஓய்வூதியத்துக்குத் தகுதி பெறும் காலம்வரை, தொழிலில் வேண்டிய அர்ப்பணிப்பு இன்றிப் பணிபுரிந்துவிட்டு, ஓய்வூதியர்களாக மாறுகிறார்கள்.

முன்னைய காலங்களில், அரச அலுவலர்கள் சேவை நீடிப்புக்கு மேலதிகாரிகளின் காலைக் கையைப் பிடித்து சேவை நீடிப்புப் பெறுவது வழக்கம். இப்போது, ஓய்வூதியத்தையும் பெற்றுக்கொண்டு வேறு தொழில்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையே அதிகரித்து வருகிறது!

இன்னொரு புறத்தில், அனுபவமும் ஆற்றலும் மிகுந்த மூத்த அரச அலுவலர்கள் ஓய்வுபெற்றுச் செல்ல, அவர்களின் இடத்தை நிரப்பும் புதியவர்களின் வினைத்திறன் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகவே உள்ளது. அந்த வகையில் முதலாமவருக்கு ஓய்வூதியம், இரண்டாமவருக்கு சம்பளம் என்ற இரட்டைச் செலவால் அரசின் நிதிவளம் கரைகிறது; வீணாகிறது.

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் தமக்குரிய இலக்குகளை எய்த முடியாமல் அல்லாடுவதற்கும், பல பரிமாணங்ளிலும் மக்களுக்குரிய சேவைகளை நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் வழங்கமுடியாமைக்கும், மொத்தத்தில் அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்றாக வேண்டும். பல சந்தர்ப்பங்களில் மக்களின் வரிப்பணம் அவர்களுக்குரிய சேவைகளை வழங்குவதற்கு பயன்படாமல் போவதால் அதுகுறித்து அவர்கள் அரசு மீது விரல் சுட்டுவதை எந்த வகையிலும் தவறு என்று கொள்ளும் பாத்தியதை இல்லையே! இதனை ஆட்சியாளர்களின் பொறுப்பு பலவீனத்தின் அடையாளத்துவம் என்றும் கொள்ளலாம்!!

# வழக்குத் தொடுக்கப்படாது பல வருடங்கள் விளக்கமறியலில் வாடும் சந்தேக நபர்கள்

## ஒருவர் நீதிமன்றப் படியேறியுள்ளார் 429 தடவைகள்

கொழும்பு, ஒக்.26

தமக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படாத நிலையில் பல ஆண்டுகள் காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் இந்த விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் படி, பெரும் எண்ணிக்கையான சந்தேக நபர்கள் எவ்வித வசதிகளுமின்றி சிறைச்சாலைகளில் காலம் கழித்து வருகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் தமக்கெதிராக இதுவரை வழக்கேதும் தொடுக்கப்படாத நிலையில் சந்தேக நபரொருவர் 15 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் இதுவரையில் 429 தடவைகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவிதத்தில் 10 வருடங்களுக்கும் மேலாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படாது 5 சந்தேக நபர்களும், 5 வருடங்களுக்கு மேலாக 7 சந்தேக நபர்களும், மூன்று வருடங்களுக்கு மேலாக 25 சந்தேக நபர்களும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# பொலித்தீன் பாவனையை தடைசெய்ய உள்ளூராட்சி சபைகள் முன்வரவேண்டும்

## மன்னார் பிரதேச சபைத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.26

திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக கடந்த 20 வருடங்களாக பேசப்பட்டு வருகின்றது. எனினும் திண்மக் கழிவுக்கு மூலகாரணமான பொலித்தீன் பாவனையை முதலில் 34 உள்ளூராட்சி சபைகளும் தீர்மானம் மேற்கொண்டு தடைசெய்ய வேண்டும்.

இவ்வாறு மன்னார் பிரதேச சபை தலைவர் எஸ்.மாட்டீன் டயஸ் கருத்துத் தெரிவித்தார்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ தலைமையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி பட்டறை யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திண்மக் கழிவுகள் சபைகளில் குவிந்த வண்ணம் உள்ளன.

இதனை அகற்றுவதற்கு ஆளணி பற்றாக்குறையாக உள்ளது.

எனவே, ஆளணியை நிரப்புவதற்கான அனுமதியை உள்ளூராட்சி ஆணையாளர் வழங்க வேண்டும். - என்று அவர் மேலும் கூறினார்.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பேசுகையில் கூறியதாவது:-

திண்மக் கழிவு வடமாகாணத்தில் மட்டும் உள்ள பிரச்சினை அல்ல.

இலங்கை முழுவதும் சகல மாகாணங்களிலும் உள்ள பிரச்சினை.

திண்மக் கழிவுகளை முறையான செயலாற்றுகை ஊடாக அகற்றுவதன் மூலம் டெங்கு போன்ற நோய்களில் இருந்து மக்களைக் காக்கலாம். - என்றார்.

சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி பேசுகையில்:-

கழிவுகள் அகற்றப்படுவது தொடர்பாக உள்ளூராட்சி சபை மட்டுமல்ல அவற்றுடன் வீடுகள், பாடசாலைகள், அரச நிறுவனங்களுக்கும் பெரிய பொறுப்பு உள்ளது.

எனவே எமது சூழலை அழகாக வைத்திருப்பதற்கும் அதன் ஊடாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் நாம் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்பட வேண்டும்.- எனத் தெரிவித்தார். (ம-50)

# யாழ். பல்கலை.விஞ்ஞானபீட ஆசிரியர் கவனவீர்ப்புப் போராட்டம்

## ‘6 நமதே’ பட்டியும் கழுத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கத்தினர் ‘6 நமதே’ என்று பொறிக்கப்பட்ட பட்டியை கழுத்தில் அணிந்து ஒரு மாதத்துக்குக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்கான ஒதுக்கீட்டை 6 வீதமாக அதிகரிக்க வலியுறுத்தி இவ்வாறு பட்டி அணிந்து கவனவீர்ப்புப் போராட்டம் செய்வதாக சங்கத் தலைவர் எஸ்.தபோதரன் தெரிவித்தார்.

மும்மொழியிலும் பொறிக்கப்பட்ட அந்தப் பட்டியை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் விஞ்ஞானபீட ஆசிரியர்கள் அணிந்து வருகின்றனர்.




திங்கட்கிழமைகளில் ‘6 நமதே’ எனப் பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் அணிந்தும் ஏனைய நாள்களில் கழுத்துப்பட்டி அணிந்தும் ஒரு மாத காலத்துக்குத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டம் செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகம் மட்டுமன்றி மொரட்டுவ,பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் இவ்வாறு பட்டி அணிந்து போராட்டம் செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# 50 லட்சம் ரூபா செலவில் அச்சுவேலியில் பஸ்தரிப்பிடம்

## வலி. கிழக்கு பிரதேச சபை அமைக்கிறது

யாழ்ப்பாணம்,ஒக்.26

வலி. கிழக்கு பிரதேச சபை அச்சுவேலியில் ஐம்பது லட்சம் ரூபா செலவில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணித்து வருகின்றது என்று சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார். அச்சுவேலி மத்திய பஸ்தரிப்பு நிலைய வளாகத்தில் இந்தப் புதிய பஸ்தரிப்பிடம் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருகின்றது.

மாடி வசதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுவரும் இந்த பஸ்தரிப்பு நிலையத்தால் பயணிகள் பெரும் நன்மையடைவர். இந்த நிலையத்தின் கட்டுமானப் பணிகள் அடுத்து வரும் மாதங்களில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பாலும் ஜனவரி மாதத்தில் இந்த நிலையத்தை மக்கள் பாவனைக்கு திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## தொண்டமானாறு பால அபிவிருத்தி தாமதம்

தொண்டமானாறு பால அபிவிருத்தி வேலைகள் மிகவும் தாமதமாக இடம்பெறுகின்றன. ஒப்பந்தகாரர் பிறமாவட்டத்தைச் சேர்ந்த தால் நேரடியாக தொடர்பு கொண்டு வேலைகளை விரைவு படுத்த முடியாதுள்ளது என்று வடமாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி க.கருணாநிதி இவ்வாறு கவலை தெரிவித்தார்.

தொண்டமானாறு தடுப்பணையின் கதவுகளுக்கு இறப்பர் மீளப் பொருத்தப்பட வேண்டும். செம்மணியில் உள்ள உப்பளத்துக்கு உரிய கடல் நீர் மற்றும் உவர் நீர்த்தடுப்பணை தொடர்பாகவும் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன.

தற்போது காணப்படும் காலநிலை, நிலத்தடி நீர் பாதுகாப்பை மேற்கொள்வதற்கு பொருத்தமாக உள்ளது. வழுக்கையாறு தொடர்பான அபிவிருத்தி குறித்து பொது மக்கள் பல வினாக்களை தொடுத்து வருகின்றனர்- என்று அவர் மேலும் கூறினார். (ம-50)

## வயது குறைந்தோருக்கு புகைபொருள் விற்றோர் சிக்கினர்

வட்டுக்கோட்டைப் பகுதியில் 21 வயதுக்கு குறைந்தோருக்கு புகைபொருள் விற்பனை செய்த சுமார் 15இற்கும் மேற்பட்டோர் மதுவரித் திணைக்களத்தினரின் திடீர் சோதனையின் போது சிக்கிக்கொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் மீது மதுவரித் திணைக்களத்தினர் திடீர் சோதனை மேற்கொண்டனர். இதில் 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு புகைப்பொருள்களை விற்பனை செய்த வியாபாரிகளை கையும் மெய்யுமாகப் பிடித்து தண்டப்பணம் அறவிடப்பட்டது. மதுபோதையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமப்புற மாணவர்களுக்கு தனியான பஸ் சேவைக்கு வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஒக்.26

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வசந்தபுரம், மன்னாங்கண்டல் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென பாடசாலை பஸ் சேவையொன்றை ஏற்படுத்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது சீரான பஸ் சேவைகள் இல்லாமையால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சில மாணவர்கள் போக்குவரத்துச் சிரமம் காரணமாக பாடசாலை செல்வதைத் தவிர்த்து வருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

சில தனியார் பஸ்கள் குறிப்பிட்ட சில மாணவர்களை மட்டுமே ஏற்றிவிட்டு ஏனையோரைத் தவிர்ப்பதாகவும் இதனால் குறித்த மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீடு திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இவர்களின் நிலை மேலும் மோசமாக மாறியுள்ளது.

அத்துடன் மூன்றாம் தவணைக்கான பரீட்சைகளும் ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே காலை, பிற்பகல் வேளைகளில் இவர்களுக்கென தனியான பாடசாலை பஸ் சேவையை ஏற்படுத்தித் தருமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் போரில் சேதமுற்ற வீடுகள் 11 ஆயிரத்து 99

## 737 வீடுகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை

வவுனியா, ஒக்.26

இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரின் போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 99 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் 10 ஆயிரத்து 111 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 988 வீடுகள் பகுதியளவில் சேதடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையைச் சேர்ந்த 19கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த வீடுகளே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகின்றன.

இதன் பிரகாரம் விசுவமடு மேற்கில் 870 வீடுகளும், விசுவமடு கிழக்கில் 476 வீடுகளும், மாணிக்கபுரத்தில் 353 வீடுகளும், வள்ளுவர்புரத்தில் 336 வீடுகளும், மன்னாங்கண்டலில் 245 வீடுகளும், தேறாவிலில் 348 வீடுகளும், சுதந்திரபுரத்தில் 701 வீடுகளும், தேவிபுரத்தில் 785 வீடுகளும், வள்ளிபுனத்தில் 539 வீடுகளும், உடையார்கட்டு வடக்கில் 630 வீடுகளும், கோம்பாவிலில் 1079 வீடுகளும், உடையார்கட்டு தெற்கில் 982 வீடுகளும், இரணைப்பாலையில் 421 வீடுகளும், புதுக்குடியிருப்பு மேற்கில் 1223 வீடுகளும், சிவநகரில் 422 வீடுகளும், புதுக்குடியிருப்புகிழக்கில் 616 வீடுகளும், மல்லிகைத்தீவில் 357 வீடுகளும், ஆனந்தபுரத்தில் 199வீடுகளும், மந்துவிலில் 517 வீடுகளும் சேதமடைந்தவையாகும்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்வு செய்யப்பட்டதையடுத்து, அழிவடைந்த வீடுகளில் 737 வீடுகளை மட்டுமே புனரமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கை பல்வேறு வேலைத்திட்டங்களின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்படி, நேர்ப் திட்டத்தின் கீழ் 671 வீடுகளும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 26 வீடுகளும் என்ஆர்சி திட்டத்தின் கீழ் 40 வீடுகளும் புனரமைப்பதற்கு நிதியொதுக்கப்பட்டுள்ளது. (க-400)

## 'அனகி' அடுப்பு

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சியில் முன்னேற்றப்பட்ட அனகி அடுப்புத் தொடர்பான அறிமுகப் படுத்தும் வேலைத்திட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

உலக உணவு வேலைத் திட்டத்தின் பாதுகாப்பான விறகு அடுப்பு வேலைத் திட்டத்தின் கீழ் இது இடம்பெறவுள்ளது.

மலையாளபுர கிராம அபிவிருத்திச் சங்கத் காரியாலயத்தில் இன்று காலை 9 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

இதனை கிளிநொச்சி வனவள அபிவிருத்தி அதிகார சபையினர் ஒருங்கிணைப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## ஆயுள்வேத வைத்தியசாலை மூடிக்கிடப்பதால் அவலப்படும் கரைதுறைப்பற்று மக்கள்

முல்லைத்தீவு,ஒக்.26

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலை மூடிக்கிடக்கின்றதால் இங்குள்ள மக்கள் வைத்திய வசதிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுப் பல மாதங்களாகியும் பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வந்த ஆயுள்வேத வைத்திய சாலை வைத்தியரின்மை காரணமாக இயங்காமல் மூடிக்கிடக்கின்றது.

இதனால் அங்கு வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதுடன் நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்கு ஆங்கில வைத்தியத்தை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்டு வெறும் கையுடன் மீள்குடியமர்ந்த மக்களின் நலன் கருதி மூடியிருக்கும் ஆயுள்வேத வைத்தியசாலையை விரைவாக இயங்கவைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போர் காரணமாக கரைதுறைப்பற்று பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் போருக்கு முடிவு கட்டப்பட்டதை அடுத்து சொந்த இடங்களில் படிப்படியாக மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் பல வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

பரந்துபட்ட பிரதேசமாக விளங்கும் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் சுமார் 40ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். முல்லைத்தீவு, முள்ளியவளை, செம்மலை, முள்ளிவாய்க்கால், கொக்கிளாய் ஆகிய ஐந்து உப அலுவலகங்களைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் கொக்கிளாய் உப அலுவலகத்தைத் தவிர ஏனைய நான்கு அலுவலகங்களும் இயங்குகின்றன. கொக்கிளாய் அலுவலகம் பலத்த சேதத்துக்குள்ளானதால் இயங்கவில்லை.

முள்ளியவளையில் இயங்கி வந்த ஒரேயொரு ஆயுள்வேத வைத்திய சாலையும் வைத்தியர் இல்லாததால் மூடிய நிலையில் காணப்படுகின்றது. வைத்தியர்கள் இங்கு செல்ல மறுப்பதே இந்த நிலைக்குக் காரணம் என்றும் தெரிய வருகின்றது. (க-115)

## பூநகரி, விக்னேஸ்வராவின் மைதானம் ராணுவப் பிடியில் திண்டாடுகின்றனர் மாணவர்கள்

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பெரும் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு காணப்படுவதாக இங்குள்ள கல்விச் சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் கட்டடங்கள் மற்றும் அதன் சுற்றாடலை விடுவித்து கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இராணுவத்தினர் இந்தப் பாடசாலையை விடுவித்தனர்.

அதன் அருகில் இராணுவத்துக்கு காணியும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலை விளையாட்டு மைதானத்தின் பெரும் பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதுடன் அதற்கு வேலியையும் அமைத்துள்ளனர்.

மேலும் இந்தப் பாடசாலையின் மலசல கூடங்களை இராணுவம் தேவைகளுக்கு பயன்படுத்துவதால் மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில் அச்சமான ஒரு சூழல் நிலவுவதாகவும் தெரியவருகின்றது.

எனவே பாடசாலைச் சூழலையும், விளையாட்டு மைதானத்தையும் இராணுவத்தினரிடமிருந்து முழுமையாக விடுவித்து பாடசாலையிடம் வழங்குமாறு பெற்றோர்களும் கல்விச் சமூகத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## பனை நடுகை

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் பனை நடுகைத் திட்டம் வைபவரீதியாக இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் பனம்கன்று நடுகை செய்யும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவில் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட இணைப்பாளர் ம.கியுபேட் அன்ரனி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் எஸ்.சேந்தன் பனை நடுகையை ஆரம்பித்து வைத்தார். (க-6)

# 'ஒரு தறப்பாளையாவது தாருங்கள் ஐயா'

## மஹிந்தவின் இணைப்பாளரிடம் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஒக்.26

"நாம் மழையில் நனைந்து அவலப்படுகின்றோம்- ஒரு தறப்பாளையாவது எமக்கு தந்து எம்மைக் காப்பாறுங்கள்".

-இவ்வாறு முல்லைத்தீவில் தற்காலிக கொட்டகைகளில் அவலப்படும் மக்கள் அங்கு வருகை தந்த ஜனாதிபதியின் இணைப்பாளரான எஸ்.கனகரத்தினத்திடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில்:-

நாம் வசிக்கும் தற்காலிக குடில்கள்,கொட்டகைகள் யாவும் பழுதடைந்து விட்டன. இதனால் தற்போது பெய்து வரும் மழையில் மோசமான அவலங்களை எதிர்கொண்டு வருகின்றோம். எமக்குத் தறப்பாளாவது வழங்கப்பட்டால் அதன் கீழாவது ஒதுங்கி இருந்து மழையிலிருந்து பாதுகாப்புத் தேடிக் கொள்வோம் என்று இணைப்பாளரிடம் உருக்கமாக தமது அவல நிலையை எடுத்துக் கூறினர்.

ஜனாதிபதியின் இணைப்பாளரான எஸ்.கனகரத்தினம் 60 ஏக்கர், 18 ஏக்கர், 90 ஏக்கர் திட்டங்களில் வாழும் மக்களை நேரில்சென்று பார்வையிட்டார்.

இவர் இங்குள்ள 42 குடும்பங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், உதவிகள் எதனையும் இதுவரை பெறாத குடும்பங்களுக்கு உதவிகளைப் பெற்றுத்தருவதாகவும் உறுதிமொழி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## காளை மாடுகளை வடமாகாணத்தினுள் கொண்டு செல்வதற்கு இனி தடையில்லை

அக்கராயன், ஒக்.26

இனிமேல் காளை மாடுகளை வட மாகாணத்தின் எந்தப் பகுதிக்கும் கொண்டு செல்ல முடியும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் துணுக்காய் கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தரான வி.இரத்தின சபாபதி.

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற காலபோக நெற்செய்கைக் கூட்டத்தில் வைத்து அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

**முன்னர் காளை மாடுகளை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதில் தடைகள் காணப்பட்டன.**

முன்னர் காளை மாடுகளை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதில் தடைகள் காணப்பட்டன. இதனால் விவசாயத் தேவைகளுக்குக் கூட காளை மாடுகளைக் கொண்டு செல்ல முடியாததால் விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது இந்தத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தின் எந்தப் பாகத்துக்கும் ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்துக்குக் காளைகளைக் கொண்டு செல்லக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

இதனால் விலங்கு வேளாண்மை முயற்சிகளை இலகுவாக முன்னெடுக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## அடுப்பு எரியுமா, சமையல் முடியுமா...?



புதுக்குடியிருப்பு மந்துவில் கிராமத்தில் மீள்குடியமர்ந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்த பெண்ணொருவர் திறந்தவெளியில் சமையல் பணிகளில். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் விகாரைப் பகுதியில் தமிழ் மக்கள் நடமாடத் தடை

யாழ்ப்பாணம், ஒக்.26
மாதகல் மேற்கில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதும் விகாரையை அண்மித்த பகுதிகளில் தமிழ் மக்களின் நடமாட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களின் பின்னர் மாதகல் மேற்கு மக்கள் மீளக்குடியமர்த்துவதற்கு கடந்த 22 ஆம் திகதி கடற்படையினரால் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

269 குடும்பங்கள் வரையில் இடப்பெயர்வுக்கு முன்னர் வசித்த போதும் தற்போது மீளக்குடியமர்வதற்கு 229 குடும்பங்கள் வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கான உதவிப் பொருள்கள் எவையுமே இதுவரை வழங்கப்படவில்லை. மேலும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

'டனிஷ்' அகதிகள் பேரவையால் காணிகளை துப்புரவு செய்வதற்குரிய உபகரணங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை விரைவில் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, மாதகல் மேற்கில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் அமைந்துள்ள நுணசை பாடசாலை மற்றும் அத்தோடு இணைந்துள்ள 15 வீடுகள் வரையில் இன்னமும் விடுவிக்கப்படாமல் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

இத்துடன் இந்தப் பகுதியில் அமைந்துள்ள விகாரை மற்றும் யாத்திரிகர் தங்குமிடம் ஆகியவற்றுக்கு அண்மித்த பகுதியிலும் பொது மக்களின் நடமாட்டத்துக்கு கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

அத்துடன் விகாரையை அண்மித்த பகுதியில் ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த மீன்பிடிக் கட்டுப்பாட்டுத் தடை தொடர்வதாக இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம-5)



## நாகர் கோவிலில் விபத்து

நாகர்கோவில் குடியிருப்புப் பகுதியில் இ.போ.ச. பஸ் விபத்துக்கு உள்ளானதால் இதில் பயணித்த அரச உத்தியோகத்தர்கள் சிலர் சிறு காயங்களுக்கு ஆளாகினர்.

செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கட்டைக்காடு நோக்கிச் சென்ற இ.போ.ச. பஸ் விபத்துக்குள்ளானது. இந்த பஸ் குடியிருப்புப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென வில்லுத்தகடு உடைந்து பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. (ம-8)

## இ.போ.ச. ஊழியர் தாக்கப்பட்டதை ஒப்புக் கொண்டனர்

வேலணை சுருவில் பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதியையும் நடத்துநரையும் அதே பஸ்ஸில் வைத் துத் தாக்கிய குற்றத்தை மினிபஸ் சாரதியும் நடத்துநரும் நீதிமன்றில் ஒப்புக் கொண்டனர்.

இரண்டு பேரதும் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டு, நீதிவான் இருவரையும் தலா 10ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில்விடுவித்து தண்டனைத் தீர்ப்புக்காக வழக்கை ஒத்தி வைத்தார். இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

வேலணை சுருவில் பகுதியில் வைத்து செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை சேவை யிலீடுபட்டிருந்த அரச பஸ்ஸின் சாரதியையும் நடத்துநரையுமே மினிபஸ் சாரதியும் நடத்துநரும் தாக்கினர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனை அடுத்து சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ம-4)

## கட்டாக்காலி கால்நடையை கட்டி வளர்க்க அறிவுறுத்து

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, துன்னாலை ஆகிய இடங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளை கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையை அடுத்து நெற்பயிர்கள் முளைத்து வரும் நிலையில் கட்டாக்காலி ஆடு, மாடுகளால் அவை நாசமாக்கப்படும் நிலை தோன்றியுள்ளது என்று இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கரவெட்டிப் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ். தம்பிமுத்துவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். அத்துடன் கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறும் கேட்டுள்ளனர். (ம-8)

## 12 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அல்வாயில் திருட்டு

அல்வாய் கிழக்கு துளவைப் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து 12 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் ரொக்கப்பணம் என்பன திருட்டுப் போயுள் ளன.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இந்தத் திருட்டு தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டுக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் இந்தக் துணிகரத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டுச் சொந்தக்காரர் உறக்கத்தில் இருந்தபோது திருட்டு இடம்பெற்றுள்ளது என்று முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமையும் வதிரி உள்ளியநோடை பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் 10 லட்சம் ரூபா பெறு மதியான நகைகளைத் திருடியுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் கூறினர்.

கடந்த சில நாள்களாக இந்தப் பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்துக் காணப் படுகின்றன. இதனால் தாம் பயப்பீதியுடன் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கையைப் பொலிஸார் எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர். (ம-16-8)



சாவகச்சேரி நகர சபை வளாகத்தில் உள்ள ஆலயத்தில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் முன்பள்ளி சிறார்களுக்கான கற்றல் உபகரணங்களும் விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்பட்டன. செவ்வாய்க்கிழமை நகரசபை சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட விழாவில் மன்ற உறுப்பினர் ம.கிஷோர், பொதுசுகாதாரப் பரிசோதகர் கி.தளிர்ராஜ் ஆகியோர் சாவகச்சேரி உதயசூரியன் முன்பள்ளி சிறார்களுக்கான பொருள்களை முன்பள்ளி ஆசிரியையிடம் கையளிக்கிறார்கள். (ம-9)

## பிரதேச சபையின் சொத்துக்களை அனுமதியின்றி திருத்தினால் நடவடிக்கை

### வலி.மேற்குப் பிரதேச சபை தீர்மானம்

வலி.தென்மேற்கு,ஒக்.26
பிரதேச சபையின் அனுமதியின்றி பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் திருத்தம் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வலி. மேற்கு பிரதேச சபை முன்வந்துள்ளது. அத்துடன் அதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திருமதி என்.ஐங்கரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சபையின் சொத்துக்கள் திருத்தம் செய்வது பற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி. மேற்குப் பிரதேசசபையின் கீழ் உள்ள சொத்துக்கள் யாவும் மக்களின் சொத்துக்களாகும். அவற்றை உரிய முறையில் உரிய வகையில் சீர் செய்வதற்கு மக்களுக்கு முழுமையான அதிகாரமும் உரிமையும் உள்ளது. பிரதேசசபையின் அனுமதியுடன் திருத்த வேலைகள் இடம்பெறும் போது பிரதேச சபையால் ஆலோசனையும் உதவிகளும் வழங்க முடியும். அண்மையில் சபையின் அனுமதியின்றி பிரதேச சபையின் சொத்து தனிநபர் ஒருவரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, எதிர்காலங்களில் பிரதேச சபையின் சொத்துக்களைத் திருத்த விரும்புபவர்கள் பிரதேச சபையிடம் முன் அனுமதி பெற்ற பின்பே வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

அனுமதியின்றி வேலைகள் மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றுள்ளது. (ம-115)

## வெள்ள வாய்க்கால்களை திருத்தக் கோரிக்கை

வடமராட்சி,ஒக்.26
கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நான்கு வெள்ள வாய்க்கால்களை சிறந்த வடிகாலமைப்புடன் கூடிய வாய்க்கால்களாக புனரமைப்புச் செய்துதர வேண்டும் என்று சபையின் உபதலைவர் இ.சுந்த சொரூபன் யாழ்.அரச அதிபருக்கு கோரிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அல்வாய் கிழக்கு மாலிசந்திப் பிள்ளையார் கோயிலுக்கு தென்புறமாக ஆரம்பித்து,கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரிக்கு முன்பாகச் சென்று,துன்னாலை தாமரைக்குளம் வீதியில் தென்புறமாகத் திரும்பி நெல்லியடி கொடிகாமம் வீதியை ஊடறுத்துச் சென்று நுணாவில் வீதி ஊடாகச் சென்று சாவகச்சேரி வீதி யையும் ஊடறுத்து தளச் சந்தை வரை செல்லும் மிக நீண்ட ஒந்திராய் வாய்க்கால் மாலிசந்திக்கும் மடத்தடிக்கும் இடையில் இரு புறமும் உள்ள வட்டுவத்தை வாய்க்கால், கொம்மாந்தறை வீதியிலிருந்து மேற்காகச் சென்று வல்லையை அடையும் வாய்க்கால், தச்சன் தோப்பு வீதி யில் இருந்து தொடங்கி மோக்கங்கிராய் வீதி வரையான வாய்க்கால் ஆகிய நான்கு வெள்ள வாய்க்கால்களே புனரமைப்புச் செய்யப்பட வேண்டியவை என்று கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ள வாய்க்கால்கள் பலகாலம் சீர் செய்யப்படாமையால் தூர்ந்த நிலையில் உள்ளன. அவற்றில் நிரம்பியிருக்கும் மண் மற்றும் தடைகளை அகற்றிச் சீர் செய்து புனரமைத்து தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டால் வெள்ளம் தேங்கி [illegible] இவற்றைப் புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (ம-8)

### பயிர்ச் செய்கையாளர் நலனுக்காக

## பயிர் உற்பத்திச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

அச்சுவேலி,ஒக்.26
யாழ்.மாவட்டத்தில் விவசாயப் பயிர்ச் செய்கையாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மூன்று வகையான பயிர் உற்பத்தி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் பயிர்ச் செய்கைச் சங்கங்களை ஒன்றிணைத்து பயிர் அடிப்படையில் மாவட்ட ரீதியில் சமாசங்களும் உருவாக்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் வெங்காய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மிளகாய்ச் செய்கையாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பழச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற வகையில் மூன்று பயிர்ச் செய்கை அடிப்படையிலான கூட்டுறவுச் சங்கங்களும் பயிர் அடிப்படையில் மாவட்ட ரீதியில் ஒன்றிணைக்கப்பட்ட சமாசங்களும் உருவாக்கப்படவுள்ளன.

பயிர்ச் செய்கையாளர் சங்கங்களின் உருவாக்கம் சமகாலத்தில் சம்பந்தப்பட்ட தொழிற்றுறை சார் நிலையில் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு கூட்டுறவு அடிப்படையில் சில கோரிக்கைகளை வலியுறுத்தி நிறைவு செய்வதற்கும் பயிர்ச் செய்கையாளரின் நலனைப் பாதுகாப்பதற்கு அவசியம் எனக் கருதப்படுகிறது. இந்த நிலையில் பயிர்ச் செய்கை ரீதியான கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

பயிர் வகையின் அடிப்படையில் வெங்காயம், மிளகாய், பழவகைச் செய்கையாளர் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் தீவகம், தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி பகுதிகளில் நடைபெற்றுவருகின்றன.

சம்பந்தப்பட்ட பயிர் வகைகளை செய்கை பண்ணும் விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து விவசாயத் திணைக்களம் கலந்துரையாடல்களை நடத்தி கூட்டுறவுத் திணைக்களம் ஊடாக சங்கங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் முதலாவது பணப்பயிர் என்ற வகையில் அறிமுகம் செய்யப்பட்ட மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளை உள்ளடக்கி யாழ். மாவட்டத்தில் 1933 ஆம் ஆண்டு முதலாவது மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

அதனூடாக புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பல நன்மை அடைந்தனர். புகையிலைச் செய்கை குறைவடைந்து வெங்காயப் பயிர்ச் செய்கை பணப்பயிர்ச் செய்கையாக முன்னெடுக்கப்பட்டு வந்த காலப் பகுதியில் வெங்காயச் செய்கையை மையப்படுத்தி 1942 ஆம் ஆண்டு சுன்னாகத்தில் விவசாயக் கூட்டுறவாளர் சங்கம் ஸ்தாபிதம் செய்யப்பட்டது.

அது பின்னர் கிராம மட்டத்தில் விரிவடைந்து வெங்காயத்தை சந்தைப்படுத்துவதில் பெரும்பங்காற்றியது. 1951 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நீர்வேலி வாழைக்குலை விற்பனை கூட்டுறவுச் சங்கம் குறித்த பயிர்ச் செய்கையாளர்களுக்கு பல்வேறு நன்மை அளிக்கும் வகையில் தற்பொழுதும் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

புதிதாக ஸ்தாபிதம் செய்யப்படவுள்ள வெங்காயம், பழச்செய்கை, மிளகாய்ச் செய்கையாளர் அபிவிருத்தி உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்த வருடம் முற்பகுதியில் இருந்து தமது பணி முன்னெடுப்புக்களில் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடும் என்று கூறப்படுகிறது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணாச்சல பிரதேசத்தில் நிலநடுக்கம்

அருணாச்சல பிரதேச மாநிலத்தில் நேற்றுக் காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

வடகிழக்கு மாநிலமான அருணாச்சல பிரதேசத்தில் மேற்கு சியாங்க் மாவட்டத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 4.0 ஆக பதிவானது.

குறித்த நிலநடுக்கத்தால், அந்தப்பகுதியில் கட்டடங்கள் ஆட்டம் கண்டன. எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (வ)



டில்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற தசரா நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா உட்பட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். வில்லில் அம்பைப்பூட்டி தொடுக்கத் தயாராகின்றனர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி.

## ஜனாதிபதித் தேர்தல் நடைமுறைகளை பார்வையிட இந்தியக்குழு அமெரிக்கா பயணம்

விருதுநகர், ஒக்.26

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைமுறைகளைப் பார்வையிடுவதற்காக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோர் கொண்ட குழு இன்று அமெரிக்கா செல்லவுள்ளது. மேற்படி குழுவில் தமிழ கத்தில் இருந்து விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் இடம் பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, மிட் ரோம்னி இடையிலான போட்டியில் யாருக்கு வெற்றி என உலகம் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறது. தேர்தல் நடைமுறை களைப் பார்வையிட வருமாறு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று இந்தியக் குழுவினர் இன்று அமெரிக்கா புறப்படுகின்றனர். (வ)

# இந்திய அமைச்சரவையில் மாற்றம்


### ஈழத்தமிழர் பிரச்சினையைக் குழப்பிய கிருஷ்ணா 'வீட்டுக்கு' அந்த இடத்துக்கு வருவாரா ராஜீவின் மகன் ராகுல்

டில்லி, உக்.26

மத்திய அமைச்சரவை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாற்றியமைக்கப் பட உள்ளது. அமைச்சர்களாக இருக்கும் எஸ்.எம். கிருஷ்ணா, ஸ்ரீ பிரகாஷ் ஜெய்ஸ்வால், முகுல் வாஸ்னிக், வேணி பிரசாத் வர்மா, அகதா சங்மா ஆகியோர் நீக்கப்படும் அதே வேளை கிருஷ்ணாவின் பதவி பறிக்கப்பட்டு ராகுல் காந்தி அந்த இடத்தைப் பிடிக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய அமைச்சரவையை பெரியளவில் மாற்றி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் 14 இடங்கள் வெற்றிடமாக உள்ளன. இதில் பல புதுமுகங்கள் இந்த முறை மத்திய அமைச்சராகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





பிரதமர் மன்மோகன்சிங் அண்மையில் சோனியா, ராகுலுடன் ஆலோசித்து நீக்கப்படுபவர் மற்றும் சேர்க்கப்படுபவர்கள் பட்டியலைத் தயார் செய்தார்.

இன்று வெள்ளிக்கிழமை டில்லியில் காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய அமைச்சர்கள் பற்றி விவாதித்து இறுதி செய்யப்படும். அதைத் தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மத்திய அமைச்சரவை மாற்றம் அதிகார பூர்வமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவை மாற்றத்தின்போது எஸ்.எம்.கிருஷ்ணா, ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால், முகுல் வாஸ்னிக், வேணி பிரசாத் வர்மா, அகதா சங்மா ஆகியோர் நீக்கப்பட்டு கட்சிப்பணிக்கு அனுப்பப் படுவார்கள் என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈழத் தமிழர் பிரச்சினையை சரியாகக் கையாளாமல் குழப்பியது உட்பட வெளியுறவுத் துறையை திறம்படச் செய்யாததால் கிருஷ்ணாவுக்கு பதவி பறிபாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் ராகுல் காந்தி அமைச்சராக்கப்படலாம் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 14 அமைச்சர்களில் 10 பேர் ராகுல் காந்தி ஆதரவளர்களாக இருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## அமெரிக்காவில் இந்திய மூதாட்டி சுட்டுக்கொலை

பத்து மாதமே ஆன தனது பேர்த்தியை கடத்தல் காரர்களிடமிருந்து காப்பாற்ற முயன்ற இந்திய மூதாட்டி அமெரிக்கவின் புருஷியா பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆந்திராவின் பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்த 62 வயதான சத்யவதி வென்னா என்ற மூதாட்டியே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆந்திராவைச் சேர்ந்த வெங்கட கொண்டஷிவா வென்னா, சென்சுலதா தம்பதியினர் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் வசித்து வருகின்றனர்.

அவர்களுக்கு ஷான்வி என்ற 10 மாத பெண் குழந்தை உள்ளது. கடந்த ஜூலை மாதம் அமெரிக்கா வந்த வெங்கட கொண்டஷிவாவின் தாயார் சத்யவதி வெணா (வயது 62) அவர்களுடன் வசித்து வந்தார்.

சம்பவத்தன்று பேர்த்தியுடன் அடுக்குமாடிக் குடியிருப்பில் சத்யவதி இருந்த போது மர்மக்கும்பல் குழந்தையைக் கடத்த முயன்றது. இதனை எதிர்த்த சத்யவதியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு அந்தக்குழு தப்பியோடிவிட்டது. (வ)

## சட்டவிரோதமாக இயங்கி வந்த துப்பாக்கி தொழிற்சாலைக்கு சீல்

பீகாரில் சட்ட விரோதமாக இயங்கி வந்த துப்பாக்கித் தொழிற்சாலைக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் பாலான்பூர் மாவட்டம் சந்தால்பூர் தாலுகாவுக்குட்பட்ட லோட்ரா கிராமம் ஒன்றில் சட்ட விரோதமாகக் கள்ளத் துப்பாக்கித் தொழிற்சாலை இயங்கி வந்ததாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து பாட்னா எஸ்.பி பக்ராதா உத்தரவின் பேரில் பொலிஸார் அங்கு சோதனை நடத்தியபோது சட்டவிரோதமாக நாட்டுத் துப்பாக்கிகள், தோட்டாக்கள், பிஸ்டல்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்ததைக் கண்டுகொண்டனர்.

அதன்பின்னர் மேற்படி தொழிற்சாலைக்கு சீல் வைத்த பொலிஸார், மாவோயிஸ்ட்டுகளுக்கு விநியோகிக்க துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்டனவா என்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## டெசோ தீர்மானத்துடன் ஒக்.30 இல் ஐ.நாவுக்குச் செல்கிறார் ஸ்டாலின்

டெசோ மாநாட்டு தீர்மானங்களை கொடுப்பதற்காக, தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் எதிர்வரும் 30 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.



அவருடன், டி.ஆர்.பாலுவும் செல்கிறார். கடந்த 12 ஆம் திகதி சென்னையில் 'டெசோ' மாநாட்டை தி.மு.க. நடத்தியது. இதில் இலங்கைத்தமிழர்களின் மறுவாழ்வு, சம உரிமை, அரசியல் அதிகாரம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை அரசை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஐ.நா.சபைக்குச் செல்வோம் என்று, டெசோ மாநாட்டில், தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்திருந்தார். இதற்காக ஐ.நா., நிர்வாகிகளிடம் திகதி கேட்டு தி.மு.க., அணுகி இரண்டரை மாத இடைவெளிக்குப்பின், ஐ.நா. சபையின் அனுமதி கிடைத்துள்ளது. டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டு தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின், நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர், இம்மாதம், 30 ஆம் திகதி ஐ.நா. சபைக்கு பயணம் மேற் கொள்ளவுள்ளனர்.

நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா.சபையின் தலைமையகத்திலும், ஜெனிவாவில் உள்ள ஐ.நா.சபையின் அகதிகள் ஆணையத்திலும், மேற்படி தீர்மானங்களை அவர்கள் கையளிப்பர்.

ஈழத்தமிழர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட பிரச்சினைகளில் உடனடி நடவடிக்கை எடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று ஐ.நா. சபையிடம் வேண்டுகோளும் விடுக்கவுள்ளனர். (வ)

## அமெரிக்க வாழ் பிரபல இந்திய தொழிலதிபருக்கு 2 வருட சிறை

### அனான், பில்கேட்ஸ் தலையிட்டும் பயனில்லை

அமெரிக்காவின் மிக பிரபல இந்திய வம்சாவளி தொழிலதிபர் ராஜத் குப் தாவுக்கு, உள்வர்த்தக பரிமாற்ற குற்றச்சாட்டின் கீழ் இருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புகழ் பெற்ற நிர்வாக ஆலோசனை நிறுவனமான மெக்கின்சி குழுமத்தின் தலைவரான ராஜத் குப்தா, கோல்ட்மான் சாக்ச் குழுவினது இயக்குநராக மிகப் பிரபலமடைந்தவர். எனினும், கடந்த வருடம் உள்வர்த்தக பரிமாற்றம் தொடர்பிலான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு குற்றம் உறுதி செய்யப்பட்ட நிலையில் தண்டனைக்காக காத்திருந்தார்.

கொபி அனான், பில் கேட்ஸ் போன்ற பிரபலங்கள், ராஜத் குப்தாவுக்காகப் பரிந்து பேசியிருந்ததுடன், அவருக்குத் தண்டனை விதிக்கவிருந்த நீதிமன்றத்துக்குத் தமது கைப்பட கடிதம் எழுதி, ராஜத் குப்தாவின் பொதுநலச் சேவைகளை விளக்கி கூறியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ராஜத் குப்தா வுக்கு தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டது. அவருக்கு இரு வருட சிறைத் தண்டனையுடன், 5 மில்லியன் அமெரிக்க டொலர் தண்டப்பணமாக அறவிடப்படவுள்ளது. (வ)

## பணக்காரர் பட்டியலில் தொடர்ந்தும் முன்னிலையில் அம்பானி

போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள இந்திய பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

ரிலையன்ஸ் நிறுவனங்களின் தலைவரான முகேஷ் அம்பானியின் மொத்த சொத்து மதிப்பு 21 பில்லியன் டொலர் என்று போர்ப்ஸ் படி பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு கடந்த 3 ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்த போதிலும் 5 ஆவது ஆண்டாக இந்திய பணக்காரர்களில் தொடர்ந்து முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவரது சகோதரர் அனில் அம்பானி முதல் 10 இடத்துக்குள் கூட வரமுடியாமல் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளார். உலகளாவிய ஸ்டீல் தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் லட்சுமி மிட்டல் 16 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் 2ஆவது இடத்தில் உள்ளார். 12 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் விப்ரோ நிறுவனத் தலைவர் அஜிம் பிரேம்ஜி மூன்றாவது இடத்தில் உள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகருக்குச் சென்ற இத்தாலி ஜனாதிபதி ஜார்ஜியோ நாபோலிடனோ அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகிறார். அருகில் நெதர்லாந்து ராணி பீட்ரிக்ஸ்.

# அசாஞ்சேயின் உடல்நிலை மோசம்



விக்கிலீக்ஸ் நிறுவுநர் அசாஞ்சேக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாக ஈக்குவடோர் வெளிவிவகாரத் துறை துணை அமைச்சகம் தெரிவித்தது.

அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே.

இதனால் அசாஞ்சே மீது கடும் கோபத்தில் உள்ளது அமெரிக்கா. இந்தநிலையில் அசாஞ்சே மீது சுவீடன் அரசு பாலியல் வழக்கைத் தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக லண்டனில் தங்கியிருந்த அசாஞ்சே 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அதன்பின் பிணையில் வந்த அவர் லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார்.

தற்போது அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஈக்குவடோர் வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் மார்கோ அல்புஜா மார்டினஸ் கூறுகையில், அசாஞ்சேயின் உடல்நிலை மிக மோசமாக உள்ளது. அவரை மருத்துவமனையில் சேர்த்து உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கு பிரிட்டன் அரசு அனுமதி தரவேண்டும் என்று தெரிவித்தார்.

# தேசத்துரோகத்துக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

## ரஷ்ய நாடாளுமன்ற கீழ் சபை அங்கீகாரம்

தேசத்துரோகம் தொடர்பான சட்டங்களை கடுமையாக்குவதற்கான அங்கீகாரத்தை ரஷ்யாவின் நாடாளுமன்ற கீழ் சபை வழங்கியுள்ளது. எனினும் நாடாளுமன்றத்தின் மேல் சபை இதற்கான அங்கீகாரத்தை இன்னும் வழங்கவில்லை.


மேற்படி சட்டம் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில், அரசை எதிர்ப்பவர்களை இலகுவாகக் கட்டுப்படுத்தி அவர்களின் செயற்பாடுகளை ஒடுக்க முடியும் என விமர்சிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு, இறைமை, அரசமைப்பு போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தண்டனைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. அரசின் இரகசிய தகவல்களை வெளி நபர்களுக்கு வழங்குபவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனைகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் செயற்பாடுகள் எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்பட்டுவரும் நிலையில் புதிய சட்டம் பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது.

# போர் நிறுத்தத்துக்கு சிரியா இணக்கம்

## ஹஜ் பெருநாளை முன்னிட்டு



கெய்ரோ, ஒக்.26

ஹஜ் பெருநாளை முன்னிட்டு போர் நிறுத்தத்தை மேற்கொள்ள சிரியா இணங்கியுள்ளதாக ஐ.நா. அமைதித் தூதர் லக்தர் பிராஹிமி தெரிவித்துள்ளார்.

சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக்கோரி, கிளர்ச்சியாளர்கள், கடந்த 18 மாதங்களாகப் போராடி வருகின்றனர்.

இதுவரை 34 ஆயிரம் பேர் இந்தப் போரில் உயிரிழந்திருந்தனர். அசாத் பதவி விலக மறுப்பதால், கிளர்ச்சியாளர்களுக்கு, அமெரிக்கா, ஆயுதங்களை வழங்கி வருகிறது.

இதனால், சிரியாவில், கடும் போர் இடம்பெற்று வருகின்றது.

இருதரப்பிலும் சமரசத்தை ஏற்படுத்துவதற்காக, அரபு நாடுகள் மற்றும் ஐ.நாவின் சார்பில், அமைதித் தூதர் லக்தர் பிராஹிமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் எகிப்து தலைநகர் கெய்ரோவில் மேலும் தெரிவித்ததாவது:-

ஹஜ் பெருநாளை முன்னிட்டு போர் நிறுத்தம் மேற்கொள்வது குறித்து, இருதரப்பிலும் பேசினேன்.

போர் நிறுத்தத்துக்கு, இரு தரப்பினரும், ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

எனினும் இது தொடர்பான அதிகார அறிவிப்பை சிரியா அரசு, வெளியிடவுள்ளது.- என்றார்.

முஸ்லிம்களின் சிறப்பு நாளான ஹஜ் திருநாளை முன்னிட்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது- என்றார்.

(வ)

# விளம்பரப் படத்தில் பிரான்ஸ் அமைச்சர்




பிரான்ஸின் தொழில்துறை அமைச்சர் அரநூட் மொன்ரபேக் நாட்டின் வர்த்தகம் சிறப்படைய வேண்டும் என்ற நோக்கில் விளம்பரம் ஒன்றில் நடித்துள்ளார்.

இவர் ரீசேட் மற்றும் கைக்கடிகாரம் போன்றவற்றை அணிந்து விளம்பரத்தில் நடித்ததால் விற்பனை அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இவர் 'மேட் இன் பிரான்ஸ்' என்ற தலைப்பில் பிரசாரமொன்றை ஆரம்பித்தார்.

இதில், பிரான்ஸில் தயாரான பொருள்களையே அதிகமாக வாங்கவேண்டும் என்று பிரசாரம் செய்கிறார். இதன் காரணமாகவே பிரெஞ்சுத் தயாரிப்புகளை அணிந்து விளம்பரப்படத்தில் நடித்ததாகவும் கூறியுள்ளார். (வ)

# பொதுத்தேர்தலில் போட்டியிடுவேன் ஆதரவாளர்களுக்கு முஷாரப் அறிவிப்பு

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பேர்வேஸ் முஷாரப் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கைபர் பாக்துங்ஹாவா மாகாணத்தில் உள்ள சித்ரால் தொகுதியில் தான் போட்டியிடவுள்ளதாக அந்த நகர மக்களுடன் காணொலி உரையாடலில் தெரிவித்துள்ளதாக அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெனாஸிர் பூட்டோவின் கொலைவழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டதிலிருந்து துபாய் மற்றும் லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள முஷாரப் பாதுகாப்பு காரணங்களுக்காக நீண்டநாள்களாக நாடு திரும்பவில்லை. இதே வேளை, 2010 ஆம் ஆண்டு அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் முன்னணி கட்சியை ஆரம்பித்த முஷாரப், தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது ஆதரவாளர்களைத் தயார்படுத்தியிருந்தார்.

இந்தநிலையிலேயே சில வாரங்களில் பாகிஸ்தான் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தான் போட்டியிடவுள்ளதாக பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பேர்வேஸ் முஷாரப் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்தியா செல்கிறார் கனடா பிரதமர்



கனடா பிரதமர் ஸ்டீபன் ஹோர்பர் அடுத்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளார்.

இந்தியாவில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்வது இரண்டாவது முறையாகும். அவர் நவம்பர் 3-9 ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மேற்படி பயணத்தின் போது பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்திக்க உள்ளார்.

தனது பயணத்தின்போது ஆக்ரா, டில்லி, சண்டிகர் மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு ஸ்டீபன் ஹோர்பர் செல்லவுள்ளார்.

உலகப் பொருளாதார மன்றத்தில் உரையாற்றவும் திட்டமிட்டுள்ளார். அவருடன் கனடா அமைச்சர்கள், வர்த்தக மற்றும் கலாசாரப் பிரதிநிதிகளும் இந்தியா செல்லவுள்ளனர். (வ)

## நீச்சல் உடையில் பிரான்ஸ் ஜனாதிபதியின் காதலி:

# அட்டைப் படங்களில் அந்தரங்கம் 3 பத்திரிகைகளுக்கு அபராதம்

பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலண்டேயின் காதலி நீச்சல் உடையுடன் இருக்கும் படத்தை வெளியிட்ட மூன்று பத்திரிகைகளுக்கு, அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதியும் அவரது காதலி வெலெரி ட்ரைப்ர்வெய்லரும் விடுமுறையின்போது, மத்திய தரைகடல் பகுதியில் உள்ள ஒரு தீவுக்குச் சென்றனர். ஆள்கள் நடமாட்டமற்ற அந்தத் தீவில், இருவரும் நீச்சல் உடையில் குளித்தனர்.

அந்தக் காட்சியை பிரான்ஸ் நாட்டின் பிரபல மூன்று பத்திரிகைகள், அட்டைப் படமாக வெளியிட்டுள்ளன. ஜனாதிபதியின் காதலியின் அந்தரங்க விடயத்தை, அட்டைப் படத்தில் வெளியிட்டதற்காக, குறித்த பத்திரிகைகள் மீது, 17 இலட்ச ரூபா நட்ட ஈடு கேட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி வழக்கை விசாரித்த நீதிமன்றம், மூன்று பத்திரிகைகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது. (வ)

# கோமாளி வேடமிட்டு சின்னஞ் சிறுசுகளை துஷ்பிரயோகம் செய்த நபர் கைது



கோமாளி வேடம் அணிந்த நிலையில் சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்ததுடன் அதனை ஆபாச புகைப் படங்களாக இணையத் தளத்தில் வெளியிட்ட நபரொருவரை அமெரிக்கப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் இலினொய்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த மார்டின் எவினிக் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி நபர் சிறுமி ஒருவருடன் பாலியல் செற்பாட்டில் ஈடுப்படுவதை புகைப்படமெடுத்து அதனை இணையத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர், சிறுமியிடம் 2010 ஜூன் மாதத்திலிருந்து இத்தகைய செயற்பாட்டை தொடர்ந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எவினிக் தனது முகத் தளப்பக்கத்தில் தன்னை கோமாளிபோன்று சித்தரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர், த கோர் ஒப் யூவர் [illegible] எழுதியுள்ளார்.

எனினும் த கோர் ஒப் யூவர் நைட்மெயார்ஸ் இசைக் குழுவினர் குறித்த நபரை பேஸ்புக் இணையத்தளத்தில் ஏற்கனவே எச்சரித்துள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்துக்குத் தயாரான ஒபாமா - மிச்செல்

## ரோம்னியின் ஆதரவாளர்கள் சூடான தேர்தல் பிரசாரம்

அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா - மிச்செல் இருவரும் 2000 ஆம் ஆண்டு விவாகரத்துச் செய்வதற்கு பத்திரம் தயார் செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

2000 ஆம் ஆண்டு சிகாகோ சட்டபேரவையில் ஆசனமொன்றை வெல்ல முடியாது தோல்வி அடைந்ததை அடுத்து, ஒபாமாவும், மிச்செல்லும் விவாகரத்துச் செய்ய முடிவெடுத்ததாகவும், இதுதொடர்பிலான தகவல்கள் இன்று டொனாட் ட்ரியும் மூலமாக வெளியிடப்படும் என்று டக்ளஸ் காஸ் என்ற தொழிலதிபர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய வர்த்தகர்களில் ஒருவரும், தொலைக்காட்சி நிருபருமான டொனால்ட் ட்ரியுமுடன் நேற்று முன்தினம் சி.என்.பி.சி தொலைக்காட்சி நிகழ்வொன்றில் டக்ளஸ் காஸ் கலந்து கொண்ட போதே இது குறித்து கேள்விப்பட்டதாக டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் இரு வாரங்களே உள்ள நிலையில் தமது சூறாவளி இறுதிப் பிரசாரத்தில் ஒபாமா மற்றும் ரோம்னி தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஒபாமாவின் விவாகரத்து விவகாரம் வெளிவந்திருக்கிறது. இந்தத கவல்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் நிச்சயம் இம்முறை தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றனர்.

ஏற்கனவே 'த அமேஸர்' எனும் நூலில், மிச்செல் ஒபாமா விவாகரத்துக்கு ஆர்வம் காட்டியது தொடர்பில் தகவல்கள் வெளிவந் தன.

எனினும் 2005 இல் இலினோயிஸ் தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இருவரும் சேர்ந்து வாழ்வதில் நம்பிக்கை கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது நாள்வரை, விவாகரத்துக்கு முடிவெடுத்த ஜோடி, அரசியல் லாபங்களுக்காக பொய்யாகச் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று இப்போதே ரோம்னியின் ஆதரவாளர்கள் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஒபாமா - மிச்செல் திருமணம் முடித்து 20 வருடங்கள் கடந்த நிலையில் மாலியா (வயது 14), சாஷா (வயது 11) என இரு மகள்கள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## விற்பனைக்கு வருகிறது புரூஸ் லீயின் ஹொங்கொங் வீடு

பிரபல குங் பூ வீரர் புரூஸ் லீ ஹொங்கொங்கில் வசித்த வீடு ரூ.130 கோடிக்கு விற்பனை செய்யப் படவுள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த, பிஸ்ட் ஒப் ப்யூரி, என்டர் தி டிரா கன் ஆகிய படங்களில் நடித்து உலகப் புகழ் பெற்றவர் குங் பூ வீரர் புரூஸ் லீ.

அவர் 32 ஆவது வயதில் மர்மமான முறையில் இறந்தார். ஹொங்கொங்கில் கோவ்லூன் டோங் மாவட்டத்தில் இரண்டடுக்குக் கொண்ட கட்டடத்தில் அவர் இறுதியாக வசித்தார்.



460 சதுர மீற்றர் கொண்ட மேற்படி வீடு தற்போது விடுதியாகச் செயற்பட்டு வருகிறது. குறித்த கட்டடத்தை அருங்காட்சியகமாக அறிவிக்க வேண்டும் என்று புரூஸ் லீயின் ரசிகர்கள் பல காலமாக வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் அந்தக் கட்டடத்தின் உரிமையாளர் யூ பாங் லின் 130 கோடி ரூபாவுக்கு அந்த வீட்டை விற்கத் திட்டமிட்டுள்ளார்.

இதுகுறித்து யூ பாங் லின் கூறுகையில்; ரசிகர்களின் வேண்டுகோளை ஏற்று அரசுடன் பல முறை இந்தக் கட்டடத்தை அருங்காட்சியகமாக மாற்றுவது குறித்து பேசினேன். ஆனால் அரசு இதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

இனிமேலும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. தற்போது விடுதி நடத்தும் உரிமையாளரும், இரண்டு ஆண்டுகளாக வாடகை மிகுதி வைத்துள்ளார். எனவே கட்டடத்தை விற்க முடிவு செய்துள்ளேன்- என்றார். (வ)

## அணு ஆயுத சோதனைக்கு வடகொரியா தயாராகிறது

### தென்கொரியா குற்றச்சாட்டு

வடகொரியா மூன்றாவது அணு ஆயுத சோதனை செய்ய தயாராகி வருகிறது என்று தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் கிம்க்வான் ஜின் தெரிவித்தார்.

இதுகுறித்து வொஷிங்டனில் பேட்டியளித்த அவர், மேற்படி சோதனைக்கு வடகொரியா நீண்டகாலமாகத் தயாராகி வந்துள்ளது. அரசியல் ரீதியாக சரியான நேரத்தில் வடகொரியா அணு ஆயுத சோதனைக்கு தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

### ஒபாமா பற்றி அவதூறு பேச்சு:

## மன்னிப்புக் கோரினார் மிட் ரோம்னியின் மகன்



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பற்றி அவதூறாகப் பேசியதற்காக, எதிர்க்கட்சி வேட்பாளரான மிட்ரோம்னியின் மகன் மன்னிப்புக் கோரினார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. எதிர் வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது.

கடந்த 16 ஆம் திகதி நியூ யோர்க் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இரண்டாவது விவாதத்தின் போது, ஜனாதிபதி ஒபாமா- குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட்ரோம்னி ஆகியோர் விவாதம் நடத்திய போது ரோம்னியை ஒபாமா தனது பேச்சால் திணறடித்தார்.


இதுகுறித்து ரோம்னியின் மூத்த மகன் டாக் ரோம்னி வடக்கு கரோலினாவில் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ''நான் அங்கு இருந்திருந்தால் ஒபாமாவுக்கு மூக்குடைத்தாற் போல் பதிலடி கொடுத்து நாற்காலியை ஆட்டம் காண வைத்திருப்பேன்'' என்றார்.

இந்தப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து டாக் ரோம்னி, ஒபாமாவிடம் மன்னிப்புக் கோரினார்.

இதுகுறித்து டாக் ரோம்னி கூறுகையில், ஏதோ நகைச் சுவையாக கூறினேனே தவிர அப்படி ஒன்றும் தவறாகப் பேசவில்லை. தவறு இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள் என்றேன். ஒபாமாவும் மன்னித்து விட்டார்.- என்றார். (வ)

எழும்பிப் பிரகாசி - ஏசாயா 60:1

## வாழ்த்துகின்றோம்



தேவ பணியில் கடந்த 14.10.2012 அன்று நாற்பது வருடங்களை நிறைவு செய்துள்ள எமது போதகரின் இறைபணிக்காக இன்று கர்த்தருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறுவதையிட்டு நாமும் அவரை வாழ்த்துகின்றோம்.

**போதகர் ஜே.கே. பிலிப்**
தலைமைப் போதகர்
சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்

ஷாலோம் காடின்ஸ், இலவச கல்வி நிலையம்,
சீயோன் தேவாலயம் - காரைநகர்
(24724)(45.6.7)

## 13 ஆவது வருட நினைவு நாள்



**சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன்**

பிறப்பு 07.01.1932

இறப்பு 26.10.1999

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

7ஆம் கட்டை ஒழுங்கை, மல்லாகம். (24729)(6-7-45)

மனைவி, சகோதரங்கள்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, வட்டு. கிழக்கில் 12 பரப்பு பனைமரங்கள், வேப்ப மரங்கள் கொண்ட வீடு கட்டும் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
1. நா. மோகனதாஸ்
தொ.பே. 075 0532 761, 021 3202 426.
2. நா. மனோகரன்
தொ.பே.077 3013 652, 011 2323 318, 011 2555 571

(24661)(45.6.7)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வட மாகாண காணி நிர்வாகத்திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிசங்கத்தினால் நலன்புரிசங்கத்தின் வளர்ச்சி நிதிக்காக 24.10.2012 ஆம் திகதியன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு

முதலாம் பரிசினை வென்ற இலக்கம் : 3854
2ஆம் பரிசினை வென்ற இலக்கம் : 4061
3ஆம் பரிசினை வென்ற இலக்கம் : 8697
4ஆம் பரிசினை வென்ற இலக்கம் : 5561
5ஆம் பரிசினை வென்ற இலக்கம் : 9487


### ஆறுதல் பரிசில்கள் வென்ற இலக்கங்கள்

1. 5901 2. 5961 3. 7575
4. 6390 5. 2535

பரிசில்களை உரிய இலக்கச் சீட்டினைக்காட்டி 30.11.2012 இற்கு முன்னர் எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(24722)(6-7-45) செயலாளர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.07.1941

மறைவு 23.10.2007

அமரர்
**விஸ்வப் பிரம்மதாசன் துரையப்பா கோபாலகிருஸ்ணன்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், கணுக்கேணி கிழக்கு,முள்ளியவளை)

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறாதைய்யா உம் துயர்
இலட்சியப் பாதையில் சென்ற - உம்மை
இணைத்த தேனோ கால தூதன்.....

கே. கே. எஸ். றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24697) (5.6.7)

உம் நினைவில்..... குடும்பத்தினர் கோகுலன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(18)

கண்டித்தால், மறைமுகமாக சிகரெட் பிடிப்பவன், தந்தையின் எதிரிலேயே சிகரெட் பிடிப்பான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால் ஒரு புது வழியைக் கண்டுபிடித்தார்.



அவன் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த ராகவன் முப்பது வயதில் மாரடைப்பினால் இறந்துவிட்ட செய்தியை அவர் மனைவியிடம் சொன்னார். அவர் மகன் காதில் விழும்படி அதைச் சொன்னார். சிகரெட் பிடிப்பதால் புற்றுநோய் வருகிறது என்பது மட்டு மல்ல, சீக்கிரமே இருதயமும் பாதிக்கப்படு கிறது என்றார்.மீண்டும், மீண்டும் சிகரெட் பிடிப்பதால் ஏற்படும் விளைவுகளைச் சொல்லிக்கொண்டே போனார். சிகரெட் பிடிக்கத் தொடங்கிய விளையாட்டு வீரர்கள் பலர் சரியாக விளையாடாமல் தோற்றுப்போனார்கள் என்பதை விளக்கினார். சிகரெட் பிடிக்கும் பழக்கம் ஏற்பட்டவர்களுக்கு, சிகரெட் பிடிக்கும் நேரம் வந்துவிட்டதும்,வகுப்பில் சொல்லித் தரும் பாடங்கள் கூட மனதில் பதிவதில்லை என்றார்.

சிகரெட்டினால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்பதை அவர் மறைமுகமாக சொல்லிக்கொண்டு வந்தது வீண் போகவில்லை.

அவன் சிகரெட்டின் தீமைகளை உணர்ந்து, சிகரெட் பிடிப்பதை அறவே விட்டுவிட்டான்.

ஒரு கம்பெனியில் திடீரென்று ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்தால் தினமும் ஒரு சில லட்சங்கள் நஷ்டம் ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு கம்பெனி.

வேலை நிறுத்தம் செய்தவர்களில் சில பெண்களும் இருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் மட்டும் உள்ளே போய் தன் வேலையைச் செய்ய விரும்பினாள். ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் அவளைத் தடுத்து நிறுத்தி, ''நீ மட்டும் ஏன் போக வேண்டும்'' என்று கேட்டார்.

''ஐயா! நான் தினமும் அலுவலகத்தைச் சுத்தமாகப் பெருக்கி, மேசை நாற்காலிகளைத் துடைப்பவள். இன்று ஒரு நாள் நான் அதைச் செய்யாவிட்டாலும், அலுவலகத்தில் குப்பைகள் கிடக்கும். மேசை நாற்காலிகளில் அழுக்குப் படிந்திருக்கும் இல்லையா? என் வேலை பொறுப்பானது. ஆகவே வழிவிடுங்கள்''

அவள் ஒருத்தி உள்ளே போய், அலுவலகத்தைச் சுத்தமாக வைத்திருப்பதால் என்ன ஆகிவிடப் போகிறது என்று எண்ணி தலைவர் அவளை அனுமதித்துவிட்டார். மேலும் வேலைக்குப் போகும் எவரையும் கட்டாயமாகத் தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

அவளுடைய செயல் கம்பெனியின் முதலாளியைச் சிந்திக்க வைத்தது.

கேவலம், அலுவலகத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யும் பெண், தான் ஒரு முக்கியமானவள் என்று கருதி வேலைக்கு வந்திருக்கிறாள். மற்றவர்கள் இவளைப் போல தன் கடமையை உணர்ந்தால் என்ன என்று எண்ணினார். அதற்காக ஒரு திட்டம் போட்டார்.

தொழிலாளர்களின் சில கோரிக்கைகளை ஏற்று, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறும்படி செய்தார். பிறகு அலுவலகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரிடமும் தனியாகப் பேசி, அவர்கள் இல்லாமல் எப்படி எதையும் சீராக ஒழுங்காகச் செய்ய முடியாததை வலியுறுத்தினார்.

முதலாளியே முக்கியத்துவம் கொடுத்து ஒவ்வொருவரிடமும் பேசியதன் விளைவாக ஒவ்வொருவருக்கும் தான் மிக முக்கியமானவன் என்ற பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது. அதன்பிறகு, பல ஆண்டுகள் ஆகியும் அந்தக் கம்பெனியில் மறுபடியும் வேலை நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது.

**உங்களுக்கு உதவ மற்றவர்களை அனுமதியுங்கள்**

நாம் மற்றவர்களை நம் பக்கம் கவர்ந்து இழுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பலர் தமது நண்பர்களுக்கு உதவி செய்கிறார்கள். அவர்களைப் பாராட்டும்படி நடந்து கொள்கிறார்கள். ஆனால் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டும். நமக்கு மற்றவர்கள் உதவ முன்வந்தால், அவர்களுக்கு வழிவிட்டு அந்த உதவியையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சுரேஷும், சங்கரும் நண்பர்கள். அவர்கள் சந்திக்கும் போதெல்லாம் ஹோட்டலுக்குப் போவார்கள். சினிமாவுக்குப் போவார்கள். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஹோட்டலில் பில்லை சுரேஷ் பிடுங்கிக் கொள்வான். சினிமாவில் ஓடிப்போய் சுரேஷ்தான் டிக்கெட்டை வாங்குவான். சங்கரைச் செலவு செய்யவே விடமாட்டான். இதனால் சங்கருக்கு ஏகப்பட்ட வருத்தம்.

''நான் அவனைவிட வசதியில் கொஞ்சம் குறைந்தவனாக இருக்கலாம். ஒரு நாளாவது ஹோட்டலில் பில்லைக் கொடுக்க எனக்கு விட்டுக்கொடுக்கக் கூடாதா?

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# பாராட்டுக்காக படிப்பதால் எந்த நன்மையையும் மாணவர்கள் அடையப்போவதில்லை

## யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

மாணவர்களை வாழவைக்கக் கூடிய அறிவுரைகளைச் சொல்லிக் கொடுப்பதாக படிப்பு அமைய வேண்டும். மாறாக பாராட்டுக் காகப் படிப்பதால் மாணவர்கள் எந்த நன்மையையும் அடையப் போவதில்லை. தற்கால சூழலில் பாராட்டுக்குரிய கல்விமுறையையே மாணவர்கள் மத்தியில் காணக்கூடியதாக உள்ளது என்று யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவ.சரவணபவன் (சிற்பி) தெரிவித்தார்.

அம்பிகைபாகனின் 'ஆளுமைத்தடம்' எனும் நூல் வெளியீடு கடந்த 19 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வாழ்த்துரை நிகழ்த்தும் போதே சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பகால கற்றல் முறைமைகள் மாணவர்களுக்குக் கல்வி அறிவை மட்டுமல்லாது, வாழ்க்கையின் முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்திருந்தன. ஆனால் இன்று அவ்வாறான சூழலைக் காணமுடியாதுள்ளது. தமக்கும், தமது உறவுகளுக்கும் பாராட்டு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக படிக்கிறார்கள்.

இதன் காரணமாக பெரும்பாலான மாணவர்கள் கட்டாயத்துக்காக கல்வியைக் கற்பதுடன், கற்றலில் ஒருவித வெறுப்பு உடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதை செவிமடுப்பதைக் குறைத்துக்கொள்கிறார்கள். இவைதவிர சமயம் சார்ந்த விழாக்கள் பாடசாலையில் நடைபெறுவதில்லை. இதனால் சமய சம்பிரதாயங்களை மாணவர்கள் கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள்.

மாணவர்கள் மத்தியில் நல்ல கருத்துகளைக் கொண்டுசெல்வதாக பாடசாலைகளில் நடத்தப்படும் விழாக்கள் அமைந்துவிடுகின்றன. இதன் காரணமாகவே ஆரம்பகாலங்களில் எல்லாவிதமான விழாக்களும் அந்தந்தக் காலத்துக்கு ஏற்ப நடத்தப்பட்டு வந்தன.

ஆனால் தற்கால கற்றல் முறைமை மாற்றம் பெற்றுள்ளது மட்டுமல்லாமல், மாணவர்களும் எந்தவித ஈடுபாட்டையும் காட்டாமல் கட்டாயத்துக்காக கற்கிறார்கள். எனவே சமய விழாக்கள் உட்பட ஏனைய விழாக்களும் பாடசாலைகளில் நடத்தப்பட வேண்டும். அதன் மூலம் மாணவர்கள் நல்ல பண்புகளை மட்டுமல்லாது, எமது பண்பாடுகளையும் உணர்ந்து கொள்வார்கள். சமயப் பண்புகளுடன் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறும்போது பற்றுள்ளவர்களாகவும், சிறந்த பண்புடையவர்களாகவும் மாணவர்கள் உருவாகுவார்கள்-என்றார்.

(எ-14)



ஆசிரிய ஆலோசகர் து.துசியந்தனின் கண்டிக்கால ஓவியங்கள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வை.இரவீந்திரன் நூலை வெளியிட்டு வைத்தார். (எ)

# போரினால் மரங்களை இழந்து விட்டோம் அவற்றை ஈடுசெய்ய கன்றுகளை நடுவோம்

## சாவகச்சேரி நகரசபை துணைத் தலைவர் அழைப்பு

தென்மராட்சி,ஒக்.26

கடந்த காலப் போரில் எமது பிரதேசங்களில் உள்ள மரங்களைப் பெருமளவில் இழந்துள்ளோம். அவற்றை ஈடுசெய்ய மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் அனைத்து இடங்களிலும் மரக்கன்றுகளை நடவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

உயிரினங்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராணவாயுவையும் மற்றும் உணவு, நீர் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் தாவரங்கள் வழி சமைக்கின்றன. அவ்வாறான தாவரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் எமது எதிர்காலத்தை வளப்படுத்தமுடியும் என சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்தார்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகைத்திட்ட நிகழ்வு சாவகச்சேரி சங்கத்தானை முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சதாசிவமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கு உகந்தகாலம் இதுவாகும். உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதவை உணவு, நீர், காற்று என்பன அனைவருக்கும் தெரிந்த விடயமே. சூரிய ஒளியைப் பயன்படுத்தி உணவைப் பெறவும், சுவாசத்தின் போது வெளிவிடப்படும் கரியமில வாயுவை மீண்டும் பிராணவாயுவாக்கவும் மழையைக் கிடைக்கச் செய்யவும், வெப்பம் அதிகரிக்காது பாதுகாக்கவும் மரங்களே பெரிதும் உதவுகின்றன.

அனைத்து உயிரினங்களுக்கும் நன்மை பயக்கும் பெருமரங்களை நட்டு வளர்க்கும் பொறுப்பு ஆறறிவு படைத்த மனிதகுலத்துக்கே உரியது.

இந்த மாதம் மரம், செடி,கொடிகளை நட்டு வளர்ப்பதற்கு உகந்த காலமாகும். எமது நகர்ப் பிரதேசத்தில் உள்ள மக்கள் ஒவ்வொருவரும் எமது எதிர்கால நலன் கருதி தமது நிலங்களிலும், பொது இடங்களிலும் மரக்கன்றுகளை நட்டு எதிர்காலச் சந்ததிக்கு உதவ வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு சில பயன்தரு மரங்களையாவது நடுவோம் என திடசங்கற்பம் பூண்டு செயற்படுவோம்-என்றார்.

(எ-9)

# பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றோர்

தீவக வலய மட்டத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வெளிவந்துள்ளது.

பிரிவு-4

1 ஆம் இடம்-பே.சரணியா-காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், 2 ஆம் இடம்-சி.துர்க்காயினி-காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், 3 ஆம் இடம்-சி.சசிதா-நயினாதீவு கணேச வித்தியாலயம்.

பிரிவு-5

1 ஆம் இடம்-வே.தவேஸ்வரராஜா-காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், 2 ஆம் இடம்-வே.தவரூபி-புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயம், 3 ஆம் இடம்-செ.குகதாஸ்-புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

பிரிவு-6

1 ஆம் இடம்-தி.கிருசாந்தி-யாழ்றரன் கல்லூரி, 2 ஆம் இடம்-இ.கிரிசா-யாழ்றரன் கல்லூரி, 3 ஆம் இடம்-க.கலைமதி-வேலணை மத்திய கல்லூரி. (எ-7)

# வவுனியாவில் முதலிடம்

வவுனியா,ஒக்.26

சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான லண்டன் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் வவுனியா மாணவன் நோலா சாம்சன் உயர் சித்தியைப் பெற்று, அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

சர்வதேசப் பாடசாலைகளுக்கு இடையில் லண்டன் கல்வி நிலையத்தால் அகில இலங்கை ரீதியிலான பரீட்சைகள் நடத்தப்பட்டன.

மாணவன் நோலா சாம்சன் 5ஏ தரச் சித்திகளையும், 2பி சித்திகளையும் பெற்று அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டார்.

மேலும் எவ்.நந்துகன் 4 விசேட சித்திகளையும் 2பி தரச் சித்திகளையும் ஒரு சாதாரண சித்தியையும் பெற்று இரண்டாம் இடத்தையும், என்.ஆர்வலன் 4 விசேட சித்திகளையும் ஒரு சிறப்பு சித்தியையும் 2 சாதாரண சித்திகளையும் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.

வவுனியாவில் இருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய 10 மாணவர்களும் சித்திபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## போர் முடிந்தாலும் தொடரும் தமிழ்ப் பெண்களின் அவலம்

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் கழிந்துள்ளபோதும், இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மீதான கொடுமைகள், வன்முறைகள், பாலியல் தொந்தரவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவற்றுக்கு இன்னும் முடிவில்லை. இன்னமும் தமிழ்ப் பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அந்தக் கொடுமைகள் பல வடிவங்களில் இன்றும் நடக்கின்றன. அவற்றில் இப்போது, முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, புதிய மகஸின் சிறைச்சாலை ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பெண் அரசியல் கைதிகள் மீது, கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடுமைகள்தான்.

இந்த மூன்று சிறைச்சாலைகளிலும் உள்ள தமிழ்ப் பெண் அரசியல் கைதிகள் மீது இராணுவத்தினரும், கடற்படையினரும் மேற்கொள்ளும் பாலியல் ரீதியான கொடுமைகள் குறித்து, அந்தக் கைதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு முறையிடத் தீர்மாணித்திருக்கிறார்கள். தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளை, சோதனை என்ற பெயரில் கேவலமான முறையில் முழு நிர்வாணமாக்கி, மேற்கொள்ளப்படும் இந்த பாலியல் ரீதியான கொடுமைகளினால், அந்தக் கைதிகள் மனமுடைந்து, விரக்தியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பாவம் இந்தத் தமிழ்ப் பெண்கள். தமிழர்களாக இருப்பதால் தான் இந்த கேவலமான–அருவருக்கத்தக்க கொடுமைகள் அவர்களுக்கு இழைக்கப்படுகின்றன என்பது உண்மை.

சிறைத் துறைச் சட்டத்தின்படியும் விதிமுறைகளுக்கு அமைவாகவும் சிறைக் கைதிகளை சிறை அதிகாரிகளைத் தவிர, வேறு எவரும் சோதனை செய்ய முடியாது. ஆயினும், இந்த 3 சிறைச்சாலைகளிலும் நீதிக்குப் புறம்பான வகையில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக தமிழ்ப் பெண் அரசியல் கைதிகளை கடற்படையினரும் இராணுவத்தினரும் சட்டத்துக்கு முரணாக சோதனை செய்கின்றனர். மிகக் கேவலமான முறையில் அவர்களை பத்து, பதினைந்து தடைவைகள் இருத்தி எழுப்பி, கேலிச் சிரிப்புக்களையும் உதிர்த்துக்கொண்டே படைத்தரப்பினர் இந்தக் கைங்கரியங்களை நிகழ்த்துகின்றனர். தமது குடும்பத்தில் உள்ள அக்கா, தங்கைகளைப் போன்றவர்கள் தான் இவர்களும் என்று கிஞ்சித்தும் நினைக்காமல், அவர்கள் இந்தக் கேவலமான கொடூரத்தை ஏன்தான் செய்கிறார்களோ தெரியவில்லை. படையினரின் இந்தச் செயலுக்கு சிறை அதிகாரிகளும் ஒத்து ஊதி வருகின்றனர். அத்துடன் தமிழ்ப் பெண் கைதிகளைப் பார்த்து இழிவான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு சிறைகளில் வாடும், தமிழ்ப் பெண் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசையும் சிறைச்சாலைகள் அமைச்சையும் சார்ந்தது. கைதிகளாக இருந்தாலும் அவர்கள் மானபங்கப்படுத்தப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆகவே, தமிழ்ப் பெண் அரசியல் கைதிகள் பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவது உடன் தடுக்கப்பட வேண்டியதொன்று.

# எங்கே போகிறது யாழ்ப்பாணம்?



*தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் சரி ஆயுதப்போராட்ட இயக்கத் தலைவர்களும் சரி யாழ்ப்பாணத்திலிருந்தே உருவானார்கள். தொண்டர்கள்வன்னி, கிழக்குஎன அனைத்து பாகங்களிலிருந்தும்உருவானார்கள்.*

■ இரா.துரைரட்ணம்

யாழ்ப்பாணம் என்பது ஈழத்தமிழர்களின் அடையாளமாகப் பேசப்படும் பிரதேசம். அதற்காக மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை ஆகிய பிரதேசங்கள் குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை. இருந்தபோதிலும் ஈழத்தமிழர் என்றதும் சர்வதேச அரங்கிலும் சரி உள்நாட்டிலும் சரி யாழ்ப்பாணமே அதன் அடையாளமாக முக்கியத்துவம் பெறுவதுண்டு.

அண்மையில் வடபகுதிக்கு சென்ற வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூட வெளிநாடுகளில் யாழ்ப்பாணத்தின் நிலைமை பற்றி அவதானித்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார். ஈழத்தமிழர்களின் நிலைமைகளை அறிவதற்கு வெளிநாட்டு இராஜதந்திரிகளும் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கே சென்று வருகின்றனர். சர்வதேச இராஜதந்திரிகளின்பார்வை மட்டுமல்ல, கொழும்பின் பார்வையும் யாழ்ப்பாணத்தின் பக்கம்தான் உள்ளது.

சர்வதேச சமூகங்களிடம் மட்டுமன்றி தென்னிலங்கையில் இருக்கும் சிங்கள மக்களைப் பொறுத்த மட்டிலும் இலங்கைத் தமிழர் என்ற கோட்பாடு ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களையே குறித்து நின்றது. சிங்கள மக்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில், வேலை செய்யும் இடங்களில் உள்ள தமிழர்களைக் கொண்டே இக்கருத்தினை பெற்றுக்கொண்டார்கள். யாழ்ப்பாணத் தமிழர்களே தென்னிலங்கையில் அரச உத்தியோகங்களில் இருந்தனர்.

இலங்கையில் தமிழர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை என பரந்து வாழ்ந்து வருகின்றனர். எனினும், இலங்கை மக்கள் மத்தியில் முதலாளித்துவ அரசியல் உறவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்திலிருந்து யாழ்ப்பாண சமூகமே முழுத்தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்வதான ஒரு தோற்றப்பாட்டினை நடைமுறையில் கொண்டிருக்கிறது எனப் பேராசிரியர் சிவத்தம்பி யாழ்ப்பாணம் என்ற தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்குப் பல காரணங்கள் உண்டு. கல்வி, பொருளாதாரத் துறைகளில் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களை விட யாழ்ப்பாணம் உயர்ந்திருந்ததும், அரசியல் தலைவர்களும் சரி விடுதலைப்போராட்ட தலைவர்களும் சரி யாழ்ப்பாண மண்ணிலிருந்தே அறியப்பட்டதும் அவற்றில் சில.

விடுதலைப்போராட்டத்தின் விளைநிலமாக, வீரத்தின் உறைவிடமாக, எதிரிக்கு விலைபோகாத, மக்கள் [illegible] ருக்கிறது. இலங்கையிலிருந்து முதன் முதலாக வெளிநாடுகளுக்குப் பர்மா, இந்தியா ஏன் அமெரிக்கா வரை கப்பல் ஓட்டியதும் யாழ்ப்பாணத் தமிழன் என்ற பெருமை உண்டு. சேனை, குரக்கன் பயிர்களைச் செய்து உண்டு வந்த இலங்கை மக்களுக்கு பர்மாவிலிருந்து முதன் முதலாக நெல்லைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியவர்கள் யாழ். வடமராட்சி கப்பல் ஓட்டிகள் என்பது வரலாற்றில் காணும் விடயமாகும். இலங்கையின் பிரதான உணவாக இன்று அரிசி காணப்படுகிறது. அதனை அறிமுகப்படுத்தியதும் யாழ்ப்பாணத் தமிழன் என்ற வரலாறு பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இலங்கையிலேயே கல்வியில் உயர்ந்த நிலையில் யாழ்ப்பாணம் இருந்தது என்பதும் பல அறிஞர்களை உருவாக்கியது என்பதும் வரலாறு.

வன்னி, மற்றும் கிழக்கு பிரதேச மக்கள் விவசாயத்திலும் கடற்தொழிலிலும் தமது முழுக்கவனத்தை செலுத்தியிருந்த காலத்தில் கல்வியை மட்டும் நம்பியிருந்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் திகழ்ந்தது.

இதன் காரணமாக சிங்கள அரசுகள் தமிழர்களின் கல்வியில் அரச வேலைவாய்ப்பில் தடைக்கற்களைப் போட்டபோது அவை போராட்டமாக வெடிக்க ஆரம்பித்தன. தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்திற்கு மூல காரணமாக இருந்த சிங்களம் மட்டும் சட்டம் வன்னி மக்களையோ மட்டக்களப்பு மக்களையோ பாதிக்கவில்லை. பாதித்தது அரச உத்தியோகத்தை நம்பி வாழ்ந்த யாழ்ப்பாண மக்களை தான். ஆனால், சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வடக்கு, கிழக்கு அனைத்துமக்களும்தான்போராடினார்கள்.

அதுபோல ஆயுதப் போராட்டத்திற்கும் இளைஞர்களின் எழுச்சிக்கும் காரணமாக இருந்த பல்கலைக்கழக தரப்படுத்தலால் வன்னி மாணவர்களோ கிழக்கு மாணவர்களோ பாதிக்கப்படவில்லை. யாழ்ப்பாண மாணவர்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அதனால், உருவான ஆயுதப் போராட்டத்தில் யாழ்ப்பாண இளைஞர்கள் மட்டும் இணைந்து கொள்ளவில்லை. வடக்கு, கிழக்கு ஏன் மலையக இளைஞர்களும் இணைந்து கொண்டார்கள். அந்த தியாக தீயில் வெந்து போனார்கள். தமிழ் அரசியல் கட்சிதலைவர்களும் சரி ஆயுதப்போராட்ட இயக்க தலைவர்களும் சரி யாழ்ப்பாணத்திலிருந்தே உருவானார்கள். தொண்டர்கள் வன்னி, கிழக்கு என அனைத்து பாகங்களிலிருந்தும் உருவானார்கள்.

காலப்போக்கில் வன்னியிலும் கிழக்கிலும் உள்ள இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்து கொள்ள 1990களின் பின் அந்த போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு பெருந்தொகையான யாழ்ப்பாண இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு சென்றார்கள். வன்னியிலும் கிழக்கிலும் உள்ள இளைஞர்கள் அவர்கள் வெளிநாடுகள் பற்றி சிந்திக்கவில்லை. போராட்டத்திற்காக தங்களை அர்ப்பணித்து செத்து மடிந்தார்கள். அகிம்சை போராட்டத்திலும் சரி ஆயுதப்போராட்டத்திலும் சரி ஆரம்ப விளைநிலமாக இருந்த யாழ்ப்பாணம் இப்போது எங்கே செல்கிறது?

ஒரு காலத்தில் கல்விமான்களையும் சட்டத்தரணிகளையும் தமது பிரதிநிதிகளாக அனுப்பிய யாழ்ப்பாணம், இன்று ஊடகவியலாளர் நிமலராஜன் உட்பட மனித உரிமை செயற்பாட்டாளர்களைப் படுகொலை செய்த, தமிழகத்தில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர்களை அல்லவா தமது பிரதிநிதியாக நாடாளுமன்றத்துக்கு அனுப்புகிறது.

1956இல் இருந்து 1983 வரை தென்னிலங்கையிலிருந்து தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு அவர்களின் தாயகத்திற்கு அனுப்பப்பட்டபோது அதில் பெருந்தொகையாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள் தான். அதன் தொடர்ச்சியாக யாழ். மண்ணிலிருந்து ஆயுதப் போராட்டமும் வெடித்தது. அந்த ஆயுதப் போராட்டத்தில் எந்தச் சம்பந்தமும் இல்லாத அப்பாவி மக்களும் இலங்கை ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். முள்ளிவாய்க்கால்வரை ஏன் அதன் பின்னரும் சிங்கள ஆட்சியாளர்கள் செய்த கொடுமைகளை உண்மையான தன்மானம் உள்ள எந்தத் தமிழனாலும் மறக்க முடியாது.


ஆனால், சிங்கள ஆட்சியாளர்கள் செய்த கொடுமைகளையும் தமது உறவுகளுக்கு நடந்த கோரக்கொலைகளையும் யாழ்ப்பாணம் மறந்து விட்டதா என்ற கேள்வி இன்று எழுகிறது. மறக்கவில்லை என்றால் எப்படி சிங்கள ஆட்சியாளர்களின்பிரதிநிதிகளாக கடந்த பொதுத்தேர்தலில் நான்கு பிரதிநிதிகளையாழ்ப்பாணம் தெரிவு செய்தது?

கடந்த பொதுத்தேர்தல் என்பது தமிழினத்தின் பேரவலமான வன்னி அழிவு இடம்பெற்று சில காலத்தில் நடந்ததாகும். அத்தேர்தலில், தமிழ் மக்களைப் படுகொலை செய்த அதே சிங்கள கட்சிக்கு 47ஆயிரம் யாழ்ப்பாண வாக்காளர்கள் வாக்களித்து 3 பேரை தெரிவு செய்து தமது பிரதிநிதிகளாக அனுப்பியிருந்தார்கள்.

அதேபோன்று உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் 47ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஆளும் கட்சியான சிங்களப் பேரினவாதக் கட்சிக்கு வாக்களித்தது மட்டுமன்றி 3 பிரதேச சபைகளையும் அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று பிரதேச சபைகளைச்சிங்களப் பேரினவாதக்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் ஒப்படைத்திருந்தார்கள். (வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மிரட்டும் மின்னல்...



கையடக்கத் தொலைபேசியை மழை வேளையில் பாவனைக்கு உட்படுத்தியோர் மின்னல் தாக்குதலுக்கு இலக்கான சம்பவங்களே அதிகம்.



சுகந்தன்

மழைமேகக் கூட்டங்களுக்கிடையே உள்ள அணுத்துகள்கள் தமக்கிடையே உராய்வை மேற்கொள்வதன் மூலம் மின்னேற்றம் பெற்றுவிடுகின்றன.

இவ்வாறு பெறப்பட்ட மின்னேற்றம் அணுக்களில் நேர், எதிர் ஏற்றங்கொண்ட அணுக்கள் அருகருகே வரும்போது மின்னோட்டக் கவர்ச்சி விசை தோன்றி அதன் மூலம் காற்றின் வழியே மின்சாரம் பிறப்பிக்கப்படுகின்றது.

இவ்வாறு தோன்றுவதே இடியுடன் கூடிய மின்னலென விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

இந்த நிகழ்வு இடம்பெறும்போது இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் தோன்றினாலும் ஒலியை விட பல்மடங்கு வேகம் கூடியதாக ஒளி பயணிப்பதால் வானில் நடைபெறும் இந்த அதிசய நிகழ்வின் வெளிப்பாடான மின்னல் முதலில் எமக்குத் தோன்றுகிறது. அதனைத் தொடர்ந்து கூடவே இடியின் சத்தமும் எம் காதுகளை எட்டுகிறது.

முன்னைய காலங்களில் இடி, மின்னல் பற்றிய அச்சம் எம் மத்தியில் காணப்பட்டது. மின்னலைக் கண்டவுடன் அதைத் தொடர்ந்து வரும் இடிச்சத்தத்துக்கு அஞ்சி பாதுகாப்பைத் தேடிய காலம் தற்போது அருகிவிட்டது.

காரணம் இன்றைய நவீன விஞ்ஞான உலகில் இடிமின்னலின் தாக்கங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் அவற்றின் பாதிப்பிலிருந்து தப்பிக்கும் உத்திகள் கையாளப்பட்டன. பரவலாக இடிதாங்கிகள் முக்கியமான இடங்களில் பொருத்தப்பட்டன.

எனவே பொதுமக்கள் இடிமின்னல் பற்றிய அச்சம் அகன்று சர்வசாதாரணமாக வாழப்பழகியிருக்கின்றனர்.

இது இவ்வாறு இருக்க நாட்டில் கடந்த பல மாதங்களாக நிலவிய வறட்சி நிலை மெல்லமெல்ல அகன்று தற்போது படிப்படியாக மழைவீழ்ச்சி பதிவாக ஆரம்பித்துள்ளது.

இது எமக்கு நல்ல செய்தியாக இருந்தாலும் மறுபுறம் இடி மின்னல் தாக்கத்துக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையும் தற்போது படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. இந்த முறை வடக்கிலேயே அதிகளவான மின்னலின் தாக்கங்கள் இதுவரை பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம் இராசபாதை கோப்பா யில் அண்மையில் வெளியான நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர்களை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பிற்பகல் 3.30 மணியளவில் கடும் மழை பொழிய ஆரம்பித்தது. உடனே அந்த தோட்ட வெளியிலுள்ள தற்காலிகக் கொட் டகைக்குள் அவர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

மரங்கள் குறைவான வெட்ட வெளிப் பிரதேசமாகக் காணப்பட்ட அந்த இடத்தில் உள்ள சிறு கொட்டகைக்குள் இரு துவிச்சக்கர வண்டிகள் மட்டுமே காணப்பட்டன. மழை சோனாவாரியாகத் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயம் மின்னல் அந்தக் கொட்டகையைப் பதம் பார்த்தது.

அங்கு வேலையாள்களுக்கு தேநீர் பரிமாறச் சென்ற பெண் உட்பட மூவர் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். அங்கிருந்த வேறொரு பெண் ஒருவர் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த சமயமே மின்னல் தாக்கியதாகவும் அப்பெண்ணின் கையடக்கத் தொலைபேசி வெகு தூரத்துக்கப்பால் தூக்கி வீசப்பட்டுக் கிடந்ததாகவும் சம்பவத்தில் காயமடைந்த பெண் கூறினார்.

எனினும் அந்தப்பெண் சிறு காயங்களுடன் தப்பியுள்ளார். இங்கு மின்னைக் கவரக்கூடிய இரும்பாலான துவிச்சக்கர வண்டிகளைத் தவிர கைபேசியே மின்னைக்கவர உந்துசக்தியாக இருந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து சில நாள்களில் நெடுந்தீவுக் கடற்படை முகாமில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிப்பாய்ஒருவர் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த வேளை மின்னல் தாக்கத்துக்கு இலக்கானார்.

இவர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரங்களில் சிகிச்சைபயனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேபோல கரம்பனில் மின்கம்பமொன்றில் திருத்தப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பணியாளர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இதுவரை சுமார் ஆறுக்கும் மேற்பட்டோர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

'இவ்வாறான சம்பவங்களிலிருந்து பார்க்கும் போது கையடக்கத் தொலைபேசியை மழை வேளையில் பாவனைக்கு உட்படுத்தியோர் மின்னல் தாக்குதலுக்கு இலக்கான சம்பவங்களே அதிகமாகப் பதிவாகியுள்ளது. எனவே கைபேசிப் பாவனையில் தமது பொன்னான நேரங்களை வீணடிக்கும் பலர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

மின்னல் மூலம் கடத்தப்படும் மின்சாரம் விழித்திரையையும் பார்வை நரம்புகளையும் பாதிப்பதன் மூலம் மனிதன் தனது கண் பார்வையை இழக்க நேரிடுகிறது.

எனவே இடிமின்னலில் இருந்து தப்பித்துக் கொள்ளும் வழிவகைகளை நாம் கையாளவேண்டியது அவசியமாகும்.

பெரும்பாலும் உயரமான பொருள்கள் மீதே மின்னல் இலகுவில் தாக்குகிறது. உதாரணமாக கூட்டமாக மனிதர்கள் நடந்து சென்றால் அவர்களில் உயரமான மனிதரே மின்னல் தாக்குக்கு இலக்காவார்கள். அதே போல உயரமான மரங்களும் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி எரிந்து போகின்றன.

ஆனால் தேக்கு, தென்னை போன்ற மரங்களை உயரமான கட்டடங்களுக்கு அண்மையில் வளர்ப்பதன் மூலம் மின்னலைப் பூமிக்குக் கடத்திவிட முடியும். யாழ். நகர மத்தியில் மிக உயரமான தொலைத்தொடர்புக் கோபுரங்கள் அமைந்துள்ளன.

எனவே அதற்கு அண்மையிலுள்ள பகுதிகள் மின்னல் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் சாத்தியம் உள்ளது.

ஏனெனில் உயரமான கட்டடங்கள், கோபுரங்களின் உச்சிகளில் இடிதாங்கி பொருத்தப்பட்டு அது நேரடியாக பூமிக்குக் கடத்தப்படுகிறது.

எனவே இடிமின்னல் தாக்கத்திலிருந்து பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென கொழும்பு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள், வெட்டவெளியான வயல்கள் மற்றும் தோட்ட வேலைகளில் ஈடுபடும் விவசாயிகள் இடி மின்னல் குறித்து அவதானமாக இருக்குமாறு வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

தற்போதுதான் மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் பல்வேறு மின்னல் தாக்கச் சம்பவங்கள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. எனவே உரிய பாதுகாப்பான நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலம் எதிர்வரும் நாள்களில் அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் முனையவேண்டும். ★

# ஐந்திலே வளர்த்தெடுப்போமே...

சோபிதா தவேந்திரன்
தேசியக் கல்வியியற் கல்லூரி.

"ஒரு சிறந்த கல்விச் சூழலை சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. கல்வி கற்பதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமையை அவர்கள் பூரணமாக அனுபவிப்பதற்குரிய வழிவகைகளை நாமே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

"இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்'' என்னும் முதுமொழிக்கிணங்க எதிர்காலச் சந்ததியைச் சிறந்த ஒரு சமுதாயமாகக் கட்டியெழுப்ப வேண்டிய தலையாய பணி இன்றைய சமுதாயத்தினரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எதிர்கால சமூகம் அறிவுள்ள, ஆரோக்கியமுள்ள, தன்னம்பிக்கையுள்ள, ஒற்றுமையுள்ள, உறுதியுள்ள, நேர்மையுள்ள சமூகமாகத் திகழ வேண்டுமாயின் அதன் ஆணிவேராக இருக்கும் சிறுவர்களின் நலனில் நாம் ஒவ்வொருவரும் பங்கேற்பது இன்றியமையாததொன்றாகும்.

அத்திபாரம் பலமுள்ளதாக அமையும் போது தான் எழுப்பப்படும் கட்டடமும் உறுதியுள்ளதாக அமைய முடியும். எனவே சிறுவர்களின் உரிமைகளுக்கு பங்கம் விளைவிக்கும் சக்திகளை இனங்கண்டு அவற்றைக் களைவது சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

எதிர்காலம் ஓர் அறிவுள்ள சமூகமாக அமைய வேண்டுமாயின் ஒவ்வொரு சிறுவனுக்கும் கல்வியறிவு அவசியமாகின்றது. அவன் கல்வி கற்று முன்னேறுவதற்குத் தடையாக இருக்கும் காரணிகளை அகற்ற வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரின் கைகளில் இருக்கின்றது. ஒரு சிறந்த கல்விச் சூழலை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் கடமையாகவும் இருக்கின்றது. கல்வி கற்பதற்கு அவனுக்கிருக்கும் உரிமையை அவன் பூரணமாக அனுபவிப்பதற்குரிய வழிவகைகளை நாமே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலம் கல்விமான்கள் நிறைந்த கலைக்கூடமாக திகழ முடியும்.

ஒழுக்கமுள்ள, நன்னடத்தையுள்ள ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதும் அவசியமாகின்றது. அதாவது சிறுவர்களாக இருக்கும் போதே அவர்களுக்குள் இருக்கும் தீய ஒழுக்கக் கேடுகளைக் களைதல் வேண்டும்.

ஏனெனில் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்றெல்லாம் எம் முன்னோர்கள் சொல்லித் தந்ததற் கிணங்க முளையிலே கிள்ளி விடுவது சுலபமல்லவா? சிறுவயதிலே மதுபோதை, களவு, பொய், என்பவற்றிலிருந்துசிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். அவற்றால் ஏற்படும் தீங்குகளைப் பற்றி அவர்களுக்குச் சுட்டிக் கூறுதல் வேண்டும். அதில் ஈடுபட்டவர்களுக்கு நேரும் கதி பற்றி எடுத்துக் காட்டி விளக்கம் அளித்தல் வேண்டும்.

ஆரோக்கியம், உறுதியுள்ள ஒரு சமூகத்தை உவாக்க நாம் ஒவ்வொருவரும் அரும்பாடுபட வேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", "சுத்தம் சுகம் தரும்'' எனும் பொன் மொழிகளுக்கிணங்க சிறுவர்களை நோய் நொடியில்லாமல் பாதுகாக்க வேண்டும். சோம்பலின்றி துள்ளித் திரியும் சிட்டுக்குருவிகளாக மாற்ற வேண்டும். சுறுசுறுப்பும் துடிப்புமுள்ளசமுதாயம்உருவாகவழிசெய்யவேண்டும்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'', "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' "ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு'' என்பதற்கிணங்க ஒற்றுமையுள்ள, சமுதாயம், சகோதரத்துவம், போன்ற பண்புகளடங்கிய ஒரு சமுதாயமே எமக்குத் தேவைப்படுகின்றது. "தனி ஒருவர் சமுதாயத்துக்காகவும், சமூகம் தனியொருவருக்காகவும் இயங்க வேண்டும்'' என்னும் கூட்டுறவுக் கொள்கையுடையவர்களாக திகழ வைத்தல் வேண்டும்.

எனவே எதிர்காலச் சமூகம் சிறந்த சிற்பிகளாக, தலைவர்களாக, அறிவுமான்களாக, உறுதியுள்ளவர்களாக, ஒற்றுமையுள்ளவர்களாக, ஆரோக்கியமுள்ளவர்களாகத் திகழ வேண்டுமாயின், இன்றைய சிறுவர்களின் உரிமைகள் பேணப்பட்டுபாதுகாப்பளிப்பது நம் ஒவ்வொருவரினதும், கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவப் புதல்வன்

**த**னது ஒரேமகனை மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்தாள் அமுதா. இளம் வயதிலேயே கணவனை இழந்து விட்ட அவள், தன் மகனின் மூலமாக வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கனவு கண்டாள். ஆனால், அதிலும் அவளுக்கு ஒரு மனக்குறை இருந்தது. தன் மகன் மூலமாக இந்தச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழ ஆசைப்பட்ட அவள், அந்த மகன் பயந்த சுபாவம் உள்ளவனாக இருப்பதைக் கண்டு வருந்தினாள்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்று சொல்வார்கள். ஆனால் வீரனான தன் கணவனின் வாரிசு ஒரு பயந்தாங்கொள்ளியாக இருப்பதை அவள் விரும்பவில்லை. அதன்காரணமாக பல வழிகளில் தன் மகனுக்கு வீர உணர்ச்சி ஏற்படும் படியான கதைகளை அவள் சொல்லி வந்தாள். அவனும் கதைகளைக் கேட்பதில் ஆர்வமுள்ளவனாக இருந்தான்.

''அம்மா.... இன்று ஏதாவது கதை இருக்கிறதா..?'' என்று அவன் கேட்டான்.

தன் மகன் சிறிது சிறிதாக மாறி வருவதைக் கண்ட அந்தத் தாய் மகிழ்ச்சியடைந்தாள். ''ஆமாம், இன்றைக்கும் உனக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன் என்று கூறிவிட்டுக் கதையைத் தொடங்கினாள்.

கருவுற்றிருந்த சிங்கம் ஒன்று ஒரு நாள் ஆட்டு மந்தையைத் தாக்கியது. அந்த வேகத்தில் ஒரு சிங்கக் குட்டியை ஈன்று விட்டு தன் உயிரை விட்டது. அந்தச் சிங்கக் குட்டி ஆட்டுமந்தைகளுடனேயே வளர்ந்து வந்தது. அதனால் அந்தச் சிங்கக் குட்டியும் ஆடுகளைப் போலவே உள்ள ஒருவித சுபாவத்தினை அடைய வேண்டியதாயிற்று.

யாருடன் நாம் சேருகின்றோமோ அவர்களின் குணம் எமக்கு வருவதைப் போல அந்தச் சிங்கக் குட்டி ஆடுகளைப் போலவே நடந்து கொண்டது. ஒரு சமயம் அந்த ஆட்டு மந்தை மேய்ச்சலுக்குப் புறப்பட்டுச் சென்றது. அடர்ந்த புல்வெளியில் அவை மேய்ந்து கொண்டிருந்த போது, திடீரென்று ஒரு சிங்கம் அந்த வழியே எதிர்ப்பட்டது. ஆட்டு மந்தைகளின் கூட்டத்தைக் கண்டதும், இன்று தனக்கு நல்ல இரை கிடைத்தது என்று எண்ணி அவைகளைத் தாக்குவதற்கு ஓடி வந்தது.

சிங்கத்தைக் கண்ட ஆடுகள் கதிகலங்கி அங்கு மிங்கும் கலைந்து ஓடத் தொடங்கின. அப்போது அந்த ஆட்டு மந்தைகளிடையே வாழ்ந்து வந்த சிங்கக் குட்டியும் பயந்து தலைதெறிக்க ஓடியது. தாக்க வந்த சிங்கம் அந்தக் காட்சியைக் கண்டு வியப்படைந்தது. 'தன்னைப் பார்த்து ஆடுகள் ஓடுகின்றன... அது இயற்கை. ஆனால் தன் இனமான சிங்கக் குட்டி என்னைப் பார்த்து ஏன் ஓட வேண்டும்..? என்று அதற்குப் புரியவில்லை. மிக வேகமாக ஓடிச்சென்று அந்தச் சிங்கக்குட்டியைப் பிடிக்க முயன்றது.

மேலும் பயந்துபோன அந்தச் சிங்கக்குட்டி தன்னைத் தாக்க வரும் சிங்கத்தின் கைகளில் அகப்படக்கூடாது என்று எண்ணி மிக வேகமாக ஓடத் தொடங்கியது. ஆனால் சிங்கம் விடவில்லை. அது மேலும் வேகமாக ஓடிச்சென்று, அந்தச் சிங்கக்குட்டியைப் பிடித்தது. அப்போது அது, 'மே... மே...' என்று கத்தத் தொடங்கியது.

அதைக் கேட்டு நகைத்த அந்தச் சிங்கம், ''நீ, ஏன் ஆடுகளைப் போல் கத்துகிறாய்... நீ சிங்கம்... நீ சிங்கம்...'' என்று பலமுறை கூறியது. அப்போது அந்தச் சிங்கக் குட்டிக்கு நம்பிக்கை வரவில்லை. அது திரும்பவும், 'மே... மே...' என்று ஆடுகளைப் போலவே கத்தத் தொடங்கியது. சற்று யோசித்த சிங்கம் ஓர் இறைச்சித் துண்டை எடுத்துச் சிங்கக் குட்டியின் வாயில் பலாத்காரமாகத் திணித்தது. இரத்தத்தின் சுவையை அறிந்ததும் தானும் ஒரு சிங்கம் என்பதை அந்தச் சிங்கக் குட்டி புரிந்து கொண்டது. இதுதான் கதை என்று சொல்லி முடித்தாள் அமுதா.

தன் மகனைப் பார்த்து அவள் மேலும் கூறுகிறாள். ''மகனே...! சிங்கக்குட்டியாக இருந்தும் அது தன்னை ஆடாக நினைத்துக் கொண்டு பயந்து ஓடியது. அதனுடைய உண்மையான சுபாவம், வீரம்தான். ஆனால் பயந்த சுபாவமுள்ள ஆடுகளுடன் அது பழகி வந்ததால், கோழையைப்போல் ஓடியது. உனக்கு மேலும் ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். உன் அப்பா மிகப் பெரிய வீரர். நியாயங்களைத் தட்டிக் கேட்கத் தயங்காதவர். உயிரைத் துச்சமென மதிக்கக்கூடியவர். நியாயத்துக்காக அவர் உயிரை அர்ப்பணித்தார். அநியாயங்களுக்கு அடிபணிய மறுத்த அவரைச் சில வஞ்சகர்கள் கோழைகளைப் போல மறைந்திருந்து தாக்கிக் கொன்றார்கள்.

''அந்தத் துயரம் என் மனதில் ஆறாத வடுவாக இருந்து கொண்டிருக்கிறது. உனக்கு இதையெல்லாம் சொல்லக் கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால் அவற்றைச் சொல்ல வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டு விட்டது. அந்த வஞ்சகர்கள் மத்தியில் நாம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். நீ வீரனாக உருவாக வேண்டும்.

''தன் பணபலத்தாலும் செல்வாக்காலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விட்ட அந்த வஞ்சகர்களை அதேசட்டத்தின் மூலம் நீ நீதியை நிலைநிறுத்தி அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். ஆம்! நீ சிறந்த வழக்கறிஞராக உருவாக வேண்டும். என் ஆசைகளை நிறைவேற்றுவாயா...'' என்று அவள் கேட்டாள்.

இப்போது அந்த மகனுக்கு எல்லாமே விளங்கத் தொடங்கியது. தன் தாயின் மனதில் இருந்த துயரத்தை நீக்க வேண்டியது தன் கடமை என்பதை அவன் நன்கு தெரிந்து கொண்டான். அவனுக்குள்ளே மறைந்து கிடந்த வீர உணர்ச்சியை அந்தத் தாய் தூண்டி விட்ட காரணத்தால் அவன் தெளிவினைப் பெற்றுவிட்டான்.


''அம்மா... உங்கள் ஆசையை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன். என் அறிவுக் கண்களைத் நீ திறந்து வ[illegible]வ வஞ்சித்துக் கொன்ற வஞ்சகர்களைச் சட்[illegible]ன். தகுந்த பாடம் கற் பிப்பேன்'' என்று அவ[illegible]

தன் மகனின் வீரமொழிகளைக் கேட[illegible]ற மகிழ்ச் சியை அடைந்தாள்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# காலவோட்டத்துக்கு ஏற்ப வளர்ச்சி பெறும் கோப்பாய் கந்தவேள் த.க.வித்தியாலயம்



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

**கோ**ப்பாய் கல்விக் கோட்டத்தில் வசந்தபுரத்தில் அமைந்திருக்கும் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை காலவோட்டத்துக்கும் கல்விக்கொள்கை மாற்றத்துக்கும் ஏற்ப வளர்ந்து வருகிறது. பொருத்தமான கவின்நிலையுடன் கூடிய வகுப்பறைக் கட்டமைப்போடு குறித்த சமூகச் சூழலில் வசிக்கும் சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு வளம் சேர்த்துள்ளது.

**ஞானி**

பாடசாலைச் சமூகம் பாடசாலையின் தேவைகளை இனங்கண்டு பொருத்தமாக நிறைவு செய்துள்ளது. அந்த வகையில் விளையாட்டு மைதானத்துக்கான 8 1/2 பரப்புக் காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டது. சில்வரில் பாடசாலையின் பெயர் வளைவு டாக்டர் வி.தியாகராசாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. பிரான்ஸில் வசிக்கும் பழைய மாணவி திருமதி சிவஇன்பதேவி பத்மநாதன் கணினியை அன்பளிப்புச் செய்துள்ளார். தற்பொழுது கனடாவில் வசிக்கும் பழைய மாணவன் தர்மலிங்கம் கேதீஸ்வரநாதன் தனது தாயாரின் நினைவாக 14 லட்சத்துக்கு மேற்பட்ட செலவில் 40 X 25 அடி அளவிலான மண்டபம் ஒன்றை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றார். இவை பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகம் வழங்கி வரும் உதவிக்கு எடுத்துக்க்காட்டாக முன்வைக்கப்படுகின்றன. இந்த வகையில் பல உதவிகளைப் பட்டியல் படுத்தலாம்.

**பாடசாலை மட்டத்திலான வகுப்பறை மட்டத்திலான மன்றச் செயற்பாடுகள் மற்றும் கலை நிகழ்வு கள், ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் உரிய அட்ட வணையின் பிரகாரம் நடத்தப்பட்டு மாணவர்களின் திறன்கள், தேர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுவதோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.**

வலிகாமம் கிழக்கின் கரையோரத்தில் அமைந்திருக்கும் இந்தப் பாடசாலை அண்மைக்கால பாதிப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. இந்த வகையில் பாடசாலையின் ஆவணங்கள் சொத்துக்கள் முற்றாக இழந்த நிலையில் சேதமடைந்த கட்டடத் தொகுதி மட்டும் எஞ்சியிருந்தது. இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து கட்டடங்கள் ஷெல்தாக்குதலால் சேதமடைந்தன. இடம் பெயர்ந்த நிலையில் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்று வந்தன. இந்த வகையில் 1995 இல் இருந்து 2001 ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் செயற்பட்டன.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு கால கட்டங்களில் உறுதுணையாக இருந்து உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் நன்றியறிதலோடு பாடசாலைச் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றனர். அதிபர்களாக க.கந்தையா 1954-1955, க.மார்க்கண்டு 1955-1978, அ.சுப்பிரமணியம் 1978-1984, செ.குணசிங்கம் 1984-1989, வ.வேலாயுதபிள்ளை 1989-1995, தி.சோமசேகரம் 1995-2001, செ.செல்வநாயகம் 2001-2002, சு.விவேகானந்தன் 2002- 2003, திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் 2003-2003, மா.சிவபாலசுந்தரம் 2003-2007, சு.விவேகானந்தன் ஆகியோர் கடமையாற்றினர். 2007-11-24 ஆம் திகதி யிலிருந்து தற்போதைய அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

1960 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தரம் 8 வரை வகுப்புகள் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டு கனிஷ்ட வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்ட பாடசாலையில் கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை அறிமுகம் செய்யப் பட்டது. அது நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் கோப்பாய் கொத்தணிக் கட்டமைப்பில் உள்ளடங்கப்பட்டிருந்ததோடு கொத்தணி அதிபரின் சிபார்சுக்கு அமைய மீண்டும் 1981 ஆம் ஆண்டு தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாக தரம் குறைக் கப்பட்டது. தரம் 6 முதல் இன்று வரை எட்டு வரையான மூன்று வகுப்புக்களிலும் கல்வி கற்று வந்த மாணவர்கள் கோப்பாய் கொத்தணியில் உள்ளடக்கட்டிருந்த கோப்பாய் மகாவித்தியாலயம் மற்றும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அன்று முதல் ஆரம்பப் பாடசாலையாகவே செயற்பட்டு வருகின்றது.

மனித முயற்சியினால் சூழலை மாற்ற முடியும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் ஆரம்பக்காலப் பகுதியில் வெட்ட வெளியில் காணப்பட்ட பாடசாலை வளவு தற்பொழுதுபயன்தரும் மரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்படுகின்றது. இத்தகைய மாற்றத்தை உருவாக்குவதில் பாடசாலைச் சமூகத்தோடு இணைந்த நிலையில் குறித்த காலப் பகுதியில் கடமையாற்றிய அதிபர்,ஆசிரியர்கள் அயராது உழைத்துள்ளனர். அதன் வெளிப்பாட்டை தற்பொழுது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

2009 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்தில் தரம் 3 முதல் தரம் 4 வகுப்புக் களுக்கான கவிநிலையோடு கூடிய புதிய வகுப்பறை நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் நிதி உதவியுடன் மாணவர்களுக்கான மதிய உணவு சமைப்பதற்கான சமையல்கூடம் நிர்மாணிக் கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டு சிறுவர்களின் மனமகிழ்வுக்கான அம்சங்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் பாடசாலை முன்பக்க மதில் மற்றும் வளைவும் நிறுவப்பட்ட தோடு வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப் பட்டது.

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் வளர்ந்து வரும் ஆரம்பப் பாடசாலையான கந்தவேள் மாணவர்கள், மாணவர் மட்டத்தில் நடைபெறும் அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்துடன் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் ஆர்வத்தோடு நிறைவு செய்து வருகின்றனர். பாடசாலை மட்டத்திலான வகுப்பறை மட்டத்தி லான மன்றச் செயற்பாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள், ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் உரிய அட்டவணையின் பிரகாரம் நடத்தப்பட்டு மாணவர்களின் திறன்கள், தேர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுவதோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைக்கான தண்ணீர்த்தாங்கி, மாணவர்களுக்கான மலசலகூட வசதி, சுற்றுமதில் என்பன நிறைவு செய்யப்பட வேண்டிய அவசியமான தேவை என பாடசாலையின் அதிபர் சு.விவேகானந்தன் தெரிவித்தார். பாடசாலையில் நிறைவு செய்யக் காத்திருக்கும் அவசிய தேவைகளையும் வறிய மாணவர்களுக்கான கற்றல் வள வசதியையும் வழங்குவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் வசதி படைத்தோர் முன்வர வேண்டும் என்பதே பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதிப் பத்திரமின்றி சுருக்கு வலை மீன்பிடி

## மட்டு.மாவட்டத்தில் சட்ட நடவடிக்கை

எருவில்,ஒக்.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுருக்கு வலையின் மூலம் மீன்பிடிப்பதற்கான எந்தவித அனுமதிப்பத்திரங்களும் மாவட்ட கடற்றொழில்திணைக்களத்தால் வழங்கப்படாத நிலையில், சட்டத்துக்கு முரணாக இந்த மாவட்டத்தில் சுருக்கு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

சுருக்கு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் மீன்பிடி வலை 225 மீற்றருக்கு உட்பட்டதாகவும் 25 மீற்றர் ஆழத்துக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும், 7 கடல் மைல்களுக்கப்பால் செல்லக்கூடியதாக வலை இருக்க வேண்டும், ஒளி பாய்ச்சி மீன்பிடித்தல் தடை செய்யப்படுகின்றது. இத்தகைய கடற்றொழில் அமைச்சின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டால் சுருக்கு வலை மீன் பிடித்தலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது என்று அவர் கூறினார். எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மீனவருக்காவது இத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப் படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ச-31)

## பொலிஸ் சாவடி நீக்கம்



ஒலுவில்,ஒக்.26

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக இருந்த பொலிஸ் சோதனை சாவடியும், வீதித் தடையும் அகற்றப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் இருந்த வீதித் தடையும், பொலிஸ் சோதனைச் சாவடியுமே தற்போது அகற்றப்பட்டுள்ளன. பல்கலைக்கழக சூழலில் பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்தமை குறித்து கடந்த காலங்களில் பல்வேறு தரப்புக்களில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன.

சில வருடங்களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களுக்கு சில அசம்பாவிதங்கள் ஏற்பட்ட பகுதியிலேயே, தென்கிழக்குப் பல்கலைக் கழத்துக்கு சமீபமாக குறித்த பொலிஸ் சோதனைச் சாவடியும், வீதித் தடையும் அமைக்கப்பட்டன.

தற்போது அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித்ரோகணவின் உத்தரவுக்கமையவே இந்த வீதித் தடையும், சோதனைச் சாவடியும் அகற்றப்பட்டுள்ளன. பொலிஸ் பேச்சாளராகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண, அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ச)

அதிபர் மீது தாக்குதல்:

## இறக்காமம் மத்திய கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

அதிபர் எஸ். எம். இஸ்மாயில், இறக்காமம் பிரதேச பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்

இறக்காமம்,ஒக்.26

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியின் அதிபர், ஆசிரியர் ஒருவரினால் தாக்குதலுக்கு உள்ளானதைக் கண்டித்தும், உரியவரை உடனடியாக கைதுசெய்யுமாறு கோரியும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலையைப் பகிஷ்கரித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான கல்லூரியின் அதிபர் எஸ். எம். இஸ்மாயில், இறக்காமம் பிரதேச பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் கூறினர்.

அதிபர் கடமையின் நிமித்தம் சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற விழுமியம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துவிட்டு வீடு செல்வதற்காக வெளியேவந்த சந்தர்ப்பத்திலேயே குறிப்பிட்ட ஆசிரியரினால் தாக்குதலுக்குள்ளானார் என்று கூறப்படுகின்றது.

சம்மாந்துறையிலிருந்து அஷ்ரப் மத்திய கல்லூரியில் கற்பிக்க பத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வருகின்றனர். இவர்களின் வருகையில் காலதாமதம் காரணமாக குறிப்பிட்ட அதிபரால் பல முறை எச்சரிக்கை செய்யப்பட்டும், தொடர்ந்தும் குறித்த நிலை நீடித்து வருவதை அடுத்து தனது நிர்வாக நடவடிக்கையை கடுமையாக மேற்கொள்வேன் என்று அவர் கூறினார்.

இதன் எதிரொலியாகவே குறித்த தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று தமண பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கிழக்கு மாகாணத்துக்குச் சென்ற இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் மிச்சல் ஜே சிசன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டை சந்தித்துக் கலந்துரையாடினார்.

## தொடரும் குளவித் தாக்குதல்: நடவடிக்கை எதுவுமில்லை

### நேற்றும் 20 பேர் பாதிப்பு

டிக்கோயா,ஒக்.26

டிக்கோயா, சாஞ்சிமலை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது குளவி தாக்கியதில் 20 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

குளவியின் தாக்குதலுக்கு உள்ளான 20 பெண் தொழிலாளர்கள் கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மலையகத் தோட்டப் பகுதிகளில் அண்மைக் காலமாக கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் குளவியின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றமை அதிகரித்துச் செல்கின்றது.

குளவிகளின் அதிகரிப் பால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவது குறித்து நாளாந்தம் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. ஆனால் இதனைக் கட்டுப்படுத்த தோட்ட நிர்வாகம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

இந்த அசமந்தப்போக்குக்குக் காரணம் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் மீது அக்கறை எடுக்காமல் இருப்பதே என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (ச)

## அழகுமிக்க நகரமாகும் கல்முனை சுத்தம் பேணும் திட்டம் ஆரம்பம்



எருவில்,ஒக்.26

ஐக்கிய நாடுகள் சபையின் 67ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகரத்தை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிபினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்முனை நகரத்திலுள்ள கழிவுப் பொருள்களை அகற்றல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யுனெப்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனை நகரை அழகுமிக்க நகரமாக பேணும் பொருட்டு கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் கழிவு சேகரிக்கும் தொட்டிகளும் தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் 2 கழிவு சேகரிக்கும் தொட்டிகளும் நிறுவப்பட்டன. (ச-31)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் சம்பள உயர்வு வழங்குக

### வலியுறுத்துகிறது தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம்

நுவரெலியா,ஒக்.26

விலைவாசி ரொக்கெட் வேகத்தில் நாளாந்தம் அதிகரிப்பதால் வாழ்க்கைச்சுமை அதிகரித்து மக்கள் வாழ்வதற்கு வழியின்றித் திண்டாடுகின்றனர்; வறுமை தலைவிரித்தாடுகின்றது. எனவே, சகல தொழிலாளர்களுக்கும் அரசு உடனடியாக சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு, பொது வாசக சாலை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன்று வாழ்க்கைச்சுமை நாளாந்தம் அதிகரித்துவருவதால் சகல தொழிலாளர்களும் பொது மக்களும் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் அவர்கள் மத்தியில் வறுமை தலைவிரித்தாட தொடங்கியுள்ளது.

நாளுக்கு நாள் அத்தியாவசியமான பொருள்களின் விலைகளை அரசு அதிகரிப்பதுடன், போக்குவரத்து செலவினங்களையும் அதிக வரி சுமையையும் மக்கள் மீது திணித்து வருகின்றது. ஆனால், வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்கேற்ப சம்பள உயர்வை அரசு தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை.

குறிப்பாக இன்று பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு நாளாந்தம் சகல கொடுப்பனவுகளையும் சேர்த்து 515 ரூபா நாள் சம்பளமாக வழங்கப்படுகின்றது.

இந்த 515 ரூபாவை பெறுவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் மாதாந்தம் சராசரியாக நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் வேலை செய்திருத்தல் கட்டாயமாகும்.

ஆனால், கடந்த சில மாதங்களாக பெருந்தோட்டத்துறையில் கடும் வறட்சி நிலவியது. இதனால் தோட்ட தொழிலாளர்களுக்கு 12- 17 வேலை நாள்களே வழங்கப்பட்டிருந்தன. எனினும், அவர்களுக்கு வறட்சிக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை.

எனவே, அடுத்த வருடத்துக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்கும் இன்றைய வாழ்க்கை செலவு அதிகரிப்பதற்கு முகம் கொடுக்கும் ரீதியில் 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்று கொடுக்க அரசு முன்வர வேண்டும். பெருந்தோட்ட துறை தொழிலாளர் போன்று ஏனைய அரசதுறை கூட்டுத்தாபனம், தனியார் துறை தொழிலாளர்களுக்கும் இந்தச் சம்பள உயர்வு வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் வசீகர ஆற்றலுடன் செயற்படுவீர்கள். ஆரம்பிக்கும் பணிகளில் நிதானமும், செயல்திறனும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். நண்பரின் முக்கிய தேவைக்கு சிறியளவில் பண உதவி செய்வீர்கள்.

**இடபம்:** உங்கள் நண்பர் வியப்புடன் பார்க்கும் நிலை ஏற்படும். தொழில் வியாபாரம் வளர்ச்சிபெற கிடைக்கிற வாய்ப்புக்களைத் தவறாமல் பயன்படுத்துவீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். உத்தியோகத்தர் இலக்குகளை நிறைவேற்றி நிர்வாகத்திடம் பாராட்டுப் பெறுவர்.

**மிதுனம்:** அவசரமான பணிகள் அல்லல் தரலாம். குடும்ப உறுப்பினர்களிடம் விரக்தி மனப்பாங்குடன் பேசக்கூடாது. பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்க வேண்டாம். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்துவதால் திட்ட இலக்கு நிறைவேறும்.

**கடகம்:** உங்கள் உடல் சோர்வினால் செயல்களில் தாமதம் இருக்கும். முக்கியமான பணிகளை பிறரிடம் கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் குளறுபடியைச் சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**சிங்கம்:** உங்கள் மனதில் உண்மையின் மீதான நம்பிக்கை வளரும். நண்பரின் உதவி கிடைத்து மகிழ்ச்சி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி எளிதாக நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கன்னி:** உங்கள் சொல்லும், செயலும் சிறப்பு பெற குல தெய்வ அருள் பலம் துணை நிற்கும். முக்கிய பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த எதிர்மறை சூழ்நிலை சரியாகும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணம் வசூலாகும்.

## நாளை

ஐப்பசி -11 சனிக்கிழமை 27.10.2012
திதி: திரயோதசி மு.இ.11.12 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி, சித்தம் மு.இ 11.46வரை
சுபநேரம்: 03.03-04.33 வரை
ராகுகாலம்: 09.03- 10.33 வரை
சனிப்பிரதோஷ விரதம்

**துலாம்:** உங்கள் மனதில் இனம்புரியாத கவலை ஏற்படலாம். செயல்களில் தாமதமாகும் குளறுபடியும் இருக்கும். தொழில் வியாபாரம் சீர்பெற சக தொழில் நண்பர்களின் உதவி உண்டு. எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் மனக்குறையை உறவினர்களிடம் பகிர்ந்து கொள்ள எண்ணுவீர்கள். அதிகமாகப்பேசி அதிருப்திக்கு உட்படாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் சராசரி நிலையைப்பெற கூடுதல் உழைப்பு உதவும். வெளியூர் பயணத்தை பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**தனுசு:** உண்மை, நேர்மை குணங்களை அதிகம் பின் பற்றுவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பீடு உயரும். தொழில், வியாபாரம் வளர அனுகூல காரணி பலம் பெறும். பணவரவு திருப்திகரமாகும். ஓய்வுநேரத்தில் இசையை ரசித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உங்களிடம் பழகிறவர்களின் சூழ்நிலைகளை அறிந்து பேசுவது நல்லது. இதனால் இரு தரப்பிலும் உள்ள நம்பிக்கைக்குக் குறையேதும் வராமல் தவிர்க்கலாம். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**கும்பம்:** உங்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும். உங்களைச் சார்ந்தவர்களின் முக்கிய தேவைகளுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பணவரவில் இலாபவிகிதம் அதிகரிக்கும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**மீனம்:** முரண்பட்ட மனிதர்களைச் சந்திக்கும் நிலை ஏற்படும். பொறுமையுடன் பேசுவதால் வீண்வாக்குவாதத்தைத் தவிர்க்கலாம். உத்தியோகத்தர் பணியாளர்களின் கோரிக்கையை இயன்ற அளவில் நிறைவேற்றுவதால் உற்பத்தி இலக்கு சீராகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 5 | | | 9 | 7 | 6 | 2 |
| | 7 | | | | 2 | | 9 | 1 |
| | | | | | | | | |
| 7 | 9 | | | | 5 | 6 | 8 | |
| 8 | | | 6 | | 4 | | | 9 |
| | 2 | 4 | 9 | | | | 3 | 7 |
| | | | | | | | | |
| 2 | 4 | | 8 | | | | 1 | |
| 5 | 6 | 8 | 2 | | | 4 | 7 | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 2 | 1 | 8 | 3 | 9 | 7 | 5 |
| 8 | 1 | 7 | 5 | 6 | 9 | 3 | 4 | 2 |
| 5 | 9 | 3 | 2 | 4 | 7 | 6 | 1 | 8 |
| 2 | 7 | 9 | 8 | 1 | 4 | 5 | 3 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 3 | 2 | 7 | 8 | 1 |
| 3 | 8 | 1 | 7 | 5 | 6 | 4 | 2 | 9 |
| 1 | 5 | 4 | 6 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 7 | 2 | 6 | 3 | 9 | 1 | 8 | 5 | 4 |
| 9 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்/கலட்டி றோ.க.தமிழ் கலவன் பாடசாலை



அன்ரனி வின்சன் மரியநாயகம்
(B.B.A(Hons),Dip.in Ed.,MED)
எமது பாடசாலையின் அதிபர் 02.10.2012 இல் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II இக்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டமையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவர் மேன் மேலும் பட்டங்கள் பல பெற்று சிறப்புடன் என்றும் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

2012 தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கும் ஆசிரியர் களுக்கும் பெருமை தேடித்தந்தவர்களான



செல்வன் ஜான்சன் யதுசன்
(172 புள்ளிகள்)



செல்வன் கிருஷ்ணகுமார் டிறோஜன்
(170 புள்ளிகள்)

செல்வன் சிவலிங்கம் பிரவின் -134
செல்வன் டேவிட் ஜெயதேவா யதுர்ஷன் -109
செல்வன் நியூரன் நிஹால்யேசுகுட்டி - 108

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

வெல்லுக மகாஜன மாதா

J/Mahajana College
Tellippalai
Jeyaratnam Day&Prize Giving
venue:
Pavalar Thuraiappapillai Auditorium Mahajana College
Date
2012.10.29 Monday
time
9.00 a.m.

தலைமை
கு.வேல் சிவானந்தன் அவர்கள்
(அதிபர்,யா/மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை)

பிரதம அதிதி
இ.செல்வஸ்கந்தன் அவர்கள்
LL.B(Lond.),LL.M(Lond.),Attorney at Law

நினைவுப் பேருரை
Dr.R.மகேந்திரா அவர்கள்
B.V.Sc.(Pera.),MBA(Sri J)

கௌரவ அதிதி
கௌரவ கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர்,துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

சிறப்பு அதிதிகள்
ச.கைலாசநாதன் அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், மாணவர் கல்வி அபிவிருத்தி– வலிகாமம் கல்வி வலயம்)
சு.சண்முககுலகுமாரன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை கல்விக் கோட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.

[க/4310]5-6-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக எரிசக்தி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக துபாய் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அங்கு வாழும் இலங்கையர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

லஞ்சம் ஒழிப்பு ஆணைக்குழுவில்

# அதிக முறைப்பாடுகள் அரச ஊழியர்களுக்கே

கொழும்பு,ஒக்.26

லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள 2,535 முறைப்பாடுகளில் பெரும் பான்மையானவை அரச ஊழியர்களுக்கு எதிரானவையாக உள்ளன. இது அரச சேவையில் ஊழல் கணிசமாக அதிகரிப்பதைக் காட்டுகின்றது என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 130 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு அதில் 69 முறைப்பாடுகளுக்குத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகளில் 32 முடிவுக்கு வந்துவிட்டன. இதில் 17 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்கள், பொலிஸ் மற்றும் பாடசாலை நிர்வாகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்வதாக ஆணைக்குழு தெரிவித்தது. இந்த ஆணைக்குழு, பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ரி.ஜயவர்தனவுக்கு எதிராக தரக் குறைவான எண்ணெய் இறக்குமதி செய்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

# அமைச்சரவை மாற்றத்துக்கு முன் அதிகாரிகள் மட்டத்தில் மாற்றம்

கொழும்பு,ஒக்.26

கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிந்ததன் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று பேசப்பட்ட போதிலும் அதிகாரிகள் மட்டத்திலேயே விரைவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்தே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஜனாதிபதியின் பேச்சாளராக கடமையாற்றிவரும் பந்துல ஜயசேகர இடமாற்றப்பட்டு அவரது வெற்றிடத்துக்கு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகக் கடமையாற்றி வரும் மொஹான் சமரநாயக்க நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கை இதழியல் கல்லூரியின் பணிப்பாளராகக் கடமையாற்றும் அனுராதா கே. ஹேரத் ஜனாதிபதியின் சர்வதேச ஊடக பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் புதிய பேச்சாளர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# ஆர்ப்பாட்டம் செய்பவர்களுடன் பேசுவதற்கு நாம் தயாரில்லை


## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.26

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு, பதவி உயர்வுகள், சம்பள நிலுவைகள், இடமாற்றம் தொடர்பாக பேச்சு நடைபெற்று வரும் நிலையில் அரசியல் நோக்கங்களுக்காக பாதயாத்திரை, பேரணி, ஆர்ப்பாட்டம் செய்யும் குழுவினருடன் பேசுவதற்கு தயார் இல்லை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை பொரளையிலிருந்து பேரணியாகச் சென்று கல்வி அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இது தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ண, பிரதி கல்வி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா ஆகியோர் தலைமையில் சகல தொழிற்சங்கங்களுடன் பேச்சுகள் நடத்தப்பட்டன.

கடந்த 22 ஆம் திகதியும் பேச்சு நடத்தப்பட்டது. பேச்சில் கலந்துகொண்டு சிரித்த முகத்துடன் வெளியேறிச் சென்ற இவர்கள் இன்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இவர்களது நோக்கம் வேறொன்றாகவே உள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கல்வி அமைச்சு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது. சில தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக எதிர்வரும் வரவு - செலவுத் திட்ட யோசனையின் போது சமர்ப்பிக்கவும் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.- என்றார். (ச)

# பொலிஸ் திணைக்களம் வீழ்ச்சி; பாதுகாப்பு அமைச்சே காரணம்

## எரான் விக்ரமரட்ண குற்றச்சாட்டு



கொழும்பு,ஒக்.26

நாட்டின் பொலிஸ் திணைக்களம் வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு பாதுகாப்பு அமைச்சே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்களுக்கு சேவையாற்றிவரும் பொலிஸ் திணைக்களம் வீழ்ச்சியடைந்து, சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளமைக்கு பாதுகாப்பு அமைச்சே பொறுப்புச் சொல்ல வேண்டும்.

போர் இடம்பெற்ற காலத்தில் கொலைகள், கொள்ளைகள், வெள்ளை வான் கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பன போர் முடிந்தும் பல்வேறு வழிகளில் இடம்பெறுகின்றன.

இதன் மூலம் நாட்டின் சட்டம், ஒழுங்கு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளமை புலனாகின்றது. போரின் பின்னர் நாடுகளில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்ற போதிலும், நாட்டில் ஜனநாயகம் மோசமடைந்துள்ளது.

அரசியல் செல்வாக்கு உடையவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு இலகுவில் தப்பித்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் பொலிஸ் திணைக்கள ஊழியர்களுக்கு குறைந்த சம்பளங்களே வழங்கப்படுகின்றன.

உரிய பயிற்சி மற்றும் போதியளவு சம்பளங்கள் வழங்கப்படாத காரணத்தினால் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சந்தேகநபர்களை சித்திரவதை செய்து உண்மைகளை அறிந்து கொள்ள முயற்சிக்கின்றனர்- என்றார். (ச)

# இறைவரி திணைக்களத்தில் ஊழல்

## இரகசிய பொலிஸார் விசாரணை

கொழும்பு,ஒக்.26

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கான விசாரணைகளை இரகசியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரும், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களும் இணைந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கணினிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் தொடர்பில் போலியான தகவல்களை வழங்கி, சுமார் 180 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்தே இரகசியப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

# இலங்கையில் பூமியதிர்வுப் பாதிப்பை குறைப்பதற்கு திட்டம் வகுப்பு

## புதிய கட்டட வடிவமைப்பு குறித்தும் ஆராய்வு

கொழும்பு,ஒக்.26

இலங்கையில் பூமி அதிர்வுப் பாதிப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதால், அதனைக் குறைப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையத் தின் பூமி அதிர்ச்சியிலிருந்து பாதுகாக்கும் வகையில் கட்ட டங்களை வடிவமைப் பது தொடர்பான உபகுழுவின் தலைவர் கே.எல்.எஸ். சஹபந்து தெரிவித்தார்.

இடர்முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூமியில் இந்திய - ஆஸ்திரேலியத் தகடு இலங்கையிலிருந்து தென்மேற்கு பகுதியில் 500 முதல் 700 கிலோ மீற்றர் தூரம் வரை நகர்ந்துள்ளது. இதனால் இலங்கைக்கு இடையில் புதிய பூமித் தகடு உருவாகியுள்ளது. இது எதிர்காலத்தில் இலங்கையில் பூமி அதிர்ச்சிகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளைத் தோற்றுவித்திருக்கின்றது.

1615 ஆம் ஆண்டு இலங்கையில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக் கானவர்கள் உயிரிழந்தனர். அண்மைக் காலத்தில் இலங்கையில் பல சிறிய அதிர்வுகள் உணரப்பட்டன. இவற்றால் அதிக சேதங்கள் ஏற் படாதபோதும், நிலநடுக் கங்களை உணர்ந்துள்ளோம்.

பூமிக்கடியில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் சனத் தொகை ஆகியவற்றை வைத் துப் பார்க்கும்போது எதிர்காலத்தில் கொழும்பு போன்ற நகரப் பகுதிகளில் ஏற்படக்கூடிய பூமி அதிர்ச்சி கூடுதலான சேதங்களை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, பூமி அதிர்ச்சியிலிருந்து பாதுகாக்கக்கூடிய வகையில் கட்டடங்களை வடிவமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பூமி அதிர்ச்சி ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. இது இயற்கையானது. எனினும், அதனால் ஏற்படக்கூடிய சேதங்களை எம்மால் குறைக்க முடியும். கடந்த தசாப்தத்தில் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப் புக்கள் கவனம் செலுத்தின. தற்போது இந்த விடயத்தில் இடர் முகாமைத்துவ அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. எதிர்காலத்தில் பூமி அதிர்ச்சி ஏற்படும்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாத நிகழ்வுகள்

வலி. தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கவிதை பயிற்சிப்பட்டறையும் கவியரங்கமும் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி ந.கணேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ந-86)

# நினைவுநாள் நிகழ்வு

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அமரர். ஸ்ரீபாஸ்கரனின் 13ஆவது நினைவு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார். (ந-86)

## தேவை

உடுவிலில் உள்ள மருத்துவ நிலையத்துக்கு பரிசோதனைக்காக இரத்தம் எடுப்பதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு : 077 3715670

(24716)(6.7.8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சுரேஷ் சாதுர்யன்

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவன் செல்வன் சுரேஷ் சாதுர்யன் 145 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். அவர் கல்வியில் எல்லா நலமும் பெறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

பெருந்தெரு
புலோலி தெற்கு,
புலோலி.

வாழ்த்துவோர்:
அன்பின் உறவுகளும்
அம்மாவும்

(24739) (45.6.7)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

6மோதம் நிரம்பிய Golden Retriever நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

(24734)(5-6-7) தொடர்பு: 078 913 8984

## தவறிவிட்டது

புனித செபஸ்தியார் வீதி,கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியுடைய சந்திரன் சுஜீதபன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (850353395V) மற்றும் மாணவர் அ.அ.இராணுவ அ.அ. என்பன அடங்கிய பேர்ஸ் நாவலர் வீதிக்கும், நாவாந்துறை சந்தைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த விலாசத்துடனோ அல்லது 0770759900 எனும் தொ.பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (24695)(5-6-7)

## விற்பனைக்கு

ஹொட்டலுக்குரிய கதிரை (சில்வர்), மேசை, ஹொட்கபேட்(சாப்பாடு போட்டு வைக்க சிறிது,பெரிது), ரீபட்டறை, டீபிறீஷர், பெரிய கவுண்டர், போட் இன்னும் பல ஹோட்டல் பொருள்கள்.

தொடர்பு:
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9942

(24735)(5-6-7)

## டாட்டா வடி வாகனம் விற்பனைக்கு

டாட்டா வடி லீசிங் வசதியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 836 5861, 077 910 3445

(24738)(5-6-7)

## கொங்கிறீற் கல் மெசின் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொங்கிறீற் கல் (Block கல்) அறுக்கும் மெசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
071 228 7060, 021 320 5939

(24737)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

LION
### கந்தையா விஜயரத்தினம்

அவர்கள் 24.10.2012 காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம். (சி/4315)(6.7.8)

செல்வராசா குடும்பம்,
கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடி
1953.10.25



ஆனைமுகன் அடி
2012.09.26

### பரமசாமி சிவசுப்பிரமணியம்

அன்பிற்கினியவரே!

பதின்னான்கு நாள்கள் உன் உயிரைக்காக்க விழித்திருந்தோம். வைத்தியசாலையிலிருந்து உயிருடன் வருவாயென நினைத்தோம். விம்மியது செய்தி விம்மினோம் ஐம்பத்தொன்பதாண்டு நீர் வாழ்ந்த வாழ்வு போதுமென நினைத்தானே இறைவன். என்ன இது இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்? நேற்றுவரை வாழ்ந்த மண்ணில் நீ இல்லையே நீ வாழ்ந்த காலம் எமக்குப் பொன்னானது. எங்கள் நெஞ்சில் துன்பத்தை சேர்த்த படி ஏனிந்த சோதனை ? உன் நினைவுகளுடன் அனலிடைப்பட்ட மெழுகாக அணுவணுவாக உருகுகின்றோம். தெய்வமே உன் உருவில் வந்தெம்மை வாழ்விப்பாய் ஐயா.

அன்னாரின் நினைவாக 2012.10.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இளவாலை வடக்கு, இளவாலை.

உன்னை பிரிந்து துடிக்கும்:
குடும்பத்தினர்.

(சி/4317)(6.7.8)

## ஈரவிழிகளில் ஈராண்டில்

குலம் மகிழ
15.10.1938

குவலயம் நெகிழ
19.10.2010



### அமரர் முத்துத்தம்பி தம்பிராசா (துரை)

திதி : பூர்வபக்க துவாதசி

நிலையான வாழ்வினிலே நிலைத்து நின்ற எங்கள் அப்பா
நினைவுகளை கனவாக்கி நீண்டதூரம் சென்றதென்ன
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் ஆறுமோ எம் துயரம்
அகிலமதில் வாழும் வரை வேண்டும் அப்பா உம் உறவு
நூறாண்டு சென்றாலும் உம் பிரிவை நாம் மறக்கமாட்டோம்.

மகளிர் பாடசாலை, மேற்கு வீதி, உடுவில்
ஹம்சிகா பான்சி ஹவுஸ், No.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் இனிய நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(24742)(6.7.8)

## 60 ஆவது அகவையில்

ஆசி கூறி வாழ்த்துகின்றோம்



இன்று (26.10.2012) வெள்ளிக்கிழமை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் மட்டக்களப்பில் மங்கலமாய் இன்று ஷஷ்டியப்த பூர்த்தி காணும் எங்கள் மதிப்பிற்கும் கௌரவத்துக்கும் உரிய

பிரம்மஸ்ரீ
கா. சந்திரசேகர சர்மா
ஸ்ரீமதி கௌரிமாலதி

தம்பதியினர் சகல சௌபாக்கியங் களும் பெற்று இன்று போல் என்றும் சீரும் சிறப்புடன் இனிதே வாழ எல்லாம் வல்ல நகுலாம் பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானை வேண்டி ஆசிபெற்று

அன்பிற்குரிய கீரிமலை வாழ் மக்கள் வாழ்த்துகின்றோம்.

(24743)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதை எடுங்கள்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியிருக்கும். கஸ்தூரியார் வீதியில் மோட்டார் சைக்கிளில் நகர்ப் பக்கம் சென்று கொண்டிருந்தேன். மோட்டார் சைக்கிளில் எதிரே வந்த எனது நண்பன் என்னைப் பார்த்ததும் இருவரும் வீதியோரமாக ஒதுங்கினோம். அவனுடன் கதைக்க முதலே நண்பன் "300 ரூபாயை வீணாக இழந்துவிட்டேன்" என்றான். "எங்கே காணாமல் போனது" என்று அவனிடம் கேட்டேன். அவனோ "ஒரு இடத்திலும் காணாமல் போகவில்லை. சூரியாவின் மாற்றான் படம் ராஜா தியேட்டரில் பார்த்ததுக் கூத்தான்" என்றான். "மாற்றான் படம் சரியில்லை என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். பிறகு எதற்கு இந்தப் படத்தைப் பார்க்கப் போனாய்" என்று கேட்டேன். அவனோ "சரியோ, தவறோ படம்பார்க்காமல் விட மனம் விடுகுதில்லை. படத்தின்ர கதையைப் பற்றி நினைக்காதது தான் இப்படத்த பாஷன். இளசுகள என்ன செய்ய முடியும்?" என்று கவலைப்பட்டார்.

நல்ல சினிமா பார்ப்பம் என்றால் அதுவும் முடியாது. இப்பத்தைய தென்னிந்தியச் சினிமாக்காரர்களும் இதைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது. இங்க படம் எடுக்க வெளிக்கிட்டவையும் இதைப் பற்றிச் சிந்திக்காமல் படம் எடுக்கினம். குறுந்திரைப் படமோ முழுநீளத் திரைப்படமோ எடுக்க நினைப்பவர்கள் முதலில் தாம் எடுக்கும் திரைப்படத்தின் மூலம் இந்த மண்ணில் இருந்து என்ன செய்தியை வெளிப்படுத்த இருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அந்தப் பார்வை தமிழ் மக்களின் கலை கலாசார பண்பாடுகளை பாதுகாக்கவும் ஒரு விடிவினை ஏற்படுத்த வும் உதவவேண்டும். இல்லாதுபோயின் திரைப்படம் வெளிவந்த நாள்களுக்குள்ளே அந்தத் திரைப்படம் காணாமல் போய்விடும்.

யாழ்ப்பாணத்தில் பலர் திரைப்படம் எடுத்து காணாமல் போயிருக்கிறார்கள். கஷ்டப்பட்டு எடுத்த திரைப்படம் ஏன் பேசப்படவில்லை? என்று எவரும் கணிப்பிட முன்வருவதில்லை. இதனால்தான் இவர்கள் போல படம் எடுக்க வெளிக்கிட்டவர்களின் படமும் தோல்விக்கு காரணமாக அமைகின்றது.

ஈழப்போராட்ட காலத்தில் எடுக்கப்பட்ட படங்கள் அனைத்தும் ஆவணமாக பதியப்பட்டுள்ளன. ஈழத்தில் போர்க் காலப் பதிவுகளை அழகாகப் பதிவு செய்துள்ளனர். அந்தப் பதிவுகளை விடுதலைப் புலிகளால் மட்டுமே மேற்கொள்ள முடிந்தது. அவர்கள் இல்லாதுபோன இன்றைய காலப்பகுதியில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக பதிவுகளை மேற்கொள்ள எவரும் முயற்சிக்கவில்லை என்பது எமது குறையாகும்.

விடுதலை வேண்டி மூன்று தசாப்த காலம் போரில் ஈடுபட்ட மண் இது. போரினால்தான் தமிழர் பிரச்சினை சர்வதேசம் வரை கொண்டு செல்லப்பட்டது. இதனை மறந்துவிடாதீர்கள். தமிழ் மக்கள் போரினால் பாதிப்படைந்துள்ளனர். அவர்களின் வாழ்வில் இன்னும் விடியல் வரவில்லை. தமிழ் மண் சார்ந்த விடுதலை நோக்கிலான திரைப்படங்களை எடுங்கள். உங்களை வரலாறு என்றும் மனதில் வைத்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் குறும்படம் எடுப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. அவர்கள் இதனை மனதில் கொள்வார்களா? இந்திய சினிமா போல இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய தொழில்நுட்பத்தை கற்றுக் கொள்ள எவரும் முன்வருவதில்லை. ஒவ்வொரு பிரேமையும் அழகாக எடுங்கள். அதனூடாக ஈழத் தமிழர்களுடைய வாழ்வு அவர்களுடைய உரிமைவெளிப்படவேண்டும்.

மீளக்குடியமர்ந்த மக்கள் தமது அன்றாட வாழ்வினை நகர்த்துவதற்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதனை கமரா ஊடாக வெளிச்சத்துக்கு கொண்டு வர முடியும். காதல் கதைதான் இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் முளைத்திருக்கும் இயக்குநர்களிடம் இலகுவாக கிடைக்கிறதுபோலும். அதுதான் காதல் கதையை எடுத்து தங்களும் கெட்டு தமிழ் சமூகத்தையும் கொச்சைப்படுத்துகிறார்கள்.

தமிழர்கள் வாழ்வுக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளை குழிதோண்டிப் புதைத்து விட்டு என்னத்தைப் பெரிசாக சாதிக்கப் போகின்றோம். இந்த மண்ணில் பிறந்த படியால் கொஞ்சமாவது உணர்வு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நல்லதை சிந்திக்க முடியும். காதலை கொச்சைப்படுத்த முடியாது. வாழ்க்கையில் காதல் இருந்தால்தான் அந்த வாழ்க்கை பிடிப்புள்ளதாக இருக்கும். ஆனால் இன்று எங்கட பிரச்சினையை முதலில் திரைப்படமாக்குங்கள். பின்னர் காதல் தானாக வரும்.

ஈழத்திரைப்பட வெளியீட்டுக்குத்தலைமை தாங்குபவர்கள் தங்களை தாங்களாகவே இயக்குநர்களாக அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். கொஞ்சம் சிந்தியுங்கள். நாளைய இயக்குநர்களை தவறான பாதைக்கு இட்டுச்செல்லாதீர்கள். தென்னிந்திய சினிமாவில் மூழ்கிப் போய் இருந்துகொண்டு ஈழத் துச் சினிமாஎடுக்கிறம்என்று சொல்லாதீர்கள்.

உணர்வுகளையும் வலிகளையும் மற்றவர்களுக்கு உறையச் செய்ய குறும்படங்கள் இன்று முக்கியமான ஒரு கருவியாகக் காணப்படுகின்றன. சொல்லவந்த செய்திகளை அதேவலியோடு மற்றவர்களுக்கும் உணர்த்திவிட நேர்த்தியான குறும்படங்களால் முடிகிறது. பலகோடிகளைக் கொட்டி பிரமாண்டமாக தயாரிக்கப்படும் வர்த்தகத் திரைப்படங்களை விட சோமாலியாவில் ஒருவேளை உணவுக்கு ஏங்கும் குழந்தை ஒன்றைப் பற்றிய குறும் படம் ஒன்று உலகத்தை தனது பக்கம் ஈர்த்தது. எனவே கோடிகளிலும் பிரமாண்டங்களிலும் ஒரு படைப்பு வெற்றிபெறுவதில்லை. மாறாக உணர்வுகளின் அடிப்படையில் உணர்வுகளை உறைய வைத்த திரைப்படங்களே உலக அளவில் வெற்றிகளைப் பெறுகின்றன. ஈரானியத் திரைப்படங்களை இதற்குச் சிறந்ததொரு உதாரணமாகக் கொள்ளலாம். இந்த வகையில் நயவஞ்சகமாக அடக்கியொடுக்கப்படும் சமுதாயமாக இன்று உள்ள ஈழத்தமிழர்களின் வாழ்வியலை குறும்படமாகக் கொண்டு வந்து அவர்களின் வலியினை ஓரளவுக்காகவாவது மற்றவர்களுக்கு புரியவைக்கவேண்டும்.

அவலத்தின்மேல் அவலங்கள் நடந்து கொண்டிருக்கும் இந்த மண்ணில் உணவு உண்ணும் உரிமைகள் கூட மறுக்கப்படும்

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

இடத்தில் அவர்களின் உணர்வுகளை வெளிக்கொணரும் குறும்படங்களை எடுங்கள். எல்லோருக்கும் பொதுவான வலி என்பது வேறு. தமிழ் இனம் மட்டும் அனுபவிக்கும் கொடுமைகள், வலிகள் என்பவை வேறு. நெருப்பு எப்படிச் சுடும் என்பதை சூடுபட்டவனால் மட்டும்தான் கூற முடியும். மற்றவர்களால் நெருப்பு இப்படிச் சுடுமாம் என்றுதான் கூற முடியும்.

ஈழத்தில் வெளிவந்த வேலி, பசி, மௌனம் ஆகிய குறும்படங்கள் ஏதோ ஒருவிதத்தில் நெஞ்சின் உணர்வுகளை தொட்டு நிற்கின்றன. பல முன்னாள் பெண் போராளி இயக்குநர்களும் முழு நீளத் திரைப்படங்களை இயக்கத் தொடங்கினர். குறிப்பாக நிமலா இயக்கிய 'ஈரத்தீ', குயிலினியின் 'உப்பில் உறைந்த உதிரங்கள்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம். போர் இடம்பெற்ற நாள்களில் தொழில்நுட்ப கருவிகள் தட்டுப்பாடான நிலையில் துன்பியல் நிகழ்வுகளுக்கு மத்தியிலும் இப்படியான திரைப்படங்களைவெளியிட்டுள்ளார்கள். இவர்களைப் பார்த்து இன்று குறும்படங்களை எடுப்பவர்கள் தமிழ் மக்களின்வாழ்வோடு ஒட்டியகுறும்படங்களை எடுப்பார்களா?'


## மனமார வாழ்த்துகின்றோம்



திருமதி இயஸ்ரின்பிறின்ஸ்லி கிறிஸ்ரபெல்
(B.Com, Dip.in Edu, SLPS 2 - II)

எமது பாடசாலை ஆசிரியரான திருமதி இயஸ்ரின்பிறின்ஸ்லி கிறிஸ்ரபெல் அவர்கள் (02.10.2012) அன்று அலரிமாளிகையில் கௌரவ ஜனாதிபதி அவர்களால் அதிபர் தரம் 2 - II இற்கு பதவி உயர்த்தப்பட்டு நியமனம் வழங்கி கௌரவிக்கப்பட்டதை மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ்
றோ.க.ம. வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

(சி/3767)(4.5.6.7)


## பரிசில் தினம்

நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எம்.வி. செல்வராஜா கலந்துகொள்ளவுள்ளார். (3)

## பாடசாலை பிள்ளைகளுக்கு தையல் பயிற்சி

பளை, ஒக்.26

பாடசாலைக்கல்வியுடன் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் தையல் பயிற்சியும் வழங்கும் திட்டம் பளை றோ. க.த. க. பாடசாலையில் இடம் பெறவுள்ளது. தையல் பயிற்சிக்கான தையல் இயந் திரம் பாடசாலை அதிபர், ஆசிரியர்க ளால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப் பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறும் வேளையில் தாம் பெற்ற தையல் பயிற்சி மூலம் மாணவிகள் பயன்பெறட்டும் என்ற நோக்கில் மேற்படி திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மாலை வேளைகளில் மாணவிகள் தையல் பயிற்சி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர் [illegible] தெரிவித்தார். (3-9)


THE HALO TRUST

## அனுபவமுள்ள வாகனம் திருத்துநர்கள் (MECHANICS) பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கிறது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமது வாகனத் திருத்தகத்திற்கும் மற்றும் இயந்திரம் மூலம் மிதிவெடி அகற்றும் உபகரணங்களைத் திருத்துவதற்காகவும் அனுபவமுள்ள இயந்திரத்தொகுதி வாகனத் திருத்துநர்களையும் ஆள்சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

### அத்தியாவசிய தகுதிகள்:

* குறைந்தது மூன்று வருடங்கள் இந்த தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
* கடின வேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கிமுடையவராகவும் இருக்க வேண்டும்.
* கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
* செல்லும்படியான வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவேண்டும்

**பயனுள்ள (இருப்பினும் அத்தியாவசிய) அனுபவம் / தகுதிகள்:**

* இலத்திரனியல்கட்டுப்பாட்டுமுறைகள் / நீரியல்முறைகள்பற்றிய அறிவு
* ஆங்கிலப் பேச்சுத்திறன்

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**


அனைத்து விண்ணப்பங்களும் 31.10.2012 புதன்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் நேர்முகத்தேர்விற்கான அழைப்பு விடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

(4220)(6.7.8)


## மரண அறிவித்தல்

### Lion கந்தையா விஜயரத்தினம்

(சமாதான நீதிவான், யாழ் மாவட்ட இணைப்பாளர் சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பு, இளைப்பாறிய பிரதேச முகாமையாளர் அரசமரக்கூட்டுத்தாபனம், வடபிராந்தியம்)



சிங்கராஜர் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா விஜயரத்தினம் 24.10. 2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் இரஞ்சிதமலரின் பாசமிகுகணவரும், றஜீத் (டாக்டர்), பிரதீப் (எயார்டெல்), பிரசன்யா (கனடா), ஜீவிதா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் பஞ்சரத்தினம் (நிலஅளவையாளர், திருகோணமலை), காலஞ்சென்ற கனகரத்தினம் (ஜேர்மனி) மற்றும் இராசரத்தினம் (லண்டன்), சிவரத்தினம் (ஆஸ்திரேலியா), கமலாதேவி (ஜேர்மனி), நகுலாதேவி (லண்டன்), பரமேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கதிர்காமசௌந்தரி, கௌரி, யூத்தா (ஜேர்மனி), வாசுகி (லண்டன்), ரமணி (ஆஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), செல்லத்துரை (லண்டன்), தற்பரானந்தலிங்கம் (ஜேர்மனி), மகேந்திரன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (சி/4314)(6.7.8)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ்

கூகுளின் Android Application Store ஐ புதிய வைரஸ் ஒன்று தாக்கியுள்ளதாகதகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த புதிய வைரசுக்கு Trojan Back Look out என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது Android சாதனங்களில் உள்ள SMS, MMS, Video Files மற்றும் ST Card களில் உள்ள கோப்புகளை திருடி Remote FD Server இற்கு அனுப்பிவிடும்.

மேலும் Android சாதனங்களில் உள்ள இரகசிய செய்திகளை மிக எளிதாகக் கண்டுபிடித்துவிடும்.

ட்ரஸ்ட்கோ என்ற மென்பொருளுக்கான பாதுகாப்பை வழங்கும் நிறுவனம் இந்த வைரைஸைக் கண்டுபிடித்திருக்கிறது.



# LG அறிமுகப்படுத்தும் புதிய டெப்லெட்

உலகளாவிய ரீதியில் தனது உற்பத்திகளை அறிமுகப்படுத்திவரும் LG நிறுவனமானது தற்போது விண்டோஸ் 8 இயங்குதளத்தினைக் கொண்ட LG H160 எனும் Sliding Tablet - ஐ அறிமுகப்படுத்துகின்றது.

இதில் 11.6 அங்குல அளவுகொண்ட LCD IPS தொழில்நுட்பத்தில் அமைந்ததும் 178 டிகிரி வரையான பார்வைக் கோணத்தைக் கொண்டதுமான தொடுதிரை காணப்படுகின்றது.

மேலும் 1.05kg எடைகொண்ட இந்த tablet 15.9mm தடிப்புடையதாகக் காணப்படுவதுடன் 1 x USB, 1 x HDMI port, microSD card slot மற்றும் வயர்லெஸ் இணைப்பு ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.


LG H160 Tablet இன் விலையானது இதுவரையில் நிர்ணயிக்கப்படாதபோதும் விண்டோஸ் 8 இயங்குதளம் இன்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ள நிலையில் அதன்பின்னர் மேலதிக விவரங்கள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# 'ஒபிஸ் வெப் அப்ளிகேசன்' அறிமுகப்படுத்தியது மைக்ரோ சொப்ட்

ஒன்லைன் சேமிப்பகமான SkyDrive-இல் பயன்படுத்தக் கூடிய Office Web Application-னின் புதிய பதிப்பை மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

Office 2013 Web Apps எனும் பெயருடன் அறிமுகமாகும் Application-இல் Word, Excel, Power Point போன்ற கோப்புக்களை நேரடியாகப் பரிமாற்றம் செய்யக்கூடிய வசதியை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக்கோப்புக்களை Sky Drive-இல் தரவேற்றம் செய்து இணையத்தில் வைத்தே இலகுவாக செம்மையாக்கம் செய்யக் கூடிய வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.







# சொனியின் தயாரிப்பில் Xperia Odin C650X

இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்வதில் மக்கள் நம்பிக்கையை வென்ற சொனி நிறுவனத்தின் வடிவமைப்பில் வெளியான Sony Xperia கைபேசிகள் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

இதனைத்தொடர்ந்து இந்தநிறுவனம் தனது புதிய வெளியீடான Xperia Odin C650X உற்பத்தியில் முழுமூச்சாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

Android இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு Quad Core Qualcomm S4 Processor மற்றும் 2GB RAM உள்ளடங்கலாக உருவாக்கப்பட்டுவரும் மேற்படி கைப்பேசி அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் Xperia Odin C650X உற்பத்தி என்பது ஒரு வதந்தியே என்று நம்பப்பட்டு வந்த நிலையில் தற்போது மேற்படி கைபேசியின் மாதிரி உருவத்தைக் கொண்ட புகைப்படம் வெளியாகியுள்ளது.



# வெளிவர இருக்கிறது 'ஐ மக்'

கணினி உற்பத்தியில் முதல்வனாகத் திகழும் அப்பிள் நிறுவனம் தனது புதிய உருவாக்கத்தில் அமைந்த iMac கணினிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இவை முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கணினிகளை விட மிகவும் மெல்லிய தோற்றத்தை (ultra thin) கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அதாவது இவற்றின் தடிப்பானது வெறும் 5 மில்லி மீற்றராகக் காணப்படுகின்றது. இது முன்னைய கணினிகளின் தடிப்பைக் காட்டிலும் 80 சதவீதம் குறைந்த அளவாகக் காணப்படுகின்றது.

மேலும் இவை 21 அங்குலம் மற்றும் 27 அங்குலமுடைய திரைகளைக் கொண்டுள்ளதாக வெளிவர இருப்பதோடு Core i5, Core ஆகிய Processor-ஐ உள்ளடக்கியுள்ளன.

தவிர இவற்றின் துணை நினைவகமானது SSD அல்லது Fusion Drive-னை அடிப்படையாகக் கொண்டு காணப்படுவதோடு, பிரதான நினைவகமான RAM Cß Memory AÍøÁ 32GB வரை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக்கணினிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் விற்பனைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மெமரி தொடர்பான விவரங்களை துல்லியமாக அறிய உதவும் மென்பொருள்

கணினி ஒன்றின் செயற்திறனை நிர்ணயிப்பதில் பிரதான நினைவகமாகக் கருதப்படும் RAM Memory-இன் பங்கு அளப்பரியதாகும்.

இவ்வாறான RAM Memory-ஐ கணினியின் செயற்திறனை உயர்த்துவற்கு ஏற்றாற் போல் அதிகரிக்க முடியும். எனினும் குறித்த கணினியின் ஏனைய வன்பொருள்பாகங்கள் தொடர்பாக இதில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

எனவே இதுதொடர்பான விவரங்களை இணையத்தில் கண்டறியும் வசதியை இணையத்தளம் ஒன்று தருகின்றது. அத்தளத்தில் காணப்படும் Crucial Memory Advisortool எனும் அம்சத்தைப் பயன்படுத்த முடியும்.

இதுதவிர Crucial System Scanner எனும் மென்பொருளையும் பயன்படுத்தக்கூடியுதாகக் காணப்படுவதுடன் இதன் மூலம் ஏறத்தாழ 50,000 வகையான கணினிகளுக்கான 250,000 வகையான Upgrade களினை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தமென்பொருள் விண்டோஸ் இயங்குதளம் மற்றும் அப்பிளின் Mac OS ஆகியவற்றிற்கு தனித்தனியாகக் காணப்படுகின்றது.



# வருகிறது Samsung Chrome book

தொழில்நுட்ப உலகில் தன்னை ஆழமாக நிலைநிறுத்தியுள்ள கூகுள் நிறுவனமானது Samsung Chrome book எனும் புதிய மடிக் கணினி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இது ஏனைய கணினிகளினைக் காட்டிலும் விரைவானதாக இயங்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு வகையில் பாதுகாப்பு மிகுந்ததும் கூகுளின் cloud storage மற்றும் ஏனைய கூகுள் தயாரிப்புக்களை உள்ளடக்கிய Chrome OS எனும் இயங்கு தளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா நாட்டு லிபரல் கட்சியின் விஞ்ஞாபனத்தில் ஈழத்தமிழர் விவகாரம்

## தலைமைப் பதவிக்கான வேட்பாளர் 'பச்சைக்கொடி'

ஈழத்தமிழர் விவகாரத்தை தனது கொள்கை விஞ்ஞாபனத்தில் இணைப்பதாக கனடாவின் பெரும்பான்மைக் கட்சிகளில் ஒன்றான லிபரல் கட்சியின் தலைமைப் பதவிக்கான வேட்பாளர் ஜஸ்ரின் ரூடோ, கனேடிய மனிதவுரிமைமையத்திடம் உறுதியளித்துள்ளார்.

கனடாவின் புகழ்பூத்த பிரதமரான பிய ரூடோவின் மகனான இவரின் தலைமைத்துவப் பதவிக்கான போட்டி கனடாவின் தேசிய ஊடகங்களின் முக்கிய செய்தியாக மாறியுள்ள நிலையில், கனேடிய மனித உரிமை மையம் இவருடனான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றை நேற்று முன்தினம் கனேடியத் தலைநகரில் மேற்கொண்டது.

சுமார் மூன்றரை மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில், ஈழத்தமிழர்களின் மனிதவுரிமை விவகாரத்தில் கனேடிய மனிதவுரிமை மையம் ஆற்றி வரும் பங்களிப்பை பெரிதும் பாராட்டிய ஜஸ்ரின் ரூடோ, கனேடிய மனிதவுரிமை மையத்தின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டோடு தான் ஒத்துப் போவதாகவும் தெரிவித்து, மனிதவுரிமை விவகாரத்தை இலங்கை மதித்து நடப்பதற்கு ஏற்றவகையில் செயற்படுவதற்கான வகையில் அதனைத் தனது கொள்கையில் இணைப்பதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் கனேடிய மனிதவுரிமை மையத்தின் பேச்சாளர் றொட் றொஸ், கனேடிய மனித வுரிமை மையத்தின் ஊடக தொழில்நுட்ப ஆலோசகர் நாதன் தியா, சமூகவள ஆலோசகர் ஸ்ரான் முத்துலிங்கம், மக்கள் தொடர்பாடல் அலுவலர் பிரகாஸ் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

# தேசிய பாடசாலையாக இடம்பிடித்துள்ள பெருமை திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்ப்பாணத்தில் ''கொன்வன்ட்''எனும் பெயருடன் ஒரு தேசிய பாடசாலையாக வரலாற்றில் இடம்பிடித்துள்ள பெருமை யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையையே சாரும் எனத் தெரிவித்தார் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது அவர் தெரிவித்ததாவது:-

கல்விச் சேவையில் 150 வருடகாலம் சேவை வழங்கியமை மிகப்பெரிய சாதனையாகவே கருதமுடிகிறது.

சமயத் தலைவர்கள் ஈடுபாட்டுடன் சமூகப் பணிக்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். இவர்களின் அளப்பெரிய சேவையால் தேசிய பாடசாலையாக உயர்வடைந்துள்ளது.- என்றார்.



பாடசாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமலமரித்தியாகிகள் சபை முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகள், திருக்குடும்ப கன்னியர் சபை வடமாகாண முதல்வர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் மற்றும் புலம்பெயர் நாடுகளின் பழைய மாணவர் சங்கத் தலைவிகள் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் பொன்னாடைபோர்த்தி நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து "familian Flame" எனும் பொன்விழா சஞ்சிகை வெளியிடப்பட்டது. தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-14)

# ஹஜ் பயணச் சடங்குகள் சவூதியில் ஆரம்பம்

முஸ்லிம்களின் முக்கிய மத நிகழ்வான ஹஜ் புனிதப் பயணத்தின் பிரதான சடங்குகள் சவூதி அரேபியாவில் ஆரம்பமாகின.

யாத்திரிகர்கள் மக்காவிலிருந்து மின்னாவுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். அங்கு சென்று அவர்கள் ஓய்வெடுத்து பின்னர் இரவுத் தொழுகைகளில் ஈடுபடுவார்கள்.

உலகெங்கிலிருந்தும் ஹஜ் புனிதப் பயணத்துக்காக 15 இலட்சத்துக்கும் மேலான முஸ்லிம்கள் சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளனர்.

மத்திய கிழக்கு பிரதேசத்தில் நிலவும் அமைதியின்மை, மேற்படி புனிதப் பயண்த்தைப் பாதிக்காது என்றும், ஹஜ் தொடர்பான சடங்குகள் நடைபெறும் எல்லா இடங்களிலும், தாங்கள் பாதுகா[illegible]களை நிறுத்தியிருப்பதாகவும் [illegible]கள் தெரிவித்துள்ளனர். (வ)

# செபமாலைப்பேரணி

கொழும்புத்துறை, ஒக்.26

தேசிய செபமாலைப் பேரணியின் ஓர் அங்கமான செபமாலைப் பேரணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

செபமாலை அன்னையின் மாதமாகிய ஒக்ரோபர் மாதத்தில் மரியாயின் சேனைத் தலைமையால் நாடு தழுவிய ரீதியில் இந்தச் செபமாலைப் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மரியாயின் சேனை அமைப்பு யாழ். மாவட்டத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட இடமான பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இந்தப்பேரணி ஆரம்பமாகி யாழ். புனித மரியாள் பேராலயத்தில் முடிவடையவுள்ளது.

பாண்டியன் தாழ்விலிருந்து கொழும்புத்துறை வீதி, கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி, 4 ஆம் குறுக்கு வீதி, பாங்சால் வீதி வழியாக பேராலயத்தைச் சென்றடைந்து [illegible]டையும் என்று மரியாயின் சேனை அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-135)

# அன்பு வாரம் அனுஷ்டிப்பு

வட பிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்பு குழுவினால் கொண்டாடப்படும் 'அன்பு வாரம்' கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் அன்பு வாரத்தில் மாணவர்கள் மத்தியில் கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் அன்பு வார ஒன்று கூடல் விழாவின் போது வழங்கப்படும் என சத்தியசாயி மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர் கே.வி.சிவனேசன் அறிவித்துள்ளார். (3)

# போட்டிகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக்.26

வலி.வடக்கு பிரதேச சபையால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று நடத்தப்படவிருந்த போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தன் அறிவித்துள்ளார்.

இன்று அரச கடமை நாளாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளமையால் இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன.

இதில் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்திலும், ஏனையவர்களுக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-16)

# ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஒக்.26

லண்டன்-லங்கா திறன் அபிவிருத்தி கல்வி நிலையம் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள மாணவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் கற்கை வசதி வழங்கப்படும்.

லண்டன்- லங்கா திறன் அபிவிருத்தி கல்வி நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் எஸ். செந்திலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆங்கிலம்-தமிழ் கலந்த முறையில் வடபகுதி தமிழ் மாணவர்களுக்கான ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறி வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுடை மானிப்பாயில் உள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார். (3-50)

# கைவிடாத தோழன்

ஞானக்கதிர்

தனியாக விடப்படவில்லை என்பதை எப்போதும் நினைவிற்கொள். இறைவன் உன்னுடன் உள்ளார். அவர் உனக்கு உதவிக்கொண்டும் உன்னை வழி நடத்திக்கொண்டும் இருக்கிறார். அவர் என்றும் உன்னைக் கைவிடாத தோழன். அவரே உனக்கு ஆதரவளித்துக்கொண்டும் வலுவூட்டிக்கொண்டும் இருக்கும் நண்பனாவார். அவரிடம் நம்பிக்கை வை. அவர் உனக்காக அனைத்தையும் செய்வார்.

நன்றி: ஞானச்சுடர்



சாவகச்சேரி கண்டுவில் புவேந்தன் முன்பள்ளியில் வித்தியாரம்பம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. கலைமகள், மலைமகள், அலைமகள் வேடமணிந்து சிறுமிகள் அமர்ந்திருக்க விஷேட பூசை இடம்பெற்று வித்தியாரம்பம் இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான சிறார்களுக்கு ஏடு தொடக்கப்பட்டது. (ம9)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற வாணிவிழா நிகழ்வு. (எ-5)

# சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை வீரமாபிடாரி அம்மாள் ஆலயத்தில் கேதாரகௌரி விரதத்தை முன்னிட்டு இலட்ச நாம அர்ச்சனையும் ஹோமப் பெருவிழாவும் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.

* * *

வட்டுக்கோட்டை அராலி மேற்கு சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல சகஸ்ர சங்காபிஷேக பெருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று நண்பகல் 12மணிக்கு விசேட பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா வரவுள்ளார்.

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயத்தில் கேதார கௌரி விரதம் நேற்று முன்தினம் கும்ப பூசையுடன் ஆரம்பமாகி இருபத்தொரு நாள்கள் நடைபெறவுள்ளது.

# சமூக அபிவிருத்தி மன்றத்தால் சிறுவர், முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சிறுவர் முதியோர் தினவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு சமூக அபிவிருத்தி மன்றக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் பி.ஏ.சி. குனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(3-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். கோட்ட மட்ட உதைபந்தாட்டம்

# இரு பிரிவுகளில் மத்திய கல்லூரி சம்பியன்


18 வயதுப் பிரிவு- யாழ்.மத்திய கல்லூரி அணி


14 வயதுப் பிரிவு- யாழ்.மத்திய கல்லூரி அணி

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில்14 வயது, 18 வயது ஆகிய இரு பிரிவுகளிலும் யாழ். மத்திய கல்லூரி சம்பியனானது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று வியாழக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் களத்தில் ஒன்றை ஒன்று எதிர் கொண்டன.

இரு அணிகளும் சம பலத்தோடு மைதானத்தில் மோதிக் கொண்டதால் ஆட்டத்தில் அனல்பறந்தது. எதிரணியின் கோல் கம்பத்துக்குள் பந்தை செலுத்தி தமது பக்கம் வெற்றியைக் கொண்டு வருவதற்காக இரு அணி வீரர்களும் தொடர்ந்து முயற்சித்தனர். ஆயினும் அந்த முயற்சிகள் யாவும் இரு அணிகளினதும் பின்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டன. ஆயினும் தடுப்பு வியூகங்கள் பலவீனம் அடைந்த சமயத்தை சரியாக பயன் படுத்திக் கொண்ட இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தன. அதன் பின்னர் எந்த ஒரு கோலையும் இரு அணிகளும் பெறத் தவறியமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தில் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதன் போதும் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றன. இவ்வாறு சமநிலைதவிர்ப்பு உதை வாய்ப்பும் சமநிலையானதால், இரு அணிகளுக்கும் மேலதிகமாக ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் வழங்கப்பட்ட இன்னொரு சமநிலை தவிர்ப்பு வாய்ப்பும் சமநிலையாகவே முடிந்தது.

அதன் பின்னரும் வழங்ப்பட்ட வாய்ப்பை , யாழ். மத்திய கல்லூரி அணி மிகச் சரியாகப் பயன்படுத்தி கோல் ஒன்றை அடித்தது. ஆயினும் அந்த இறுதி வாய்ப்பை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி கைநழுவவிட்டது.

இதனால் யாழ். மத்திய கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை வெற்றியீட்டி கோட்ட மட்ட சம்பியனானது.

தொடர்ந்து இடம் பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தில்வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 5:4 என்ற கோல்கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை தோற்கடித்து கோட்ட மட்ட சம்பியனானது.

(ங-23)

# அபார பந்துவீச்சால் ஜிந்தோட்ட ம.வியை தோற்கடித்தது சென்.ஜோன்ஸ் 'ஏ' அணி

யாழ்ப்பாணம்,ஒக்.26

இலங்கைப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாது சுற்றில் சென்.ஜோன்ஸ் கல்லூரி''ஏ''அணி 90 ஓட்டங்களால் காலி ஜிந்தோட்ட மகாவித்தியால அணியை வீழ்த்தியது.

ஏற்கனவே இவ்விரு அணிகளும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்ட போட்டி மழை காரணமாக பாதியில் கைவிடப்பட்டிருந்தது. எனவே மீள்போட்டி காலி ஜிந்தோட்ட மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்ற ஜிந்தோட்ட மகாவித்தியால அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்.ஜோன்ஸ் 'ஏ' அணி வழமை போன்று அதிரடியில் இறங்கியது. ஆயினும் எதிர்பார்த்ததைப் போல அந்த அணியால் ஓட்டங்களை குவிக்க முடிய வில்லை. ஜிந்தோட்ட அணியின் டில்ஷான் மிகச் சிறப்பாக பந்து வீசி சென். ஜோன்ஸின் ஓட்ட எண்ணிக்கையை மட்டுப்படுத்தியதோடு, இலக்குகளையும் சரித்தார். முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அதிகளவு பந்துகளை வீணடித்து ஓட்டங்களை பெற்றதால் , இமாலய இலக்கை சென். ஜோன்ஸ் அணியால் அடைய முடியவில்லை.

மந்தமான துடுப்பாட்டத்தின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சென். ஜோன்ஸ் அணி 9 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அந்த அணி சார்பில் பிரவீன்ஸன் 77 பந்துகளை சந்தித்து 26 ஓட்டங்களையும் தேவப்பிரஸாந்த் 56 பந்துகளை எதிர் கொண்டு 15 ஓட்டங்களையும், கிஷாந்துஜன் 65 பந்துகளை சந்தித்து 36 ஓட்டங்களையும் அரன்ஸன் ஆட்டமிழக்காமல் 35 பந்துகளை எதிர் கொண்டு 28 ஓட்டங்களையும் பெற்ற னர்.

ஜிந்தோட்ட மகாவித்தியாலய அணி சார்பில் டில்ஷான் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளை யும், டி சொய்ஸா 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், பிரபாத் குமார 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

170 ஓட்டங்களை எடுத்தால் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்து விடலாம் என்ற கனவுடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜிந்தோட்ட மகாவித் தியாலய அணிக்கு பிரவீன் ஷனும், கிஷந் துஜ னும் அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். இவர்களின் அபார பந்து வீச்சின் முன்னால் நிலைத்து நின்றாட முடியாமல், ஜிந்தோட்ட மகாவித்தியால வீரர்கள் அடுத்தடுத்து ஆட்ட மிழந்து வெளியேறினர். சொந்த மைதானத்தில் ரசிகர்களின் ஆதரவுடன் விளையாடிய போதும், ஜிந்தோட்ட அணியால் சரிவில் இருந்து மீளமுடி யவில்லை. இறுதியில் 34 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஜிந்தோட்ட மகாவித்தியாலய அணி சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் 90 ஓட்டங்களால் வெற்றியீட்டிய சென். ஜோன்ஸ் கல்லூரி, இந்தத் தொடரில் அடுத்த சுற்றுக்கு முன்னே றியது.

ஜிந்தோட்ட அணி சார்பில் டில்ஷான் 18 ஓட்டங்களையும், பிரபாத்குமார 15 ஓட்டங்களையும் , மஜீத் 12 ஓட்டங்களையும், சஞ்சீவ 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் அணியின் பிரவீன்ஷன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், கிஷந்துஜன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



ஆதிசக்தி விளையாட்டுக்கழக உதைபந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை மோதவுள்ளது அணிகளின் விவரங்கள் வருமாறு -

பி.ப 3.30 மணி

ஊரெழு றோயல் வி.க. எதிர் வல்வை வி.க.

* * *

சங்கானைக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயது, 18 வயது,20 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

* * *

பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலைகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது அணிகளின் விவரங்கள் வருமாறு-

பெண்கள் பிரிவு

பி.ப 2.30 மணி

உடுவில் மகளிர் கல்லூரி அணி எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி

ஆண்கள் பிரிவு

பி.ப 3.30 மணி

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி (ங-23)

# விபுலானந்தன் வெற்றிக் கிண்ண கூடைப்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

ஆண்களுக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை யாழ். இந்துக் கல்லூரி அணி39:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 28:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை புதன்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை யாழ்.மத்திய கல்லூரி அணி 67:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

(ங-23)

# புனிதர்களின் போர் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.26

புனிதர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் சென். ஹென்றிஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டி இன்று வெள்ளிக் கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

வருடந்தோறும் நடைபெறும் இந்த புனிதர்களின் போரில் இரு பாடசாலைகளினதும் உதைபந்தாட்ட அணிகள் மோதிக்கொள்ளும் ஆட்டங்கள் ரசிகர்களுக்கு விருந்தாக அமைவதுண்டு. அந்த வகையில் சென். ஹென்றிஸ் மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் 14 வயது, 16 வயது, 18 வயது , 21 வயது ஆகிய பிரிவு அணிகளுக்கு இன்றைய சிநேக பூர்வ ஆட்டங்களும் பரபரப்பாக அமையும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

(ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ரி-20’ அணியின் உபதலைவராக மலிங்க



இலங்கை கிரிக்கெட் ‘ரி-20’ அணியின் உப தலைவராக லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் சுமார் ஒரு வருட காலத்துக்கு மாத்திரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நியூஸிலாந்துடனான ‘ரி-20’ போட்டியின் போது இலங்கை அணிக்கு அஞ்சலோ மத்தியூஸ் தலைவராகவும் உப தலைவராக லசித் மலிங்கவும் செயற்படவுள்ளனர். (5)

## கம்பீர் – சேவாக் ஜோடிக்கு மாற்று ஜோடி இல்லை

**இந்தியக் கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான சேவாக் மற்றும் கம்பீர் ஆகியோருக்கு மாற்றாக, இந்திய அணிக்கு வேறு வீரர்கள் இருக்கிறார்களா என்பதில் சந்தேகம் இருப்பதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம் கூறியுள்ளார்.**

**இது குறித்து அவர் கூறுகையில், சேவாக், கம்பீருக்கு மாற்றாக இந்தியாவிடம் வேறு வீரர்கள் இருக்கிறார்களா என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கிறது. டிராவிட், லக்ஸ்மன் ஓய்வைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியின் நடுவரிசை அனுபவமில்லாமல் உள்ளது.**

# காலநிலை எங்களின் காலை வாரிவிட்டது



**இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் தொடரில் 4 போட்டியில் பங்குபற்றி ஒரேயொரு ஆட்டத்தில் வெற்றியும், இரண்டு போட்டியில் தோல்வியும், ஒரு மழையால் கைவிடப்பட்ட ஆட்டம் என்ற முடிவையும் பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றிருக்கவில்லை.**

**இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சகலதுறை வீரரான ஜக்ஸ் கலிஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் வாய்ப்புக்கள் மழையால் இல்லாதுசெய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.**

**தங்களின் இறுதி ஆட்டத்தில் பங்குகொண்ட கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, ரைற்றன்ஸ் அணியை 99 ஓட்டங்களால் வெற்றி கொண்டிருந்தது. எனினும் அந்த வெற்றி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஏற்கனவே தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டதால் அந்த அணிக்கு உதவியிருக்கவில்லை.**

**எனினும் 4 ஆவது ஆட்டம் போல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஆரம்பத்திலேயே விளையாடியிருக்காதது வருத்தம் தருவதாகத் தெரிவித்த ஜக்ஸ் கலிஸ், 3 ஆவது ஆட்டத்திலிருந்து தாங்கள் சிறப்பாக ஆடத் தொடங்கிவிட்டதாகவும், ஆனால் 3 ஆவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட தங்களின் அரையிறுதி வாய்ப்பு பறிபோய்விட்டதாகவும் தெரிவித்தார்.**

**தொடரில் சிறப்பாகப் பிரகாசித்திருக்காவிட்டாலும், தொடரில் இறுதியாகப் பங்குபெறும் ஆட்டத்தில் மிகச்சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியமை மகிழ்ச்சி தருவதாகத் தெரிவித்த ஜக்ஸ் கலிஸ், அடுத்தாண்டு ஐ.பி.எல். தொடர் இடம்பெறும்போது அனைத்து வீரர்களும் சிறந்த திறனில் காணப்படுவார்கள் என்று நம்பிக்கை கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (5)**

# புதிய ஐ.பி.எல். அணியை வாங்கியது சன் குழுமம்

இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் புதிய அணியை, தமிழ்நாட்டைச் சேர்ந்த சன் தொலைக்காட்சிக் குழுமம் ஏலத்தின் மூலம் பெற்றுள்ளது. 5 வருடங்களுக்கு இந்த அணியை சன் தொலைக்காட்சிக் குழுமம் பெற்றுள்ளது. நேற்று நிறைவடைந்த இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்டுள்ளதன் படி ஹைதரபாத்தை அடிப்படையாகக் கொண்ட அணியை சன் தொலைக்காட்சிக் குழுமம் வருடத்துக்கு 85.05 கோடி இந்திய ரூபாக்களுக்கு (சுமார் 210 கோடி இலங்கை ரூபா) 5 வருடங்களுக்குப் பெற்றுள்ளது. 5 வருடங்களின் பின்னர் சன் குழுமம் விரும்பினால் புதுப்பித்துக்கொள்ள முடியும் என்பதோடு, அவ்வாறு புதுப்பித்துக்கொள்ள விரும்பாதுவிடில் புதிய உரிமையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹைதராபாத்தை அடிப்படையாகக் கொண்ட டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் உரிமையாளர்களான டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனத்தின் நிதி நிலை காரணமாக அந்த அணியின் வீரர்களுக்கு ஊதியங்கள் வழங்கி முடிக்கப்படாததன் காரணமாகவும், அந்த அணியை விற்பதற்கு டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனம் போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதற்காகவும் அந்த அணியின் ஐ.பி.எல். உரிமை அண்மையில் இல்லாது செய்யப்பட்டது.

இதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஏலத்தின்போதே ஹைதராபாத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமொன்றின் ஏலத்தொகையான 69.06 கோடி இந்திய ரூபாக்கள் என்ற ஏலத்தொகையைத் தாண்டி 85.05 கோடி இந்திய ரூபாக்களுக்கு ஏலத்தைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சன் தொலைக்காட்சிக் குழுமம் 20 கோடி இந்திய ரூபாக்களை ஏற்கனவே செலுத்தியுள்ளதாகவும், அத்தோடு 85 கோடி இந்திய ரூபாக்களுக்கான வங்கி உத்தரவாதத்தையும் வழங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணியில் அங்கம் வகித்த வீரர்கள் சிலரை அணியில் மீண்டும் வைத்திருக்க எதிர்பார்ப்பதாகவும், அத்தோடு புதிய அணியின் பெயர் தொடர்பான விவரங்கள் எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும் எனவும் சன் தொலைக்காட்சிக் குழுமத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(5)

# நன்றி தெரிவிக்கிறார் ரொனி கிரெய்க்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இங்கிலாந்தின் முன்னாள் தலைவர் ரொனி கிரெய்க், தனக்கு இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள ஆதரவுக்காக இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் முன்னாள் சகலதுறை வீரரான ரொனி கிரெய்க், நுரையீரல் புற்றுநோய் காரணமாக அவதிப்படுவது குறித்த செய்தி அண்மையில் வெளியாகியிருந்தது. ரொனி கிரெய்கிற்கு மூச்சுக்குழல் அழற்சி நோய் ஏற்பட்டிருப்பதாக கடந்த மே மாதத்தில் கருதப்பட்ட போதிலும், அவரது உடல் நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வந்ததன் காரணமாக மேலதிக சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது அவருக்கு புற்றுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

இலங்கையோடு நெருங்கிய தொடர்புகளைப் பேணி வரும் ரொனி கிரெய்கிற்கு புற்றுநோய் ஏற்பட்டது வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இலங்கையிலிருந்து அவருக்கு அதிகமான ஆதரவு கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்குப் பதிலளித்துள்ள ரொனி கிரெய்க், இலங்கையர்கள் ஏராளமானோரின் ஆதரவு கிடைக்கப்பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும், தனது நோயின் அறிவிப்பின் பின்னர் தனக்குக் கிடைத்த ஆதரவின் தன்மை குறித்து யாராலும் உணர முடியாது எனத் தெரிவித்தார்.

இலங்கை போன்ற கிரிக்கெட்டை விரும்பும் நாட்டிலிருந்து இவ்வாறான ஆதரவு கிடைப்பதென்பது இதயத்தின் மிகவும் விசேடமான உணர்வை வழங்குவதாகவும், அனைவரதும் ஆதரவுக்கும், பிரார்த்தனைகளுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)

# பயிற்சியாளராக பொண்ட் நியமனம்

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக நியூசிலாந்து அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் நியமிக்கப்பட்டுள்ளார். ஷேன் பொண்டின் நியமனம் தொடர்பான விவரங்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. நியூசிலாந்து அணி சார்பாக 18 டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய ஷேன் பொண்ட் 87 இலக்குகளையும், 82 ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் 147 இலக்குகளையும், ‘ரி-20’ சர்வதேசப் போட்டியில் 25 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார்.

9 வருடத்துக்கும் மேலாக நியூசிலாந்து அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்றிய ஷேன் பொண்ட், உடல் உபாதைகள் காரணமாக மிகக்குறைவான போட்டியில் மாத்திரம் பங்குபற்றியிருந்தாலும், அண்மைக்காலத்தில் உலகில் தோன்றிய மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் காணப்படுகிறார்.

2010 ஆம் ஆண்டு அனைத்து வகையான போட்டியிலிருந்தும் ஓய்வுபெற்ற ஷேன் பொண்ட், அதன் பின்னர் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அதன் விளைவாகவே அவருக்கு இந்தப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஷேன் பொண்ட், நியூசிலாந்திற்காகப் போட்டியில் பங்குபற்றியமை தனது தொழில்முறையான வாழ்வில் மிக முக்கியமான ஒன்று எனத் தெரிவித்ததோடு, கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றதும் கிரிக்கெட்டில் ஏதாவதொன்றில் ஈடுபட வேண்டும் என்பது தனது எண்ணமாக அமைந்ததாகத் தெரிவித்தார்.



புதிய பதவி மூலம் தனக்கு ஏற்கனவே பரிட்சயமான வீரர்களுடன் இணைந்து சிறப்பான பெறுபேறுகளைக் கொண்டுவர முயலவுள்ளதாகத் தெரிவித்த ஷேன் பொண்ட், நியூசிலாந்து அணியிலுள்ள வீரர்களிடம் அவர்களின் சிறப்பான பெறுபேறுகளைப் பெறுவதே தனது நோக்கம் எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்க தான் சிறந்த ஜோடி



நானும் சேவாக்கும் சேர்ந்து சராசரியாக 53 ஓட்டங்கள் எடுத்துள்ளோம். உலக கிரிக்கெட் அரங்கில் நாங்கதான் சிறந்த தொடக்க ஜோடி, என்று கம்பீர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் சேவாக், காம்பீர். இவர்களது ஆட்டம் சமீப காலமாக மோசமாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் டெஸ்ட் போட்டியில் ஒரு சதம் மட்டும் அடித்துள்ள சேவாக், சராசரியாக 37.26 ஓட்டங்கள் தான் எடுத்துள்ளார். இந்த காலகட்டத்தில் கம்பீரை எடுத்துக் கொண்டால் ஒரு சதம் கூட அடிக்கவில்லை. சராசரியாக 30.31 ஓட்டங்கள்தான் எடுத்துள்ளார். இந்த நிலையில், இவர்களுக்கு பதில் உள்ளூர் போட்டியில் அசத்தும் ஷிகர் தவான், முரளி விஜய்க்கு வாய்ப்பு அளிக்கலாம் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து கம்பீர் கூறியதாவது:

நானும், சேவாக்கும் இணைந்து தொடக்க ஜோடியாக சராசரியாக 53 ஓட்டங்கள் எடுத்துள்ளோம். உலக கிரிக்கெட் அரங்கில் இது தான் சிறந்தது என்று நினைக்கிறேன். சதம் அடிக்காததால் எனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை. ஒவ்வொரு முறையும் சதம் அடிக்க முடியாது. தொடக்க வீரராக சிறப்பாக செயல்படுவதே முக்கியம். தென்னாபிரிக்காவில் ஒரு முறை 93 ஓட்டங்கள், ஆஸ்திரேலியாவில் 85 ஓட்டங்களை எடுத்துள்ளேன். அப்போது 7 அல்லது 15 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தால் எனது சதம் பற்றி அதிகம் விவாதித்திருக்க மாட்டார்கள்.

எனது துடுப்பாட்டத்தில் குறை எதுவும் இல்லை. அப்படி குறை இருந்தால், ஒரு நாள் போட்டியில், கடந்த 24 இன்னிங்சில் 1100 ஓட்டங்களை எடுத்திருக்க முடியாது. டெஸ்ட், 'ரி-20', ஒரு நாள் போட்டி ஆகிய மூன்றும் வெவ்வேறானவை. அனைத்திலும் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவது மிகவும் கடினம்.

எனது தலைமையிலான கொல்கத்தா அணி ஐ.பி.எல். தொடரில் சாம்பியன் பட்டம் வென்றது. இதற்காக எல்லா தொடர்களிலும் வெற்றி பெற முடியாது. இங்கிலாந்துக்கு எதிரான தொடரை பழிவாங்கும் தொடர் என்று கூறுவதை ஏற்க இயலாது. ஏனெனில் கிரிக்கெட் அல்லது எந்த ஒரு விளையாட்டிலும் பழிவாங்குதல் என்ற வார்த்தைக்கு இடமில்லை. இவ்வாறு கம்பீர் கூறினார். (5)

# தொடரில் மாற்றமில்லை

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் செய்யவுள்ள பாகிஸ்தான் அணியின் திகதிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதை அடுத்தே ஏற்கனவே திட்டமிட்டபடி போட்டி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் போட்டியிலும், 2 'ரி-20' சர்வதேசப் போட்டியிலும், 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளது. இந்தத் தொடர் ஜனவரி 25 ஆம் திகதி ஆரம்பித்து மார்ச் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் பாகிஸ்தான் பிறிமியர் லீக் தொடரை நடாத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முயற்சித்துவரும் நிலையில் தென்னாபிரிக்கச் சுற்றுலா முடிந்த பின்னர் 12 நாள்கள் மாத்திரமே பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு மீதமாக உள்ளன.

அதன் பின்னர் ஏப்ரல் 3 ஆம் திகதி இந்தியன் பிறிமியர் லீக் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அந்தத் தொடரின் திகதிகளோடு பாகிஸ்தான் பிறிமியர் லீக் தொடரின் திகதிகள் முரண்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே தென்னாபிரிக்கச் சுற்றுலாவின் திகதிகளை முன்நகர்த்துமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் தென்னாபிரிக்க அணி டிசெம்பரில் நியூசிலாந்து அணியுடன் போட்டியில் பங்குபெறவுள்ள நிலையில் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியை முன்நகர்த்துவது சாத்தியப்படாது என்று தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

(5)

# பங்களாதேஷ் பயிற்றுவிப்பாளர் பதவி விலகல்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக அந்த அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகித்து வந்த றிச்சாட் பைபஸ் தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக 4 மாதங்கள் வரை பதவி வகித்த றிச்சாட் பைபஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமலேயே பதவி வகித்து வந்தார். இந்த நிலையிலேயே ஒப்பந்தம் தொடர்பான கருத்து மோதல்கள் திரும்ப ஏற்பட்டதை அடுத்து அவர் பதவி விலகியுள்ளார்.


பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகிக்குமாறு 3 தடவைகள் தன்னை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அணுகியதாகவும், முதலிரண்டு தடவைகளும் தான் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்திருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியோடு அதிக நாள்கள் செலவிட வேண்டி இருந்ததாகவும், அதற்குத் தான் தயாராக இல்லாத நிலையிலேயே அவற்றை மறுத்ததாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் மூன்றாவது தடவையாக தன்னை அணுகும் போது ஏற்கனவே கேட்டுக் கொண்டபடி 320 நாட்கள் அணியோடு இருக்கத் தேவையில்லை எனவும், இரண்டு தொடர்களுக்கு நடுவே தனது வீட்டுக்குச் சென்றுவர பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சம்மதித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தனக்கான ஒப்பந்தத்தை வழங்கும் போது தனது நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் அந்தக் கருத்து அந்த ஒப்பந்தத்தில் காணப்படவில்லை எனவும், அதன் காரணமாக ஒப்பந்தத்தை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (5)


கிராம சேவகர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
ஆசிரியர்: த.தவசேகர்
பின்வரும் இடங்களில் நடைபெற உள்ளன. உரிய இடங்களில் பதிவுகளை மேற்கொண்டு நேர அட்டவணையை பெறவும்.
* எடிசன் கல்லூரி, கிளிநொச்சி
* அம்பாள் கல்வி நிலையம் குருமன்காடு, வவுனியா
* N.L.H கல்வி நிலையம் ஆஸ்பத்திரி சந்தி, மன்னார்
* ஞானோதயா, சாவகச்சேரி
* சுப்றா - சித்தங்கேணி.
(சி/4318)(3.6)

எழும்பிப் பிரகாசி - ஏசாயா 60:1
பாராட்டி வாழ்த்துகின்றோம்
போதகர் ஜே.கே. பிலிப்
தலைமைப் போதகர்
சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்


தேவ பணியில் கடந்த 14.10.2012 அன்று நாற்பது வருடங்களை நிறைவு செய்துள்ள எமது போதகரின் இறைபணிக்காக இன்று கர்த்தருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறுவதையிட்டு நாமும் அவரை வாழ்த்துகின்றோம்.
போதகர்கள், ஊழியர், விசுவாசிகள்,
சீயோன் தேவாலயம், உடுவில் - மானிப்பாய்.

விற்பனைக்கு
M.F.240 பேகுசன் புத்தம் புதிய 5 கியர் வசதியுடனான ரக்ரர் திருகோணமலையில் விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:
(சி/4307)(3.6) 0713991049

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(15-14)

கிராம சேவகர் போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
ஆசிரியர்
த. தவசேகர்
பிரிவு I சனி 1.00 மணி தொடக்கம் 4.30 மணி வரை
பிரிவு II செவ்வாய், வியாழன் 3 மணி தொடக்கம் 5 மணி வரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(சி/4318)

G.A.Q - (யாழ்) கருத்தரங்கு
27, 28, 29 /10.2012 சனி, காலை: 9மணி
B.A. Part - I, B.A - Final (யாழ்)
G.A.Q, B.A. போதனை துரிதமீட்டல் வகுப்புக்கள்.
ஆரம்பம்: 27.10.2012 சனி காலை 9. A.m





தொடர்பு: 077 175 3838
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
58/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

English for Life
GENERAL ENGLISH
- ஆரம்ப நிலையிலிருந்து பூரண கற்கை நெறி
- சகலருக்கும் உரியது
- வார இறுதி நாட்கள் பிற்பகல் வகுப்புக்கள்
- ஆரம்பம் 28.10.2012 பிற்பகல் 2.30 மணி

விருப்புடையோர் ஆரம்பதிகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்
ஆசிரியர்
த. ந. பஞ்சாட்சரம்
மேலதிக விபரங்கட்கு:
நிர்வாகி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.